615

# ஜகன்மோகினி

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

கண்டதுமில்லை

தமிழ் நாவல் பிரசுரங்களில்

ஒரு நூதனப் புரட்சி!

இதனுள் இருக்கும் அறிவிப்பைக் கவனித்துப் படியுங்கள்.

மே 1938

வாழ்க்கையின் நாதம்
அல்லது வானக்குயில் (முடிவு)

அணா 2

புத்தகத்தைப் படித்துப்

படத்தைப் பாருங்கள்!

# அனாதைப் பெண்

இதன் முதற் பதிப்பைப் படித்துப் பரவசமடைந்தீர்கள். இம் மாதத்தில் அதைப் பேசும் படமாகப் பார்த்துக் களிக்கப் போகிறீர்கள்.

இதன் இரண்டாம் பதிப்பைத் தமிழ் நாவல் உலகில் இது வரை யாரும் வெளியிட்டிராத நூதன முறையில் படத்தில் காணும் முக்கியமான சந்தர்ப்பங்களுக்கேற்ப பல புகைப் படங்களை அழகாக அச்சிட்டு, பார்ப்பவருக்குப் பெரும் விருந்தா யிருக்கும்படிச் செய்திருக்கிறோம்.

இதனுடனிருக்கும் ஒரு படத்திலிருந்தே மற்ற படங்கள் எவ்வளவு வசிகரமாயிருக்கு மென்பதைத் தெரிந்து கொள்ள லாம்.

இதனால் நமக்குச் செலவு அதிகமாயினும், நமது அன்பர்கள் ஒவ்வொருவரும் இதை வாங்கக் கருதி, முன் விலை ரு. 1-4 தான் வைத் திருக்கிறோம்.

**உடனே, ரு. 1-4. முன் பணமனுப்பித் தபாற் செலவின்றிப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

## மகிழ்ச்சி உதயம்

இம்மாதக் கடைசியில் வெளி வரும். இரண்டிற்குமாகச் சேர்த்து ரு. **1-12** அனுப்பி, தபாற் செலவின்றிப் பெற்றுக் கொள் ளுங்கள்.

# மகத்தான ஆரம்ப விழா!

## மேமீ முதல் வாரத்தில்

| கும்பகோணம் | திருச்சி |
| --- | --- |
| டைமண்டு சினிமாவிலும் | வெல்லிங்டன் டாக்கீஸிலும் |

OFFICE OF THE REGISTRAR OF
28 JUL 1938
MADRAS

விஜயம் செய்கிறாள்

# "அனாதைப் பெண்"

**டைரக்ஷன் :— ஆர். பிரகாஷ்**

| நடிகர்கள் : | நடிகைகள் : |
| --- | --- |
| எம். கே. ராதா | டி. ஏ. சுந்தராம்பாள் |
| பி. யு. சின்னப்பா | டி. எஸ். கிருஷ்ணவேணி |
| எஸ். எம். சுப்ரமண்யம் | பி. ஆர். மங்களம் |
| எல். நாராயண ராவ் | எம். ஆர். மங்களம் |

## அனாதைப் பெண்

உங்களூர் வெள்ளித் திரையில்
விஜயம் செய்யும் நன்னாளை
எதிர்பாருங்கள்!

JUPITER PICTURES LIMITED
TIRUPUR

"அனாதைப் பெண்" பாடல்களை
ஓடியன் ரிக்கார்டில்
எதிர்பாருங்கள்!

# 2-5-38 சென்னை பாரகானில்

## மகத்தான ஆரம்பம்!

## கனவு நனவாயிற்று!

நீங்கள் கனவு கண்டுகொண்டிருந்த

## அந்தப் பெண்

சங்கித மண்டபங்களில்
உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட

கோகிலகான

# எம். எஸ். சுப்புலக்ஷ்மி

இதோ வெள்ளித் திரைக்கு

புதிய புதிய பாடல்களுடன்
பார்ப்போர் பரவசமடையும்
பாவங்களுடன்

வெற்றி முழக்கத்துடன் வருகிறாள்

# சேவா ஸதனம்

**டைரக்ஷன் :—கே. சுப்ரமண்யம், பி. ஏ., பி. எல்.**

**மோஷன் பிக்சர்ஸ் ப்ரொட்யூஸர்ஸ் கம்பைன்ஸ் லிமிடெட், ஸ்டுடியோ, மதராஸ்.**

ஒலிப்பதிவு :—ஜோதிஸ் ஸின்ஹா.

ஒளிப்பதிவு :—ஸைலேன் போஸ்.

இதர நடிகர்கள் :

எப். ஜி. நடேசய்யர்
ராம்பியாரி-கமலகுமாரி
ஜயலக்ஷ்மி
வரதாச்சார், பி. ஏ. (ஆனர்ஸ்)
சிறுமி-வரலக்ஷ்மி
திருப்புகழ் ஸீதாலக்ஷ்மி அம்மாள்
ராமசுப்பிரமணியம்

தஞ்சாவூர்-மணி அய்யர்
ஜாலி கிட்டு அய்யர்
எஸ். எஸ். மணி பாகவதர்
அம்மாஞ்சி-பட்டு அய்யர்
அத்தான் ராமசந்திர அய்யர்
ராஜம்
கமலம்

காமெடியன் ஏ. கோபால ராவ்
ராமமூர்த்தி
எம். ஆர். எஸ். மணி
கோமாளி சாம்பு
சி. வி. ஆர். சந்திரன்
ஜெயலக்ஷ்மி அம்மாள்
முதலியோர்.

மதராஸ் ஸிட்டி, திருச்சி ஜில்லா, வட ஆற்காடு ஜில்லாக்களுக்கு வினியோக உரிமை பெற்றவர்கள் :

**எம். கே. என். அண்டு ஸன்ஸ்,**

**ராயபுரம், சென்னை.**

கலா ரசிகர்களுக்கோர்
நல் விருந்து !

# "பக்தமீரா"

ஒய். வி. ராவின் டைரக்ஷன்

— நடிகர்கள் : —

ஒய். வி. ராவ்
ஒய். எச். ராவ், பி. ஏ.
வசுந்தரா தேவி
வித்வான் ஸ்ரீனிவாஸன்
எல். நாராயண ராவ்
எம். ஆர். துரைராஜ்

●

நியூடோன் ஸ்டுடியோவில் தயாரிப்பு

சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்.,

116, ராயப்பேட்டை ஹைரோடு,

போன் : 8331 சென்னை. தந்தி : காமதேனு

"பக்த மீரா"வின் கீதங்களை ஓடியன் ரிக்கார்டுகளில்
எதிர்பாருங்கள் !



ஜுபிடர்ஸ் “ பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ ” அனாதைப் பெண்

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் | பகுதான்ய ௵ சித்திரை ௴ | இதழ் |
|---|---|---|
| 15 | மே 1938 | 5 |


## திருமால் துதி

அனைத்துலகும் பாழென்றான் அன்பர்தமை நெஞ்சில்
நினைத்தருளிக் காக்கு நிமலன்—தனித்து
நோதுமல் பகைநட்பு நோயிலான் தன்போற்
பதுமத்தாள் என்னிதயப் பற்று. 1

பற்றொழித்துத் தூய பதமலரை யென்னெஞ்சில்
உற்றுத் திருந்த உதவுவான்—நற்றவர்கள்
போற்றுங் கருணையினான் பொங்கொளி யானந்த நிலை
எற்றும் இயற்குருவாம் எற்கு. 2

எற்குளதாம் நோயை யிணையிலா நல்லருளால்
முற்றும் ஒழித்தருள முன்னினான்—கற்றவர்கள்
மெச்சும் புகழானை மேதினியில் தெய்வமென
நச்சுவேற்(கு) உண்டோ நலிவு. 3

நலிவுற்ற காலத்து நான்மறையின் மேலான்
மெலிவுற்ற என்னிதய மேவிப்—பொலிவுற்றுத்
தன்னருளால் காக்குந் தகையானை நாயேனை
என்னிதயம் நீப்பல் இனி. 4

—ஸ்ரீ வீரராகவ கவி.

# நமது படங்களும், பக்திப் பரவசமும்

வி. எம். ஸ்ரீநிவாஸன், எம். ஏ.

“கடவுள் ஒருவர் ஜகஜ்ஜோதியாய் இருக்கிறார். ஞான ஒளியைப் பின்பற்று. நல்லதையே செய்வதெனக் கங்கணமணிந்து விரதம் எடுத்துக்கொள். உன் வினை உன் கையிலேயே இருக்கிறது. அந்த ஓங்கார ஸ்வரூபியை நம்பு; வேறொன்றையும் நித்தியம் என நம்பி ஏமாறாதே” என்றெல்லாம் நம் முன்னோர்களின் அறிவுச் சுடரிலிருந்து பல தத்துவங்கள் நமக்குப் பெரிய சம்பத்தாக தலைமுறை தத்துவமாக வந்திருக்கின்றன. இம்மாதிரி ஆஸ்திக புத்தியைச் சிறு வயது முதல் வளர்த்து வந்தால், வாழ்க்கையில் எவ்வித இடர்களையும் லட்சியம் செய்யாத உன்னத குணம் ஒருவனுக்கு மேன்மையளிக்கும். எப்பேர்ப்பட்ட தரித்திர நிலையிலும், எவ்வளவு கஷ்டங்களிடையிலும் அவனது மனமும், ஞானமுமே பெருத்த ஐசுவரியமாக அமைந்து, யார் குறையையும் தீர்க்கவல்ல அந்த ஸர்வேச்வரனுடைய பாதாரவிந்தத்தில் தன் பாரத்தைப் போட்டுவிட்டு, அவர் பக்தியில் ஈடுபட்டுப் பரவசமடைகிறான். “மானிட ஜன்ம மளித்தார் அவர் தன்னை வணங்க கரங்களளித்தார்” என்பதை உணர்வதே ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஆனாலும் இக்கடமையைச் சிலர் சரிவர உணர்வதில்லை. இவ்வுலகச் சுழலில் பணப்பேய்க்கும், மற்ற அந்தகாரத்திற்கும் அடிமையாகி வாழ்க்கைக்கே உயிர் நிலையாகிய அப்பரம்பொருளிடத்தில் பக்தியை அந்திய காலம்வரை செலுத்தாது கடைசி நிமிடத்தில் வருந்துகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கும் நினைத்தது முதற் கொண்டே அப் பக்திப் பெருக்கை விருத்தி செய்வதற்காகவே நம் முன்னோர்கள் பல வழிகளைக் கையாள வாரம்பித்தனர்.

வெறும் உபதேசம் செய்தால் அது புத்தியில் சிலருக்கு நிலைத்து நிற்காதென்று, கதைகளைக் கையாண்டு அவைகளின் மூலம் நீதிகளைப் புகட்டி, நாஸ்திகனையும் ஆஸ்திக முறையில் திருப்ப முயன்றார்கள். காதால் கேட்டு மனதில் பதிய வைப்பதைவிட, நாடகமாக நடித்தால் பார்த்தும் கேட்டும் நன்கு வேரூன்றும் வண்ணம் கொள்கைகளைப் பரவச் செய்ய முடியுமென்றுதான் நாடகங்களும், தெருக் கூத்துக்களும் பரவ வாரம்பித்தன. ஒரு மஹா பக்தனின் சரித்திரத்தையோ, அல்லது பகவானின் திவ்ய திருவிளையாடல்களில் ஒன்றையோ நன்கு நடித்துப் பார்க்கையில், தானாக பக்தி ரஸம் வளரும் என்பதே கருத்து.

அவ்வுயரிய எண்ணத்துடனேதான் படங்களிலும் முதலில் புராணங்களும், பக்தர்களின் சரிதைகளும் வெளிவரத் தலைப்பட்டன. ஆனால், எதிர்பார்த்ததற்கு நேர் மாறான பலனே உண்டாகும் போன்ற பயமே இப்போது தென்படவாரம்பித்துவிட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
23022

"இவனா கிருஷ்ணன்? பெருமாள் இவர்தானா? லக்ஷ்மி இவ்வளவு குரூபியா? எப்படி மனதில் அந்தப் பகவானையும், இவர்கள் வேஷத்தையும் ஒத்திட முடியும் என்றெல்லாம் கேட்கும் வண்ணம் படங்கள் வெளி வருகின்றன. 'பக்தன் என்றால், இப்படிதானா இருந்திருப்பான்' என்று சந்தேகிக்கும் வண்ணம் படங்கள் வெளி வருகின்றன. பகவான் சோதனைக்காகப் பல துஷ் கிருத்தியங்களைச் செய்து பின் திருந்தி மக்களுக்கு உதாரணமாக அமையும் வண்ணம் ஒரு பக்தனின் வாழ்வை அமைத்தால், நம் படங்களில் அந்தத் துஷ்கிருத்தியங்களுக்கே முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டு, அவன் திருந்தி பக்தியிலீடுபட்டுப் பரவச மடைவதை நன்கு சித்தரித்து (மக்களுக்கு ஆஸ்திகத்தில் நம்பிக்கையை உண்டு பண்ணுவதில் சிரத்தை) காட்டுவதில்லை. உதாரணமாக, தெய்வ பக்தி யென்பது, படத்தைப் பார்த்து அதிலிருந்து விருத்தியாகும்படி நம் பாஷையில் வெளிவந்துள்ள படங்கள் மிகவும் குறைவு, அல்லது ஒன்றுமேயில்லை யென்றே சொல்லலாம். குசேலர் சிறிது பக்திப் பரவசத்துடன் காண்கிறார். கண்களை யிழந்தபின், பில்வமங்கள் பக்திப் பெருக்கில் ஆனந்தத் தாண்டவமாடுகிறான்.

இந்திய கலைக்கே பெருமை யளித்துப் பக்திரஸத்தைப் பரவச் செய்யும் படங்கள் நம் நாட்டில் இரண்டே உள்ளன. பிரபாத் "மஹாத்மா"வைப் பார்த்துவிட்டு வெளிவருபவன் என்ன ஆனந்த ஹிருதயத்துடன் வெளி வருகிறான்! மெய்ப் மறந்து பக்திப் பெருக்கில் லயித்த தேவகானம்போன்ற பஜனைகள் எங்ஙனம் காதிலேயே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. எப்படி அவைகள் நம் அந்தரங்கத்துள் ஊடுருவிப் பாய்ந்து நம்மைப் பரவசமடையச் செய்கின்றன! "பகவான் ஒருவன் உண்டு. கல், மண், மிருகம், மனிதன் யாவும் அவன் சிருஷ்டி. உயர் ஜாதி, கீழ் ஜாதி யென்பது பிறப்பினால் அல்ல; ஆனால் கிருத்தியங்களினால்தான். எவன் உண்மையில் தன் பக்தியில் ஈடுபட்டு அதையே தன் வாழ்வின் ஜீவாதாரமாகக் கொண்டு பரவசமடைகின்றானோ அவனுக்கு என்றும் முக்தியளிக்க பகவான் காத்திருக்கிறார்" என்பது போன்ற பல தத்துவங்கள் தானாக நம் மனதில் எழுகின்றன அல்லவா! நாம் அப்படத்தைப் பார்க்கையில்?

மற்றொன்று, துகாராம். பாஷை தெரிந்தவன் எவனும் அப் படத்தைப் பார்க்கையில் தானே துகாராமாக மாறி விடுகிறான். பக்திப் பரவசமடைகிறான். படம் முடிந்து வெளியில் வருகையில் கூட, "பாண்டு ரங்கா" என்கிறான். பஜனை கோஷம் காதிலேயே ரீங்காரம் செய்கிறது.

எடுத்தால் மேற்சொன்ன பிரபாத் படங்களைப்போல எடுக்க வேண்டும். கலைக்குத் தொண்டு செய்ய வேண்டும். பக்திரஸத்தையும் பரவச் செய்ய வேண்டும். இதற்கு முக்கியமானது கதையைப் படம் பிடிப்புக்குச் சரியாக ஜீவகளை குன்றாது அமைத்துக் கொள்வதிலும், கதா பாத்திரங்களுக்குக் கூடியவரை ரொம்பவும் பொருத்தமானவர்களை மிகவும் சிரமப்பட்டுத் தேர்ந்தெடுப்பதுதான். இவ்விரண்டையும் ஏற்பாடு செய்தபிறகு, வசனங்களையும், சமயத்திற் கேற்றவாறு உயர்ந்த ஸாஹித்தியம் கொண்ட சங்கீதத்தையும் கதைக்குச் சோபையளிக்கும் வண்ணம் அமைத்தல் வேண்டும். இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்தால் லட்சியம் கைகூடும். இவைகளை ஒன்று சேர்த்து அமைக்க முடியவில்லையென்றால், ஆபாஸமாகப் படங்களைப் பிடித்துப் படக் கலைக்கும், ஆஸ்திகத்துக்கும் பங்கம் விளைவிப்பதைவிட, சமூக சீர்திருத்த வழியில் வேறு படங்கள் பிடிக்க வழி செய்யட்டும். ராமனையும் கிருஷ்ணனையும் இழிவுபடுத்திச் சாதுவான சாதாரண பக்தனைக் கெடுக்க வேண்டாம் என்பதே எனது வேண்டுகோள்.

---

# தேர்தல்கள்

எம். ஸி. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்.

'காங்கிரஸே இந்தியா, காங்கிரஸே தேசம்' என்று தற்சமயம் இந்தியா முழுவதும் தெரிந்த விஷயம். பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் அதை நன்கு அறிந்துகொண்டே காங்கிரஸை அரசாளவிட்டிருக்கிறார்கள். வெள்ளையர்கள் அதுவும் ஆங்கிலேயர்கள் நன்றாய்ப் படித்தவர்கள். ரொம்ப தந்திரசாலிகள். ராஜ தந்திரத்தில் நிகரில்லாதவர்கள். நாகரிகத்தின் உன்னத ஸ்திதியைப் பார்த்தவர்கள். எங்கேனும் சிறிது பலக்குறைவேற்பட்டாலும் ஆங்கிலேயர்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்பவர்கள். அவர்களே காங்கிரஸ் பலத்தை அறிந்து கொண்டிருக்கிறார்களென்று இப்பொழுது வெளிப்படையாகத் தெரிகிறது.

காங்கிரஸினிடம் என் இவ்வளவு விச்வாஸம் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்று ராஜாங்க நீதியை நன்கறிந்த ஆங்கில நிபுணர்கள் ஊக்கத்துடன் கவனிக்கிறார்கள். அதற்கு நாம் கண்மூடிக்கொண்டு மகாத்மா காந்தியால்தான் இந்தியாவும் காங்கிரசும் உலகத்தாரால் போற்றப்பட்டு வருகிறதென்று சொல்லுவோம். ஜனங்களின் ஊக்கம் அதிகமாகியிருக்கலாம்; உலகப்போக்கையும்

வெளிநாடுகளில் நடந்துகொண்டிருக்கும் இயக்கங்களையும் பத்திரிகைகள் மூலமாகவும் பிரசாரம் செய்வோர்களின் வாயிலாகவும் இந்திய மக்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் இதற்கெல்லாம் முக்கிய காரணம், காந்திஜியின் விடாமுயற்சியும் சத்தியாக்ரஹப் பொருமேதான். இதை எதிர்த்துச் சொல்லுபவர்கள் தேசபக்தர்களாகமாட்டார்கள். ஒரு தடிகூட இல்லாமல் கேவலம் ஆத்மசக்தி ஒன்றினாலேயே பதினெட்டு வருடத்திற்குள் ஒரு பெரிய தேசத்தை சுயாட்சிக்குத் தயார் செய்தது சத்யாக்ரஹ இயக்கம். நாம் இனி போர் புரிய வேண்டுமானால், சத்யாக்ரஹத்தைத்தான் கையாள வேண்டும். அதன் அவசியத்தை நம்பாதவர்கள் மிகவும் சிறிய தொகையே. ஜெர்மனியில் ஹிட்லரும், இத்தாலியில் முஸோலினியும், ரஷியாவில் ஸ்டாலினும் ஆயுத பலத்தாலும் சைனியங்களாலும் வெடி குண்டுகளாலும் தங்கள் தங்கள் தேசங்களைப் பலப்படுத்தப் பார்ப்பதுபோல், காந்திஜியும் நமது தேசத்தைச் சத்யாக்ரஹத்தால், ஒற்றுமைப்படுத்திப் பலப்படுத்த முயற்சி செய்துகொண்டு வருகிறார்.

இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸின் முக்கிய கடமை வேலை செய்பவர்களைச் சரியானபடி தேர்ந்தெடுப்பதே. முனிசிபல் தேர்தல்களை எடுத்துக்கொள்வோம். அதில் உண்மையான சத்யாக்ரஹிகளையே தேர்ந்தெடுப்பது அவசியம். யார் சத்யாக்ரஹியென்று பலமுறை காந்திஜி எடுத்துக் கூறியிருக்கிறார். அம்மாதிரி உழைப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். எதிலும் அனுபவம், அனுதாபம், சுய புத்தி இவைகளிருப்பவர்களைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். அம்மாதிரி முனிசிபல் தேர்தல்களிலும் உண்மை உழைப்பாளிகள்தான் முன் வரவேண்டும். தற்சமயம் காங்கிரஸ் அரசாளுகிறதென்று யாரும் இக்கக்ஷியில் சேர்ந்துவிடலாம். அதுவும் பணக்காரர்களும், பதவி வேட்டைக்காரர்களும் தங்களது நோக்கங்களைச் சாதித்துக் கொள்வதற்கென்று ஒரு நான்கணா கட்டி விட்டுக் காங்கிரஸில் சேர்ந்து விடுகிறார்கள். அவர்களுக்குத் தகுந்தபடி தாளம்போடும் ஆசாமிகளும் சிலர் கிடைக்கிறார்கள். அவர்களைப் புகழவும் போற்றவும் முன் வந்து உண்மை உழைப்பாளிகளை முன்னுக்கு வரவொட்டாமல் தடுக்கிறார்கள். இதனால் தேச முன்னேற்றம் கெட்டுப்போக வழியேற்படுகிறது.

திருநெல்வேலி ஜில்லா போர்டு தேர்தலில் ஆரம்பித்த ஊழல் எவ்வளவு தூரம் பெருகிப்போய் இன்று சென்னையிலும் தாண்டவம் புரிகிறதென்பதே போதுமானது. காந்தியின் கொள்கைகளை முழு நம்பிக்கையுடன் அநுஷ்டிக்க இயலாதவர்களின் கையில் அதிகாரத்தைவிட்டு விட்டால், குரங்கின் கைப் பூமாலையேயாகிவிடும்.

ஆகவே உண்மை சத்யாக்கிரஹிகள்தான் இத் துறையிலும் பொதுஜன சேவை செய்ய வரவேண்டும். ஒரே நாளில் ஒருவனும் சத்யாக்ரஹி ஆகிவிட முடியாது. பல வருடங்கள் உழைத்துக் கஷ்டப்பட்டுப் பல துன்பங்களிடையில் வெற்றி பெற்றவனே காந்திஜியின் திட்டத்தில் வேலைசெய்ய முடியும். கண்டவர்களையும் திருப்தி செய்ய வேணுமென்ற நோக்கத்துடன் மாத்திரம் காங்கிரஸில் சேர்த்துக் கொண்டு, பின்பு அபவாதமேற்படும்போது திண்டாடுவதைக் காட்டிலும் உண்மைத் தொண்டர்களையே பொறுக்கி, தேச சேவைக்கு எடுத்துக் கொள்வது உசிதம்.

---

# மே தினம்

எஸ். சுந்தர ராஜன், பி. ஏ. (ஹானர்ஸ்)

ஐரோப்பா வெங்கும் தொழிலாளிகள் மேதினம் என்று வெகு விமர்சையாகவும் பெரிய பண்டிகையாகவும் கொண்டாடுகிறார்கள். அன்று தொழிலாளர்கள் ஏராளமாகக் கூட்டம் கூடுவார்கள். உழைப்பால் சம்பாதிக்கும் பணமே உண்மை சம்பாத்தியம் என்ற மேன்மையான எண்ணத்தை இக்கூட்டங்களில் காணலாம். அபேத வாதிகளின் முக்கியமான மந்திரம் என்னவென்றால், "உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்." அதைப் பிரசாரப்படுத்தவே மேதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவிலும் சில வருடங்களாக இந்தத் தினத்தைத் தொழிலாளிகள் கொண்டாடுகிறார். ஜமீன்தார்களும், பெரிய முதலாளிகளும் அரசாங்கத்தைக் கைக்கொண்டிருந்தால், இந்தத் தினக் கொண்டாட்டம் அரசாங்க விரோதமான நடத்தையாகக் கருதப்படுகிறது.

இந்த மேதினத்தின் ஆரம்பம் மிகவும் வேடிக்கையானது. முதல் முதலில் இங்கிலாந்தில் பதினாறும் நூற்றாண்டுவரையில் மேதினத்தன்று ஜனங்கள் அதிகாலையிலெழுந்திருந்து மரக் கிளைகளையும் புஷ்பக் கொத்துக்களையும் எடுத்துக்கொண்டு ஊர்வலம் வந்துகொண்டிருந்தார்கள். ஊர்வலத்தின் நடுவில் அழகாகச் சிங்காரிக்கப்பட்ட ஓர் நீண்ட கழியையும் எடுத்துச் செல்வார்கள். இந்தக் கொண்டாட்டத்தை முற்போக்குள்ள கிருஸ்தவர்கள் ஆமோதிக்கவில்லை. ஏனெனில், இது மத சம்பந்தமானதாகத் தென்பட்டது. முதன் முதலில் கிராமத்திற்கு வெளியில் ஒரு மரத்திற்கு 'மே மரம்' என்று பெயரிட்டு அதை மேதினத்தன்று வெட்டி விடுவார்கள். அடுத்தபடியாக மரக் கிளையை வெட்டி ஊர்வலமும்,

அதற்கடுத்தாற்போல வெறும் கழியையும் வைத்துக் கொண்டார்கள். இங்கிலாந்தில் இக்கழியைச் சாச்வதமாக வைத்துக் கொண்டார்கள். "பவேரியா" நகரத்தில் 4, 5 வருடத்திற்கொருமுறை கழியை மாற்றுவார்கள். அக் காலத்தில் இதைக் கொண்டாடியதன் முக்கிய காரணம் செடிகளும், மரங்களும் ஆடு மாடுகளும் விருத்தி யடைவதன் பொருட்டுக் கடவுளை நோக்கிப் பொது ஜனங்கள் செய்து வந்த மகோத்ஸவமென்றே சொல்ல வேண்டும்.

தற்காலங்களில் மேதினம் வேறு காரணத்திற்காகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதைத் தொழிலாளிகள் தினமென்றே கொண்டாடுகிறார்கள். முதல் முதல் 1833-ம் வருடம் ராபர்ட் ஓவன் என்ற தொழிலாளர் இப் பண்டிகையைத் தொழிலாளர்கள் பண்டிகையாகக் கொண்டாடினதாகத் தெரிகிறது. பிறகு 1899-ம் வருடம் பாரிஸ் நகரத்தில் உலகத் தொழிலாளர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மே மாதம் முதல் தேதியை உலகத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தீர்மானித்தார்கள். தொழிலாளிகள் மேதினத்தன்று விடுமுறை கேட்பதும் அதனால் கலகங்கள் உண்டாடுவதுமாக விருந்தது. இப்பொழுதும் மேதினத்தன்று எல்லாத் தேசங்களிலும் போலீஸ் பாதுகாப்பு ஏராளமாக விருக்கும்.

இங்கிலாந்தில் மேமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று இந்தத் தினத்தை ஹைட்பார்க்கில் கொண்டாடுகிறார்கள். அமெரிக்காவிலும், கனடாவிலும் தொழிலாளர்கள் தினம் செப்டம்பர் மாதம் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டு நடந்து வருகிறது. ரஷியாவில்தான் இந்தத் தினம் மிகவும் கோர்த்தியாகவும், தேசியப் பண்டிகையாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஹிட்லர் ஜெர்மனியை அரசாள ஆரம்பித்தது முதல், மேதினத்திற்குப் பிராதான்யம் கொடுத்து வருகிறார். அவரே தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசுகிறார்.

இக்கொண்டாட்டம் நடைபெறுவதில் ஐரோப்பிய தேசங்களுக்கும், அமெரிக்காவிற்கும் சிறிய வித்தியாசம் காணப்படுகிறது. ஐரோப்பாவில் தொழிலாளர்கள் மட்டுமே இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். அமெரிக்காவிலோ எல்லா ஜனங்களும் இதில் கலந்துகொள்கிறார்கள். அன்று எல்லாத் தொழிற்சாலைகளையும் மூடிவிடுவார்கள்; கடைகளும் மூடப்பட்டுவிடும். அனேக பொதுக் கூட்டங்கள் நடைபெறும். ஜனங்கள் ஊர்வலமாக வருவார்கள்.

நம் நாட்டிலும் தொழிலாளர்கள் ஒற்றுமையடைய இத் தினத்தை அவசியம் கொண்டாடவேண்டும். தொழிலின்

மேன்மை உலகம் முழுவதும் ஒன்றே யாதலால், படித்தவர்களெல்லாம் வித்தியாசத்தை யொழித்து ஒற்றுமைப்படுவதுபோல், தொழிலாளிகளெல்லாம் உலகத்தில் ஒத்திருந்தால், பல நன்மைகள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

---

## ஜோஸ்யம் பலிக்குமா ?

---

### மே மாதத்தில் ஐரோப்பிய யுத்தம்

ஹங்கேரி தேசத்து மாதான, போரிஸ்கா சில்பிகர் ஐரோப்பிய அரசியல் குழப்பம் மே மாதத்தில் ஒரு உச்ச நிலையை அடையுமென்றும், இதன் விளைவாக ஒரு பெரும் போர் மூண்டு அது 1942 வரை நடக்குமென்றும் கூறியுள்ளார்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் காலமாவார் என்பது, வின்ட்ஸர் கோமகன் ராஜிநாமா, இத்தாலி-அபிஸீனியா யுத்தம், இன்னும் இது போன்ற பல விஷயங்கள் சம்பந்தமாக இவர் குறி கூறியது பலித்திருக்கிறது.


கற்பனை சித்திரம் !
காதல் களஞ்சியம் !

**மந்தாகினி**

காதல், சோகம், உண்மைத் தேசப்பணி, தியாக வாழ்வு முதலியவற்றை நன்கு விளக்கிக் காட்டும் அருமையான நாவல்.

வை. மு. கோதைநாயகி அம்மாள் முன்னுரையுடன்

விலை அணா 8

வத்ஸலா கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

திரு. ராகவாசாரியர்
இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| துருவ வெண்பா | 0 | 8 |
| சம்பு ராமாயணம் | 0 | 10 |
| நீதி மஞ்சரி | 0 | 5 |
| திருமால் வெண்பா | 0 | 3 |
| சிவபிரான் துதி | 0 | 4 |
| ராஜ ராஜேச்வரி | (அச்சில்) | |

ரூ. 1—8 முன்பணமனுப்புவோருக்கு 5 புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

ஜகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

# சென்னை மாகாண இரண்டாவது சினிமா மகாநாடு

சென்ற ஏப்ரல் 16, 17, 18 தேதிகளில் கோவை எடிசன்ஸ் தியேட்டரில் சென்னை மாகாண இரண்டாவது சினிமா மகாநாடு நடைபெற்றது.

## வரவேற்புக் கமிட்டித் தலைவர்

திவான்பகதூர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியாரின் பிரசங்கசாரம்:—
"கோயம்புத்தூர், சினிமா கைத்தொழில் அபிவிருத்தியில் இந்த மகாணத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் பங்கு அதிகம்; அதற்காக நான் பெருமை அடைகிறேன். சில முக்கிய தமிழ்ப் படங்கள் இங்கே உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. நம்நாட்டில் சினிமா கைத்தொழில் எதிர் காலத்தில் விருத்தியாகுமென்பதற்கு வேண்டிய அறிகுறிகளிருக்கின்றன. இந்த மகாநாட்டில் கைத்தொழிலின் அபிவிருத்தி முறைகளைப்பற்றி நீங்கள் பேசுவீர்கள். முக்கியமாக பிலிம்களின் குணத்தை உன்னதப்படுத்த வேண்டியது, இந்த மாகாணத்தின் முக்கிய வேலை. நாம் செலவு செய்யும் பணத்தைக் கவனிக்கும்பொழுது பிலிம்கள் அவ்வளவு நன்றாகவில்லை. கேவல முறையிலிருக்கும் ஹாஸ்யங்கள் முதலியவைகளை நமது தமிழ், தெலுங்கு படங்களிலிருந்து விலக்க வேண்டும். பொது ஜனங்கள் விரும்புகிறார்களென்று இவைகள் செய்யப்படுகின்றன. பொது ஜனங்கள் அவ்வளவு கேவல நிலைமையை அடைந்து விட்டார்களென்று நான் கூற முடியாது. இதில் நமது பொறுப்புத்தான் முக்கியம்.

"படங்கள் தயாரிக்கும் விஞ்ஞான முறையும் சரியாகவில்லை. சரியான டைரெக்டர்களை அமர்த்த வேண்டும். நமக்கு டைரெக்டர்கள் வடக்கேயிருந்து வரவேண்டி யிருக்கிறது. இதனால் நமக்கு கஷ்டங்களேற்படுகின்றன. நம்மவர்களுள் போதுமான அறிவுடைய இளைஞர்களை இந்த வேலைக்குத் தயார் செய்யக்கூடும்.

"புராண கதைகளை ஒட்டிய படங்களை ஜனங்கள் விரும்புவதுடன் கூட நமது தற்கால சமூக வாழ்க்கையை ஒட்டிய படங்களை ஜனங்கள் அதிகமாகக் கோருகிறார்களென்று கூறமுடியும். ஆனால், இது விஷயத்தில் படம் தயார் செய்பவர் ஜாக்கிரதையாக விருக்க வேண்டும்.

"சில படங்கள் வாழ்க்கை உண்மைக்கு விரோதமாகவிருக்கின்றன. நமது நடிகர்கள் நமது வாழ்க்கைக்கு அன்னியதான உடைகள் அணிந்து படங்களையே கெடுத்து விடுகிறார்கள். இதை யெல்லாம் உடனே நாம் மாற்ற வேண்டும்.

"கவர்ன்மெண்டிடமிருந்து நமக்கு அநுதாபமும், ஒற்றுமையும் கிடைக்கும் பக்ஷத்தில் இந்தக் கைத்தொழில் அதிக உன்னத நிலைமையை அடையும். சினிமா மூலம் அறிவைப் பரப்பவும் அறியாமையை ஒழிக்கவும் சக்தி இருக்கிறதென்பது இன்னும் இந்தத் தேசத்தில் உணரப் படவில்லை. மாகாண கவர்ன்மெண்டுகள் சினிமா மூலம் சுகாதாரம், முதலிய விஷயங்களில் அறிவை ஜனங்களுக்குப் புகட்டலாம்" எனக் கூறி, மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி ஸ்ரீ கோதைநாயகி அம்மாளைக் கேட்டுக்கொண்டார்.

## ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளின் திறப்புரை

"இம் மகாநாடு மற்ற மகாநாடுகளைப்போல் தீர்மானங்கள் செய்து விட்டுச் சும்மா இராமல் அவைகளை அமுலுக்குக் கொண்டுவர முயற்சி செய்யுமென்று எதிர்பார்க்கிறேன். காங்கிரஸ் மகாசபை 50 வருஷங்களுக்கு முன்பு ஓர் சிறிய ஸ்தாபனமாக ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது ஓர் மகத்தான ஸ்தாபனமாக வளர்ந்து விட்டது. அதே மாதிரி இந்த மகாநாடும் வளர்ந்து சினிமா கைத்தொழிலைத் தேசத்தில் பரவச் செய்யுமென்று நம்புகிறேன். ஆகையால், இம்மாதிரி மகாநாடுகளின் பிரயோஜனம் அதிகமில்லையென்று கூறமுடியாது. படம் தயாரிப்பவர், நடிகர்கள், டைரக்டர்கள், பட்டுவாடா செய்பவர், பொது ஜனங்கள் முதலியோருக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும். மேல் நாடுகளில் சினிமா மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் இன்னும் இது பின்னணியிலிருக்கிறது. கவர்ன்மெண்டார் முன் வந்து ஒத்தாசை அளித்தால், பொது ஜனங்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்படும். ஸ்தல ஸ்தாபனங்களும் படம் தயாரிப்பதில் உதவி அளிக்க வேண்டும்.

"டைரெக்டர்கள் நடிகர்களைச் சரியாக நடத்த வேண்டும். ஸ்திரீகளுக்காக வேஷம் போட்டுக் கொடுக்க ஸ்திரீகள் தொழிலில் அமர்த்தப் படவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் மூலம் பொது ஜனங்கள் படங்களின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் சினிமா கைத்தொழில் நமது தேசத்தில் திருத்தப்பட்டு மென்மேலும் விருத்தி அடையக்கூடும் என்று கூறினார்."

## டி. ஆர். சுந்தரம் பி. ஏ. பி எஸ் ஸி., (லீட்ஸ்) அவர்களின் தலைமையுரை

"சினிமாத் தொழிலின் பல வேறு பிரச்னைகளைக் குறித்து ஆலோசித்து அதன் முன்னேற்றத்துக்கான வழிகளைத் தேட நாம் இப்போது இரண்டாவது முறையாகக் கூடுகிறோம்.

கடந்த ஒரு வருஷத்தில் இந்தத் தொழில் சம்பந்தமானதும், அரசியல் சம்பந்தமானதுமாக அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல் விஷயத்தை என் குறிக்கிறேனென்றால், தொழிலின் முன்னேற்றத்தில் நாட்டின் சர்க்காரும் ஒரு முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

"நண்பர்களே! இந்த சந்தர்ப்பத்தில் மேல் நாடுகளில் எப்படி இந்தத் தொழிலை தேசீய நிர்மாண வேலைகளில் ஒன்றாகச் சேர்த்து வளர்த்து முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள் என்ற விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொழிலில் எந்த அம்சத்தில் வேண்டுமானாலும் உதவி செய்ய சர்க்கார் காத்துக்கொண்டிருக்கிறது. ஹாலிவுட் ரகத்தையும், தொழில் மேன்மையையும்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஏனெனில், அவர்களுக்கும் நமக்கும் வெகுதூரம்.

"ஆனாலும் இன்னும் சமீபத்தில் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் சர்க்கார் சரியான வழியில் வளர்த்து அபிவிருத்தி செய்ய சகல உதவிகளையும் செய்கின்றனர். ரஷ்யாவில் சர்க்கார் சர்வ கலாசாலைப் படிப்பின் மூலம் விருத்தி செய்கின்றனர். இன்று ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தொழிலில் முன்னேறி நிற்பதற்குக் காரணம் நாட்டு சர்க்கார் ஒத்தாசைசால். இந்தச் சர்க்கார்கள் சினிமாவின் பூர்ண சக்தியையும், பிரசார மதிப்பையும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அதுபோலவே இங்கிலாந்தும் மற்ற நாடுகளைப் பின்பற்றி ஹாலிவுட் வர்த்தகத்துடன் போட்டி போடுகிறது. மேலும் அந்த நாடு பலவித காப்புச் சட்டங்கள் மூலம் தன் தொழிலைப் பாதுகாத்துக் கொள்ளுகிறது.

"நம்முடைய நாட்டில் இப்போது மூன்றுவகையான படத்தயாரிப்புகள் இருக்கின்றன என்று சொல்லலாம். கல்கத்தா படங்கள், பம்பாய் படங்கள், தென்னிந்திய படங்கள். கல்கத்தாவிலிருந்து சில படங்கள் வெளி வந்திருக்கின்றன. பம்பாயிலிருந்து சில உயர் ரகப் படங்கள் வந்திருக்கின்றன. சென்னையிலோ விசேஷமாக உயர் ரகப்படம் ஒன்றும் தயாரிக்கப்படவில்லை. நாமும் வெகு நாள் வரையில் காட்டப்படும் சில படங்களைப் பிடித்திருக்கிறோம். ஆனாலும் நம்முடைய படங்களின் வருங்கால வெற்றியையே அவை குறிக்கின்றன. இந்தமாதிரியான வெற்றிக்குச் சர்க்கார் ஒத்தாசை அவசியம் வேண்டும். இந்தத் தொழிலின் முக்கியத்தைச் சர்க்கார் உணரவேண்டும்; நேர் முகமாகவோ மறை முகமாகவோ வருஷம் ரூ. 25 லக்ஷம் வரையில் சர்க்கார் பெட்டிக்குள் போகிறது. ஆனால், தம்படிகூட இத்தொழில் சம்பந்தமாகச் சர்க்காரால் செலவழிக்கப்படுவதில்லை.

மறை முகமாகப் பத்திரிகைகளும், ரயில்வேக்களும், நகர சபைகளும், நேர் முகமாக முப்பதினாயிரம் ஜனங்களும் இந்தத் தொழிலிலே கலந்து கொள்ளுகின்றனர்; ஆனாலும் இது சர்க்கார் நேர் கவனத்தில் இன்னும் வரவில்லை. சர்க்கார் வெளியிலிருந்து வரும் உற்பத்திப் பொருள்களின் மேலுள்ள வரியைக் குறைக்கவேண்டும். அதற்குப் பதில் வெளியிலிருந்து இறக்குமதியாகும் அன்னியப் படங்களின் மேல் வரியை ஏற்றலாம். இதன் மூலம் தயாரிப்புச் செலவைக் குறைக்கலாம்.

நாம் நம்மிடையே ஒத்துழைக்கவேண்டியது அத்தியாவசியம். தென்னிந்திய பட முதலாளிகள் தங்களுடைய பிரச்னைகளை அலசி ஆராய வேண்டும்.

முதலில் அவசியமான தேவை, தகுதியுள்ள தொழிலாளிகள்தான். இப்போதும் தென்னிந்தியாவில் டஜன் ஸ்டுடியோக்கள் இருக்க, வெளி மாகாணங்களுக்குப் படம் பிடிக்கப்போவது குறையவில்லை. இதற்குக் காரணம் அன்னிய மாகாணங்களில் படம் சுத்தமாகப் பிடிக்கப்படுகிறது என்ற எண்ணம்தான். இந்தக் குறையை நிவர்த்திக்க திறமைசாலியான. தொழிலாளிகள் பயிற்சி பெற்று வரவேண்டும்.

நடிகர் பொறுக்குவதிலும், கதைகள் விஷயத்திலும் நம்மிடையே காணப்படும் போட்டியை நிறுத்தவேண்டும். படம் பார்ப்பது சாதாரணமாகப் பொழுது போக்குக்காகத்தான். ஆகவே, ஒரே கதையைத் திரும்பவும் எடுப்பதில் லாபமேயில்லை.

தொழிலின் சில பிரச்னைகளை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவைகளைத் தீர்ப்பது பின்னால் வழியைச் சரிப்படுத்துவதாகும். இந்த விஷயத்தில் சினிமோடாகிராப் அசோசியேஷன் முன் வந்திருப்பது பாராட்டத்தக்கது. ஆனால், நாமும் அச்சங்கத்தில் சேர்ந்து உற்சாகத்துடன் உழைத்தாலன்றி, வெறும் சங்கம் மட்டும் ஒன்றையும் சாதித்து விட முடியாது."

---

# அனாதைப் பெண்

எடிட்டிங் அறையிலிருந்து வெளிக் கிளம்பிவிட்டாள். மே மாதம் இரண்டாவது வாரத்தில் தமிழ் நாட்டில் பல ஊர்களில் விஜயம் செய்ய ஆரம்பித்து விடுவாள். எங்கும் இவளது வரவை பொது மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

# அனாதைப் பெண்

## டாக்கி கதைச் சுருக்கம்

இந்திராணி ஒரு அனாதைப் பெண். உற்றார் உறவினர் யாருமில்லை. இந்திராணிக்கு நிகரான வனப்புடன் அவள் விளங்கினாள். இந்தப் பரந்த உலகில் அவளது தள்ளாடும் பாட்டியைத் தவிர அவளுக்கு உதவி வேறு யாருமில்லை. ஒரு தாசில்தார் வீட்டில் வேலை செய்து வந்தாள் அந்தக் கிழவி.

**ஆறுதல்** :—அனாதைப் பெண்ணுக்கு நெஞ்சு ஆறுதலுக்கு ஒரே ஒரு இடமிருந்தது. அதுதான் அவளுடைய அளவிட முடியா அன்புக்குப் பாத்திரமான அவளது காதலன் துரைராஜா. அவன் ஹாக்கி விளையாடுவதில் நிபுணன். ஆனால், எல்லாவற்றையும் விட அவனுக்குப் பிரியமானது இந்திராணியுடன் ஒரு நிமிடமாவது சல்லாபித்துப் பேசுவதுதான்.

**தீய நெஞ்சம்**:—அன்று காலையில் குளத்தங்கரையில் துரைராஜா, தன் காதலியை வழக்கம்போல் சந்தித்துப் பேசிவிட்டுப் போகிறான். இந்தச் சம்பவத்தை மறைவிலிருந்து இரு பொறாமைக் கண்கள் பார்க்கின்றன. தண்டபாணி தாசில்தாரின் செல்வப் புதல்வன். காமப் பேய்ப் பிடித்தவன். அதோடு மூர்க்கத்தனத்தின் உரு. இவன் கண்ணில் இந்திராணி பட்டால் சும்மாயிருப்பானா? ஆனால், இவனுடைய முயற்சிகள் அவ்வளவும் அவளுக்கு அளவு கடந்த வேதனையையும் வெறுப்பையுந்தான் தந்தன.

குளத்தங்கரையை விட்டு ஆலயத்துக்குச் சென்ற இந்திராணியைத் தொடர்ந்து போகிறான் தண்டபாணி. அங்கே அவனுக்கு வேறு ஜோலியும் இருந்தது. கோவில் குருக்களின் மனைவி சிங்காரியிடம் இவனுக்குக் கள்ள நட்பு. கோவிலைவிட்டு இந்திராணி வெளியே வந்ததும், அவளை வழிமறித்து மல்லுக் கட்டுகிறான் தண்டபாணி. அந்தச் சமயம் நல்ல வேளையாய், பந்து விளையாடிவிட்டு அந்த வழியே வந்த துரைராஜா அவளைக் காப்பாற்றுகிறான்.

**நாதியற்ற பேதை** :—நோய்வாய்ப் பட்டுத் துடித்துக் கொண்டிருந்த கிழவியின் உயிர் பிரிந்து விடுகிறது. இனி அவளுக்குத் துணை யார்?—வெகு சிரமப்பட்டுத் தாசில்தார் வீட்டில் போய், தன் பாட்டி விட்டுச் சென்ற வேலையை ஏற்றுக் கொள்கிறாள் இந்திராணி.

தாசில்தார் வீட்டுக்குப் போய்க் கொஞ்ச காலத்தில், அங்கே அவள் கேள்விப்பட்ட ஒரு செய்தி அவளைத் திடுக்கிடச் செய்தது. அவளுடைய வாழ்க்கையில் இடி விழுந்தது! இந்த உலகில் அவளுடைய ஒரே நம்பிக்கையாயிருந்த அவளுடைய உயிர்க் காதலனும் அவளைவிட்டுப் பிரியப் போகிறான்!—துரைராஜா ஹாக்கி விளையாடுவதற்காகச் சீமைக்குப் போகப் போகிறான்! அவனை உடனே போய்க்காண வேண்டுமென்று ஆவல் துடிக்கிறது அவளுக்கு.

**காதலன் பிரிவு** :—அன்று மாலை தாசில்தார் குழந்தைகளைப் பீச்சுக்கு அழைத்துக் கொண்டு போகிறாள். அங்கே துரைராஜா அடுத்த வெள்ளிக்

கிழமைக் கப்பலில்தான் பிரயாணமாகிறான் என்ற செய்தி ஊர்ஜிதமாகிறது. அவளுடைய நெஞ்சு எக்கத்தில் ஒரு குழந்தையைத் தவறவிட்டு விடுகிறாள். ஆனால் அந்தக் குழந்தையைத் தண்டபாணி அழைத்துக் கொண்டு வந்து விடுகிறான்.

வெள்ளிக்கிழமை அன்றுதான் அவளுடைய உயிர்க்குயிரான காதலன் பிரிந்து போகிறான். அப்படியே போய் துறைமுகத்தில் குதித்துவிட வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு. வேலைகளைச் சீக்கிரம் முடித்துவிட்டு, துறைமுகத்தை யடைந்து, எப்படியோ கப்பலண்டைப் போய் விடுகிறாள். கப்பல் புறப்படும் தருணம் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பின துரைராஜாவின் பார்வை அகஸ்மாத்தாய் இவள்மேல் விழுகிறது. அப்படியே ஓடி வந்து வார்த்தையாடுகிறான். அவள் சுவர்க்க லோகத்தை எட்டி விடுகிறாள்......

ஆனால் எல்லாம் முடிந்து விட்டது. அவன் பிரிந்து விட்டான். அனாதைப் பெண் செயலற்றுக் கல்லாய் நிற்கிறாள். அவளுடைய தலை சுழலுகிறது...

**இன்னல் மேல் இன்னல்**:—ஒருநாள் அவள் தனிமையில் தன் கதியை நினைந்து வருந்தி ஏங்கியிருக்கையில், தண்டபாணி அங்கு வந்து அவளை இம்சிக்கிறான்.

அவனுடைய பிடியிலிருந்து தப்பி ஓடுகிறாள் இந்திராணி. நேராக அவனுடைய மனைவியான பாக்கியத்திடம் போய் அடைக்கலம் புகுகிறாள். இந்தச் சமயத்தில் தண்டபாணியின் குரூர புத்தி வேலை செய்கிறது. அப்போது வந்த தாசில்தாரின் மனைவியான லீலாவதியிடம், இந்திராணி தன் மனைவியின் புத்தியைக் கெடுப்பதாகக் கோள் சொல்லுகிறான். லீலாவதியம்மாள் அவளுக்கு விபசாரப் பட்டமும் கட்டி, வீட்டை விட்டுத் துரத்தி விடுகிறாள்.

பயனற்ற வெறும் பாலை வனமான இந்த வாழ்வைத் தாங்க ஒரே யொரு சின்ன நம்பிக்கைதான் அவளுக்கு இருக்கிறது. ஒரு வேளை அவன் திரும்பி வந்தால்—?

எப்படியோ சுற்றி ஒரு சந்தையை அடைகிறாள். அங்கே ஒரு கீரைக்காரக் கிழவிக்கு வேலை செய்து, இந்த அரைச் சாண் வயிற்றை வளர்க்கிறாள். நிற்க.

லீலாவதியின் சகோதரி மிஸ். சுந்தரி ஒரு இளம் விதவை. வாழ்க்கையில் கெட்ட பாதையிலே வெகு தூரம் போய் விட்டாள். அவள், தனது காந்தனான ஒரு செட்டியார் மூலம் ஒரு சினிமாக் கம்பெனி ஆரம்பிக்கிறாள்.

சினிமாக் கம்பெனியார் ஒரு வெளிக் காட்சி பிடிப்பதற்காக மேலே சொன்ன சந்தைக்கு வருகிறார்கள். அங்கே கீரைக்காரக் கிழவியுடன் இந்திராணியைக் கண்ட செட்டியாருக்கு யோசனை ஓடுகிறது. அவளை எப்படியாவது தன் கம்பெனியில் சேர்த்துவிட வேண்டுமென்ற நோக்கம்,

கிழவியின் மூலம் பலவந்தப்படுத்தி, அவளைக் கொண்டும் போய் விடுகிருர். சீக்கிரத்தில் சினிமா வாழ்க்கை நடந்து வருகிறது இந்திராணிக்கு.

அவளைப் பிடித்த சனியன் அதோடு விட்டதா? பெண் பித்தம் பிடித்த தண்டபாணி அங்கேயும் வந்து விடுகிருன். எங்கே தன் செல்வாக்கு மங்கி விடுமோ என்று இந்திராணிமேல் பொருமையால் பீதியடைந்த சுந்தரி, அவனுக்குத் துணையாகிருள். அவளுடைய உதவியால் அவனும் சினிமாக் கம்பெனியில் சேர்ந்து விடுகிருன்.

சீமையிலிருந்து திரும்பின துரைராஜா, இந்திராணி சினிமாவில் சேர்ந்து விட்டாள் என்பதைக் கேள்விப்பட்டதும் கோபமடைகிருன். நேராக ஸ்டுடியோவுக்கு வருகிருன்.

என்ன வேடிக்கை! இதே சமயம் அவளுடைய அறையிலிருந்து வெளி வருகிருன் தண்டபாணி! கம்பெனி செட்டியார் கையில் நகைகளுடன் உள்ளே நுழைகிருர். வேறு என்ன வேண்டும்!—இவன் வருவதைக் கண்டதும் இந்திராணி கள்ளங் கபடற்ற உள்ளத்துடன் தன்னுடைய பரம சந்தோஷத்தை வெளியிட்டு, மெய்ம்மறந்து ஓடி வருகிருள். ஆனல, அவன் அவளை உதைத்துத் தள்ளி விட்டுப் போய்விடுகிருன்.

தூற்றச் சாட்டு:—செட்டியார் லக்ஷ ரூபாய் பெறுமான நகைகளை இந்திராணியிடம் கொடுத்து மறுநாள் ஆரம்பிக்கப் போகும் புதுப் படத்தில் அவள் நடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிருர்; துரைராஜாவின் விபரீத நடத்தையால் மனமுடைந்து போய் ஏக்கத்துடன் உட்கார்ந்திருந்த இந்திராணி அவர் சொல்லியதொன்றையும் கவனிக்கவில்லை. அவள் பித்துப் பிடித்தவள்போல், செட்டியார் விட்டுச் சென்ற நகைகளைக் கவனிக்காமல், வெளியே எழுந்துபோய் விடுகிருள். இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தண்டபாணியும், சுந்தரியும் நகைகளை அபகரித்துக் கொள்கின்றனர். திருட்டுப் பட்டத்தை அநாதைப் பெண்ணின்மேல் சுமற்றி விடுகிருர்கள். செட்டியாரும் போலீஸுக்குச் சொல்லியனுப்பி, இந்திராணியைத் தேடச் செய்கிருர்.

தன் உயிரையே போக்கிக் கொள்ளத் துணிகிருள் பேதை. ஒரு குளத்தங் கரையில் கற்பாறையண்டைப் போய்ப் பிரலாபித்துக்கொண்டிருக்கிருள். அவள், தன் உயிரை மாய்த்துக்கொள்ள நினைக்கும் தருணம் ஒரு பாரா போலீஸ்காரன் அவ்விடம் வந்து விடுகிருன்.

இதே சமயத்தில் இந்திராணி கெட்ட வழியில் இறங்கி விட்டாள் என்று நம்பிவிட்ட துரை ராஜாவும் வாழ்க்கையில் வெறுப்படைந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்து விடுகிருன். அதற்குமுன் தன்னுடைய துக்கத்துக்குக் காரணமானவளையும் கொன்றுவிட வேண்டுமென்று நினைக்கிருன். ஆனல், ஸ்டுடியோவை விட்டு அவள் போய் விட்டாள் என்று அறிகிருன். உடனே அவனுக்கு இந்திராணி எவ்வளவு பரிசுத்தமானவள் என்று தெரிகிறது.

அன்றிரவு காமப் பேய்ப் பிடித்த தண்டபாணி, சிங்காரியுடன் சல்லாபித்திருக்கையில், சிங்காரியின் மகனான சிறுவன் வாசு இவர்களைப் பார்த்து விடுகிறான். உடனே தன்னுடைய சிறு பிள்ளைத் தனத்தில் இதைப்பற்றித் தன் தகப்பனாரிடம் சொல்லி விடுவதாக அவன் பயமுறுத்துகிறான். இதைக் கேட்டுப் பயந்துகொண்ட சோரர்கள் இருவரும் எப்படியாவது சிறுவனை ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்து, அவனைக் கட்டித் தூக்கிக்கொண்டு, அந்தப் பாறைப்பக்கம் வருகின்றனர். பாவிகள்! குழந்தை வாசுவைப் பாறையில் மோதி விட்டனர்!

குழந்தையின் கூக்குரலைக் கேட்டுப் பயந்து ஓடிவந்த இந்திராணி, இந்தக் கோரக் காக்ஷியைக் கண்டு மூர்ச்சையாகி விழுந்து விடுகிறாள். திருட்டுக் குற்றத்திற்காக இவளைத் தேடிவந்த போலீஸாருக்கு இன்னொரு குற்றமும் சேருகிறது. அவள்தான் வாசுவைக் கொலை செய்ய முயன்றாள் என்று தீர்மானித்துப் போலீஸார் அவளைக் கைது செய்துகொண்டு போகின்றனர். அதே சமயத்தில் இந்திராணியைத் தேடி அவ்விடம் வந்த துரைராஜாவும் ஸ்டேஷனுக்குச் செல்லுகிறான். வாசு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டுச் சிகிச்சை பெறுகிறான்.

**விடுதலை** :—வாசு பிழைத்துக் கொண்டால், தங்களுக்கு ஆபத்து வந்து விடுமென்று பயந்துகொண்ட தண்டபாணியும் சிங்காரியும் தங்கள் குற்றத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள் ஏதேனும் இருந்தால்அவற்றை அழித்துவிட எண்ணி, மறுநாள் காலை பாறைப் பக்கம் வருகின்றனர். இதே சமயம் ஒரு தீவிரமான யோசனையுடன் கையில் காமிராவுடன் துரைராஜாவும் அங்கே வருகிறான். பாறைக்குப் பக்கத்தில் தண்டபாணியும் சிங்காரியும் அடையாளங்களுக்காகத் தேடுவதைப் படம் பிடித்து விடுகிறான். சிங்காரி ஆஸ்பத்திரிக்குப் போகிறாள். தண்டபாணி பணம் வாங்க சுந்தரியை நாடிப் போகிறான்.

சுந்தரிக்கும் தண்டபாணிக்கும் தாங்கள் திருடின செட்டியாரின் நகைகளைப் பங்கு போட்டுக் கொள்வதில், சச்சரவு ஏற்படுகிறது. தண்டபாணியுடன் கூடவே வந்த துரைராஜா, போனில் செட்டியாருக்கு விவரத்தை அறிவிக்கிறான். போலீஸ் தருவிக்கப்படுகிறது. குற்றவாளிகள் இருவரும் பிடிக்கப்படுகின்றனர்.

**இன்போதயம்** :—துரைராஜா நேராக ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பிரக்ஞை பெற்று எழுந்த வாசுவுக்குத் தான் பிடித்த போட்டாவைக் காண்பித்து, அவனுடைய ஞாபகத்தைத் தூண்டுகிறான். கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட வாசு உண்மையைக் கூறிவிடுகிறான். சிங்காரியும் கைது செய்யப்பட்டுக் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்படுகிறாள்.

விசாரணையில், இந்திராணி நிரபராதி என நிரூபிக்கப்படுகிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்றனர்.

காதலர் ஒன்று கூடுகின்றனர். அனாதைப் பெண்ணின் வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் உதயமாகிறது.

## ஒன்று பட்டாலுண்டு வாழ்வு

"இப்போது உலக சம்பவங்களைக் கவனிக்குங் காலையில் இந்தியா சுதந்திரமடைய ஒரு தங்கமான சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது. இந்தமாதிரி சந்தர்ப்பம் மீண்டும் நேருமோ என்னமோ! ஆதலால் தேச வாசிகள் அனைவரும் வித்யாசங்கள், பூசல்கள் முதலியவைகளை மறந்து நமது லக்ஷி யத்தை யடைய ஒற்றுமையாக முன்னேறுவோமாக." —ராஷ்டிரபதி

## ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையே என் உயிரினும் அரியது

ஹிந்து மதத்தில் எனக்குள்ள பற்றுதல் குறுகியதல்ல. இஸ்லாம், கிறிஸ்துவமதம், ஜுடாயிஸம், ஸொராஸ்டிரியானிஸம் ஆகிய மதங்களில் எனக்குத் தெரிந்த உயர்ந்த தத்துவங்களெல்லாம் என்னுடைய ஹிந்து மதத்தில் அடங்கி யிருக்கின்றன. எல்லாவற்றையும் நான் பக்தியுடன் பார்க்கிறேன். அதைப்போல் அரசியலையும் பக்தி பூர்வமான திருஷ்டி யுடன்தான் பார்க்கிறேன்.

சத்தியம்தான் என்னுடைய மதம்; அதை அடைவதற்கு அஹிம்ஸை ஒன்றுதான் வழி. கத்தியின் தத்துவத்தை நான் முடிவாக நிராகரித்து விட்டேன்.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைச் சாதிப்பதற்கு ஒரு முயற்சியையும் தவறவிடமாட்டேன். பல விசித்ரமான வழிகளில் ஆண்டவன் தனது விருப்பங்களை நிறைவேற்றுகிறார். எங்கள் இருவருக்குமே தெரியாத ஒரு வழியில் ஆண்டவன் இச் சந்திப்பின் மூலம் தன் விருப்பத்தை நிறை வேற்றி, இரு வகுப்பினரிடையேயும் ஒரு கௌரவமான சமரசம் ஏற்படு வதற்கு ஒரு வழி காட்டக்கூடும்.

எங்கள் இருவருக்கும் நல்ல ஹிருதயமும், நல்ல வார்த்தையும் கொடுத்து, எங்களை இந்தியாவிலுள்ள வாயில்லாப் பூச்சிகளின் நன்மைக்கு உபயோகித்துக்கொள்ளுமாறு, சத்ய தேவதையைப் பிரார்த்தனை செய்யு மாறு வகுப்பு சமாதானத்தை விரும்பும் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளு கிறேன்." —மகாத்மா காந்தி

## மஞ்சள் பெட்டியில் வோட்டு போடுங்கள்

வரப்போகும் முனிசிபல் தேர்தலில் தமிழ்நாட்டிலுள்ள வாக்காளர் அனைவரும் ஒரே முகமாகக் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே வோட்டுக் கொடுக்க வேண்டுமென மிகவும் கேட்டுக்கொள்கிறேன். —ஸ்ரீ. போஸ்.

## ஐ. ஸி. எஸ். என்பது அடிமைச் செக்கு

மத்ய மாகாணத்தில் ஐ. ஸி. எஸ். ஆபீஸராக விருந்து சமீபத்தில் ராஜிநாமா செய்த ஸ்ரீ. எச். வி. காமத் தமது அறிக்கையில் கூறுவதாவது:-

"ஐ. ஸி. எஸ்., என்பது குல்லாய்க்குத் தகுந்த தலை செய்யும் ஒரு ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்தின் அர்த்தமற்ற முறை பாடுகளுக்கு இணங்க மறுப்பவர்களின் பாதையில் முள்ளும், கல்லும் இருக்கும். உயிரில்லாத அந்த மாமூல் சர்வ வியாபகமானது. பேச்சு, நடை, செய்கைகள், உடைகளும் கூட மூலஸ்தானத்திற்கு ஒத்ததாயிருக்கவேண்டும்.

ஆகவே, இந்தியாவுக்குச் சேவை செய்வதற்காக நான் ஐ. ஸி. எஸ். பதவியை ராஜிநாமா செய்வதென்று தீர்மானித்தேன். ஒரு வழியாக முடிவு செய்துகொண்டு சுதந்தர தினத்தன்று இந்தியா மந்திரிக்குத் தெரிவித்தேன். அன்று ராஜிநாமாச் செய்வதுதான் பொருத்தமானதென்று நான் கருதினேன்."

## ஸ்கௌட் பிரமாணத்தில் தகராறு

அலகாபாத்தில் நடந்த இரண்டாவது ஸ்கௌட் ஒற்றுமை மகா நாட்டில், ஸ்கௌட் பிரமாணத்தில் 'மன்னர்பிரானுக்கு விச்வாசம் செலுத்துகிறோம்' என்பதற்குப் பதிலாக "நாட்டுக்கு விசுவாஸம் செலுத்துகிறோம்" என்று மாற்ற வேண்டுமென்ற கிளர்ச்சி பலத்துவிட்டதால், மகாநாடு முறிந்துவிட்டதாம்.

ஒரு புதிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதற்கு 'ஹிந்துஸ்தான் ஸ்கௌட் சங்கம்' அல்லது இந்திய ஸ்கௌட் சங்கம் என்று எப்படி வேணுமானாலும் சொல்லலாமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## கல்வி மந்தியின் உறுதி

### பரீக்ஷையின் வெற்றியில் ஹிந்தி குறுக்கிடாது

சேலத்தில் நடந்த கல்வி இலாகா அதிகாரிகளின் கூட்டத்தில் கனம் கல்வி மந்திரி, ஹிந்தியில் தேறினால்தான் மாணவன் மேல் வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுவானென்பது அவசியமில்லை யென்றும், ஹையர் எலிமென்டரி பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் போவதில்லை யென்றும் கூறியிருப்பது அநேகருடைய கவலையைப் போக்குமென்பதில் ஐயமில்லை.

# அறிவின்மையை ஓட்ட இளைஞர் சேனை

## மாகாத்மாஜியின் புதிய திட்டம்

"மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் இருபத்தைந்து வருஷங்களுக்கு வேலை செய்வதாக நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். இதை நிறைவேற்றுவது கஷ்டமான காரியம். இந்தப் பள்ளிக்கூடத்திற்கு 5000 விண்ணப்பங்களுக்கு மேல் வந்தன. இதிலிருந்தே படித்தவர்களிடையே வேலையில்லாக் கஷ்டம் எவ்வளவு அதிகமாயிருக்கிறதென்று தெரிகிறது. சாப்பாட்டுக்குக்கூட அவர்கள் கஷ்டப்படுகிறார்களென்பது தெரிகிறது. சிலர் உன்னதமான நோக்கத்துடனும், சிலர் சாப்பாட்டுக்கு ஏதாவது வேலை செய்வோம் என்ற நோக்கத்துடனும் வந்திருக்கிறீர்கள். நீங்கள் செய்வது நல்ல தியாகம். நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளுக்கு உண்மையாக நடந்துகொண்டால் உலகத்திற்கே நீங்கள் ஒரு உதாரணமாயிருப்பீர்கள். தோல்வியடைந்தால் என்னையும், கல்வி மந்திரி பண்டித ரவி சங்கர சுக்லாவையும் தூற்றுவார்கள். ஆகவே, உறுதியில்லாதவர்கள் இப்போதே விலகிவிடுங்கள்.

இது முற்றிலும் இந்தியத் திட்டம். இத்திட்டம் பிறந்தது சிவ கிராமத்தில். இந்தியாவிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களில்தான் உண்மை இந்தியா இருக்கிறது. சிவ கிராமத்தைவிட சிறியதும், இன்னும் மோசமானதுமான கிராமங்கள், நகர வாழ்க்கையின் சுகங்களை அறியாத கிராமங்கள் இவைகளில்தான் உண்மையான இந்தியா இருக்கிறது.

எழுத்து வாசனையில்லாப் பரிதாபத்தை நாட்டைவிட்டு விரட்டுங்கள். அவர்களுக்கு உணவுக்கு வழியளியுங்கள். அஹிம்ஸை, சத்தியத்தின் மூலம் நாட்டுக்குச் சுதந்தரம் பெறுங்கள். ஆண்டவன் பணியாக நினைத்து இதைச் செய்யுங்கள். தீர ஆலோசனை செய்த பிறகே எனது திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறேன். இது தோல்வி யடைந்தால், உபாத்தியார்கள்மீது குற்றம் சுமத்துவார்கள். கைத்தொழில்கள் மூலம் சரித்திரம், கணக்கு, பூகோள சாஸ்திரம் முதலியவைகளைப் போதியுங்கள். மாணவர்களினுடைய உழைப்பினால் பள்ளிக்கூடத்தின் செலவு கட்டிக்கொள்ளும்படியாய்ச் செய்யவேண்டும். தன்னுடைய கத்தி முனையில் ஹிட்லர் தனது லக்ஷியத்தை அடைந்துகொண்டிருக்கிறார். ஆத்மாவின் மூலம் அதை அடைய வேண்டுமென்பது என்னுடைய ஆசை. மேல்நாட்டுக் கருத்துக்களை விட்டொழித்து, கிராம வாசிகளுடன் ஐக்கியப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கையையே நீங்களும் நடத்துங்கள். ஆண்டவன் உங்களுக்கு அருள் புரியட்டும்."

# அஹிம்சை வழியா? வேறு மார்க்கமா?

## காந்திஜியின் எச்சரிக்கை

"காங்கிரஸ் மகாசபை அஹிம்சையை அனுஷ்டிப்பது எவ்வளவு பிரயோஜன மற்றதாக விருப்பினும், அந்த முறையை அப்பியசிப்பது சம்பந்தமாக நான் நிபுணன் என்று கருதப்படுகிறது. ஆகையினால் என்னுடைய எச்சரிக்கையை அலட்சியம் செய்யமாட்டார்களென்று நம்புகிறேன்" என்று காந்திஜீ, "ஹரிஜன்" தலையங்கத்தில் எழுதியுள்ளார்.

அவர் மேலும் எழுதுவதாவது :—

நான் நிலைமையின் போக்கைக் கண்டு பிடித்து அதற்குப் பரிஹாரம் செய்வதில் பிசகியதே கிடையாது. உதாரணமாகச் சொல்லுகிறேன்.

ஆமதாபாத், வீராம்காம் ஆகிய இடங்களில் பலாத்காரம் தலையெடுத்த போதும், வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது பம்பாய் நகரத்தில் பலாத்காரம் ஏற்பட்டபோதும், பர்தோலி இயக்கத்தின் முடிவில், சௌரி சாராவில் கலகம் ஏற்பட்ட போதும் நான் சொன்ன பரிஹாரத்தினால் நல்ல பலன் கிடைத்தது.

## சீர்திருத்தங்கள்

அதுபோலவே இப்பொழுதும் நான் சொல்லும் பரிஹாரத்தில் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. அஹிம்சா தர்மத்தில் நமக்குப் பூர்ண நம்பிக்கை யிருக்குமானால், வியாதியைச் சொஸ்தம் செய்வது நம் சக்திக்கு மிஞ்சியதல்ல.

நாம் செய்துகொள்ள வேண்டிய சில முக்கியமான சீர்திருத்தங்கள் வருமாறு :—

(1) ஹிந்து—முஸ்லீம் கலகங்கள் நடவாமலிருக்க ஒரு வழி தேட வேண்டும். வகுப்புச் சண்டையென்று எழுதாமல், ஹிந்து—முஸ்லீம் சண்டையென்று நான் வேண்டுமென்றே எழுதுகிறேன். ஏனெனில், ஹிந்து—முஸ்லீம் கலகங்கள் ஒழிந்தால், மற்ற வகுப்புச் சண்டைகள் தானாகவே ஒழிந்துவிடும்.

(2) காங்கிரஸ் அங்கத்தினர் ஜாப்தாவில் போலிப் பெயர்களிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. உடனே ஜாப்தாவிலுள்ள போலி ஓட்டர்களின் பெயர்களை விலக்கிவிட்டு, இனி இவ்விதமாக நடவாமலிருக்கும்படிச் செய்ய வேண்டும்.

(3) காங்கிரஸ் சிறுபான்மைக் கட்சியாகி விடுமோ வென்னும் அச்சம் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கக் கூடாது.

## தொண்டர் படை

(4) ஒவ்வொரு மாகாணக் காங்கிரஸ் கமிட்டியும், தாமதமில்லாமல், மனதாலும், சொல்லாலும், செய்கையினாலும் அஹிம்சா விரதம் பூண்ட ஓர் தொண்டர் படையை அமைக்க வேண்டும். இந்தப் படைக்குப் பயிற்சியளிப்பதற்காக அனுஷ்டான விதிகள் தயாரிக்கப்படவேண்டும். இந்த விதிகள் சகலரும் அனுஷ்டிக்கக் கூடியதாக விருக்கவேண்டும்.

மேலே சொன்ன யோசனைகளில் அனுஷ்டானத்திற்கு லாயக்கற்றது ஒன்றுமில்லை. ஆனால், தலைமை வகித்து நடத்துபவர்களுக்கு அஹிம்சா தர்மத்தில் நம்பிக்கையில்லாவிட்டால், இந்த யோசனைகள் அனுஷ்டிக்க முடியாதவைதான்.

தலைவர்களுக்கு அஹிம்சையில் நம்பிக்கையில்லையாயின், அஹிம்சை என்னும் வார்த்தையைக் காங்கிரஸ் அகராதியிலிருந்து எவ்வளவு சீக்கிரம் அகற்றுகிறார்களோ, அவ்வளவும் காங்கிரசுக்கும், தேசத்திற்கும் நன்மை பயக்கும். அஹிம்சா தர்மத்தை எடுத்துவிட்டபின், கலப்பற்ற பலாத்காரத்தைக் காங்கிரஸ் கைக்கொண்டது என்று அர்த்தமல்ல.

இந்த உலகத்திலே சுதந்திரம் பெறுவதற்காக சுத்தமான அஹிம்சா தர்மத்தைக் கையாண்டது காங்கிரஸ் ஒன்றுதான். காங்கிரசுக்கு இது ஒன்றே சக்தி. இந்தச் சக்தி தோஷமற்றதாக இல்லாவிடின் அதனால் தேசத்திற்குத் தீங்கேற்படுமென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

## ஒரே சக்தி

நிர்த்தோஷமானதாக இல்லாவிட்டால், தீவிரமான சண்டையின் போது, வீரப் பெண்மணிகளாகவும் வீரப் புருஷர்களாகவு மிருக்க வேண்டிய சமயத்தில் கோழைகளாக விருப்போம். சுதந்திரப் போராற்று பவர்களுக்குக் கோழைத்தனத்தைவிட மானக்கேடானது ஒன்றுமில்லை.

பலாத்காரத்தை உபயோகிக்காமல் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அகற்ற முடியாதென்று நமக்குத் தோன்றினால், அதைக் காங்கிரஸ் மகாசபை தேச மக்களுக்குச் சொல்லி, அதற்கேற்றவாறு தேசத்தைத் தயார் செய்ய வேண்டும். இவ்வளவு காலம் அஹிம்சை பாதையில் சென்று, பின் நோக்கிச் செல்லவேண்டி யிருப்பதைக் குறித்துச் சங்கோஜப்படவேண்டியதில்லை.

உலகத்தில் எல்லாரும் அனுஷ்டிக்கும் உபாயமென்ன? அதை நாமும் செய்யவேண்டும்—முடிந்த அளவு பொறுத்திருப்பது. வேண்டியபோது உதைப்பது—இதை நம்முடைய கொள்கையாக வைத்துக்கொள்வோ

மாகில், 17 ஆண்டுகள் வீணுயிற்றே! ஆனல் சீர்திருத்திக் கொள்வதற்கு கால வரை கிடையாது. ஒரு தேசத்தின் சரித்திரத்திலே 17 ஆண்டுகள் மிக அல்பமான கால அளவு.

இந்த எச்சரிக்கை செய்த பின்னும், ஏதாவதொரு வழியைக் கடைப் பிடிப்பதென்று காங்கிரஸ்காரர்கள் தீர்மானிக்காவிட்டால், அவர்களுக்கு அதிகக் கஷ்டமேற்படும்.

## நாதன குறள்

சூது

துன்பம் பலவாக்கிச் சூது புகழ்கெடுக்கும்
இன்மை தராதோ இது. 1

சூதும் இடமும் தொழிலும் விடா அரசர்
யாதும் இலராவர் இங்கு. 2

சூதென்னும் மூதேவி சூழ்ந்தார், இருமையும்
தீதென்ப எய்தாரோ சொல். 3

செல்வமும் நற்குணமும் சேரக் கெடுக்கும்
ஒல்வகையால் சூதை ஒழி. 4

பொருளைக் கெடுப்பதுடன் பொய்ம்மையை யேற்றும்
அருளைக் கெடுக்கும் அது. 5

இருமையினும் துன்பம் இயற்று நெடுஞ்சூது
பொருவரோ வேந்தர் புகல். 6

ஊணும் உடையும் உறுகல்வி கீர்த்திபொருள்
மாணுறுமோ சூது கொளின். 7

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூது
மறுமை இழப்பிக்கும் மற்று. 8

இருமைப் பயனும் இழந்து இருஞ்சூதன்
அருமையுடல் விருப்பா னற்று. 9

ஊக்கமுடைமை

கருமந் தடைசெயினுங் கைதளரா ணுயின்
பெருமை அடைவான் பெரிது. 10

—திரு. ராகவாசாரியர்.

# வெளி நாட்டுச் செய்திகள்

## அயர்லாந்திலும் வகுப்பு வித்தியாசமா?

பிராடெஸ்டென்டான டாக்டர் ஹைடை அயர்லாந்தின் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளச் செய்ததற்குக் காரணம், அந்த வகுப்பினர் மிகுந்துள்ள வட அயர்லாந்தின் நன்மதிப்பைப் பெற்று, ஐரிஷ் ஐக்கியத்தைச் சுலபமாக்க டிவேலரா செய்த யுக்தி என்று கருதப்படுகிறது.

## செகோஸ்லோவேகியாவிலும் ஜர்மன் ஆதிக்கமா?

ஆஸ்டிரியாவை ஜர்மெனி தன் ஸ்வாதீனப் படுத்திய பிறகு, சுமார் 25 லக்ஷம் ஜெர்மானியர் வாழும் செகோஸ்லோவேகியாவையும் ஆக்ரமிக்க ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது. மகா யுத்தத்துக்கு முன்பு செகோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா-ஹங்கேரியின் ஒரு பாகமாக இருந்தது.

## பிரிட்டிஷ் 1938-39 பட்ஜெட்

| | | | |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 94·47அரை | லக்ஷம் | பவுன் |
| செலவு | 94·44 | ,, | ,, |

மூன்றுவித வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. வருமான வரியால் 225 லக்ஷம் பவுனும், பெட்ரோல் வரியால் 50 லக்ஷமும், தேயிலை வரியால் 27அரை லக்ஷமும் ஆக 3 கோடி பவுனுக்கு மேலாக வருமானம் உயரும்.

## ருமேனியாவில் பாஸிஸ்டுகள்மீது பாணம்

இரும்பு வீரர்கள் சர்க்காரின் போலீஸ் ராணுவ இலாகாக்களில் தம் ஒற்றர்களுக்கு இடம் கிடைக்குமாறு செய்திருப்பதால், இந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிட சர்க்கார் ஆக்ஞாபித்திருக்கிறார்களாம்.

## அமெரிக்காவுக்கு ஜப்பானின் நஷ்ட ஈடு

அமெரிக்க பீரங்கிப் படகு 'பானே'யை மூழ்கடித்ததாலேற்பட்ட நஷ்ட ஈடுக்காக, ஜப்பான் சர்க்கார் 4,42,000 பவுன் செலுத்திவிட்டார்களாம்.

## ஷேக்ஸ்பியரின் ஞாபகார்த்தம்

ஷேக்ஸ்பியர் நாடகக் கொட்டகையை 5 லக்ஷம் பவுன் செலவில் கட்டுவார்களாம். காளிதாஸரின் ஞாபகார்த்தமாக நம் பாரத நாட்டில் என்ன செய்திருக்கிறார்கள்?...

## இன்னுமா சங்கத்தினிடம் நம்பிக்கை?


அடுத்த ஸர்வதேச சங்கக் கூட்டத்திற்குத் தன் பிரதிநிதிகளை அனுப்பப் போவதாக ஹேய்லி ஸெலாஸி தெரிவித்திருக்கிறாராம்.

# பத்திரிகை விமர்சனம்

## "கிரிஜா"

[தமிழ் மாதப் பத்திரிகை. வருஷ சந்தா: உள்நாடு ரூ. 1-8. வெளிநாடு : ரூ. 2-4. தனிப்பிரதி அணா 2. கிடைக்குமிடம்: 28, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.]

ஸ்ரீமான் எம். எஸ். ராமஸ்வாமி அய்யரைப் பத்திராதிபராகக் கொண்ட இச் சஞ்சிகையின் முதல் இதழில் படிப்பவரின் கல்வி யறிவை விருத்தி செய்யக்கூடிய பல விஷயங்களைப் பற்றிய கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. **தமிழ் மொழி வளர்த்தல்** என்னும் வியாசத்தைப் படித்த பிறகாவது பிற பாஷை மோகம் பிடித்தவர்கள் தம் தாய்ப்பாஷையினிடத்துள்ள அலக்ஷ்ய புத்தியை யொழிப்பார்களா? **செய்திப் பகுதியில்,** பொருத்தமான படங்களுடன் விஷயத்தைச் சுலபமாக விளக்கியிருப்பது போற்றத்தக்கது. நாடகமும், சிறு பிள்ளைகளுக்கான பகுதிகளும் ஸ்வாரஸ்யமா யிருக்கின்றன. நமது கர்நாடக சங்கீதத்தில் அபார வல்லமையுள்ள ஆசிரியர், சங்கீதப் பகுதியை விஸ்தரித்து, தற்காலத்தில் நம்மவர்களுக்கு ஹிந்துஸ்தானி ராகத்தில் ஏற்பட்டுள்ள மோகத்தால் கர்நாடக சங்கீதத்தைக் கொலை செய்வதைத் தடுத்து, இதுவும் மனத்தைப் பரவசமுறச் செய்யவல்லது என்பதை நன்கு விளக்கிக் காட்டும்படியான கட்டுரைகளை வெளியிட்டு, வடநாட்டினர் நம்மவர்மீது கொண்டுள்ள ஒரு இழிவான அபிப்பிராயத்தைப் போக்குவாரென்று நம்புகிறோம்.



"பக்த மீரா"வில் ஒரு காட்சி.

எத்தகைய கடின சித்தமும் கொடிய மிருகத்தன்மையும் படைத்தவர்களானாலும் சரி, முற்றுந் துறந்த முனிவர்களானாலும் சரி, பெற்ற அன்னையின் பாசத்தை அகற்ற முடியுமா? பட்டினத்து அடிகள் அத்தனை பெருந் துறவியாயினும் தன் அன்னையின்பால் கொண்ட பேரன்பை மாற்ற முடிந்ததா? அங்ஙனமிருக்க இந்த ஏழையின் மன நிலையைப்பற்றிக் கூறவேண்டுமா?

சில நிமிடங்கள் பிரக்ஞையற்றுச் சவம்போலக் கிடந்தான். பிறகு சற்றுத் தெளிவு பெற்று, “அம்மா! அம்மா! ஒன்னெ நான் கடைசிதரம் பார்க்கக்கூட குடுத்துவெக்காத பாவியாயிட்டேனே! அம்மா! என்னாலே சகிக்க முடியல்லயே! ஒன்னெ நான் பாக்காமல் பறிகுடுத்துடுவேன்னு கனவிலேகூட நெனைக்கல்லயே! பெத்த தாயின் அந்திம காலத்தில் பக்கத்திலிருந்து பஞ்சினாலே பால் வாத்து அனுப்பாத பிள்ளை இருந்தென்ன? இறந்தென்ன? ரெண்டும் ஒன்னுதானேன்னு உன் உள்ளம் நினைக்காதா? ஊர் ஏசாதா? ஐயோ! மகாபாவி எனக்கு இத்தனை சங்கடப்படுவதற்கு விதி இருக்கும்போது என் பிராணன்தான் எப்படிப் போகும். சண்டாளன்! பாவி! நான் பாவி. அம்மா! அம்மா!” வென்று பயித்தியம் பிடித்தவன்போலத் தன் ஒரு கையால் தலையைப் பிச்சிக் கொண்டும், மென்னியை இருக்கிக் கொண்டும், தலையைக் கதவிலும் சுவரிலும் போட்டு மோதிக்கொண்டும் துடித்தான். தன் தாயின் உயிர் ஊசலாடுவதுபோலும், அவள் பக்கத்தில் குழந்தைகள் கண்ணீருடன் உட்கார்ந்திருப்பதுபோலும் தாயார், ‘மூர்த்தீ! மூர்த்தீ! உன் முகத்தைக் காட்டமாட்டாயா? என் பிராணன் போகப்போகிறதே!’ என்று கூறிக் கண்ணீர் பெருக்குவதுபோலும், பெற்ற தாயைச் சம்ரக்ஷிக்க கையாலாகாத பாவி என்று பொது மக்கள் வசை கூறுவதுபோலும் உருவெளித் தோற்றம் மூர்த்திக்குத் தோன்றியதால் உடனே அவன் எழுந்து அச்சிறை முற்றும் சுவரெல்லாம் தடவிப் பார்த்தபடியே சுற்றிச் சுற்றி வந்து மீண்டும் தடாரென்று கீழே விழுந்து விட்டான்.

## 55

கருப்பனும் வீரம்மாளும் மைதிலியை மெல்ல நடத்தி ஆசிரமத்திற்குள் அழைத்து வந்தார்கள். மைதிலி ஆசிரமத்தையும் அங்குள்ளோர்களையும் மிரள மிரளப் பார்க்கிறாள். முகத்தை ஏதோ விகாரப் படுத்துகிறாள். கையைப் பிசைகிறாள். கட கடவென்று சிரிக்கிறாள். இம்மாதிரி செய்தபடியே ஆசிரமத்திலுள்ள சர்க்காக்களையும், தேசியக் கொடிகளையும் தலைவர்களின் படங்களையும் வெறி பிடித்ததுபோல் பார்த்துக் கொண்டே வந்தாள்.

இதற்குள் வாஸந்திக்கு இச்செய்தி தெரிந்து ஓட்டமாக ஓடி வந்து, "மாமீ! மாமீ! எங்க பாட்டிக்கு ஒடம்பு ரொம்ப அதிகமாயிருக்கு மாமீ! செத்துப் போயிடுவா போலிருக்கு மாமீ!" என்று மைதிலியைக் கட்டிக் கொண்டு அழுதாள். மைதிலியும் வாஸந்தியை ஆவலுடன் இழுத்துக் கட்டிக் கொண்டு, "வாஸந்தி! நீ செத்துப்போகல்லெ. நீ! நீ! நீ! செத்துப்போகப் போரயா?.... என்றாள். ஆனால் கண்ணீர் மட்டும் கொட்டுகிறது.

வாஸந்தி:—மாமீ! நான் செத்துப்போகல்லெ. அதோ பாருங்கோ பாரதமாதா படம். இதோ பாருங்கோ சரோஜனி தேவி. கமலாநேரு. ஜவஹர்லால் நேரு. மாமீ! இப்படி வாங்கோ! பால கங்காதர திலகர், அன்னிபெஸண்டு, மகாத்மாவின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி....மாமீ! இதோ பாத்தங்களா மகாத்மா காந்தி—என்று மைதிலிக்குப் பலாக்குக் காட்டும் பொருட்டு இழுத்துக் கொண்டுபோய் ஒவ்வொன்ருகக் காட்டினாள்.

மைதிலியும் பிரமை பிடித்தவாறே, எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே எந்திரம்போல் நடந்து வந்தாள். மகாத்மாவைப் பார்த்ததும் தன்னை யறியாமல், "மகாத்மா காந்திக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கூச்சலிட்டாள். ஆசிரமத்திலிருந்த எல்லோரும் ஜே! கோஷம் போட்டார்கள். மைதிலியின் மனத்தில் ஒரு மின்சாரம் தாக்குவதுபோல இந்த ஜே! கோஷம் தாக்கியது. ஒரு முறை முற்றிலும் மானைப்போல் மிரள மிரளப் பார்த்தாள்.

சர்க்காவை எல்லாம் தானே இரு இரு என்று சுத்திப் பார்த்தாள். முகத்தில் களை கொஞ்சங் கொஞ்சமாக மாறிக் கொண்டே வருவதைப் பார்த்த கருப்பனின் உள்ளம் பூரித்தது. வாஸந்தியின் மனமும் மலர்ந்தது. மைதிலியே அங்கிருந்த தேசியக் கொடியைப் பிடித்துக் கொண்டு, அவ்விடத்திலே ஒய்யார மாக நடந்தபடியே, "வந்தேமாதரம், பாரத மாதாவுக்கு ஜே" என்று தானே கத்தியவாறு இரண்டு மூன்று முறை உலாவினாள். பிறகு அந்தக் கொடியையும் பாரதமாதாவின் படத்தையும் உத்து உத்துப் பார்த்தாள்.

ஒன்றும் பேசத் தெரியாது கண்ணீர் பெருக விழித்தாள். கருப்பன் "அம்மா நீங்க வாங்கோ! நம்ப வீட்டுக்குப் போகலாம்" என்றான். மைதிலி "இந்தக் கொடி எனக்குதான்" என்றாள். "ஊம். எடுத்துக்கோங்கோ; வாங்கோ" என்றான். மைதிலி மற்றொரு முறை எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தாள்.

இவ்வாறே கருப்பன் தினம் தன் மனைவியை அவ்வறையில் போட்டுப் பூட்டிவிட்டு மைதிலியை ஆசிரமத்துக்கு அழைத்து வருவதும், சினிமாவுக்கு அழைத்துச் செல்வதும், பீபிள்ஸ் பார்க்கு முதலிய சில கண்காக்ஷிகளுக்கு அழைத்துச் செல்வதுமாக இருந்தான்.

அம்மாதிரி செய்ததில் மைதிலிக்கு அவைகளை எல்லாம்விட ஆசிரமமே நன்கு பிடித்தது. கிழவர் இரண்டுநாள் ஊருக்குப் போயிருந்ததால், மைதிலியை ஆசிரமத்திலேயே இரண்டு நாளும் வைத்திருந்தான். ஆசிரமத்தில் விடியற்காலம் பிரார்த்தனை, பிறகு தேகப்பயிற்சி, அதன்பிறகு நூல் நூற்றல் முதலிய முறைப்படி நடக்கும் வேலைகளைப் பார்க்கப் பார்க்க பஜனையில் அவள் மனம் லயித்தது.

இம்மாதிரி மாறுதலைக் கண்ட கருப்பன் பாரதமாதாவின் முன்பு நின்று மைதிலிக்குச் சீக்கிரம் தெளிவு கொடுக்க வேண்டு மென்று பிரார்த்தனை செய்து வேண்டுவான். வேணியின் படத் திற்குமுன் சென்று, "தாயே! நீ எங்காச்சிலும் தெய்வமா

இருந்து காப்பாத்து. ஒனக்குப் பூவாடெ கும்பிட்ரேன்; இந்தம் மாளுக்கு தெளிஞ்சாக்கா ஒம் பசங்களுக்குத்தான் சொகம். தாயே வேணீயம்மா! காப்பாத்து" என்று இறைஞ்சுவான்.

எந்தத் தெய்வங்களின் சக்தியாலோ மைதிலிக்குத் தெளிவு உண்டாகி "பாரதமாதா, மகாத்மா காந்தி" என்ற உச்சரிப்பும் பழய ஞாபகங்களும் சிறிது சிறிதாக உண்டாகியது. தனக்கு இத்தனை நாளாக புத்தியே தடுமாறி இருந்ததை எண்ணி, சிந்திக்கவும் தலைப் பட்டாள். ஆனால், ஆசிரமத்தின் வாழ்க்கைகளும் செய்கைகளும் அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டதால், இனிமேல் தான் வீட்டிற்கே வரமுடியாதென்று கண்டிப்பாய்த் தீர்மானித்துவிட்டாள்.

## 56

மைதிலி ஆசிரமத்திலிருப்பது தெரியாதிருக்கும் பொருட்டு, கருப்பன் தன் மனைவியை மைதிலி போல நடிக்கும்படிச் செய்திருந்தான். இதனால் கிழவர் கிணற்றில் கல் போட்டதுபோல் பேசா திருந்தார். வழக்கம்போல் ஆசிரமத்துக்காரர்கள் சுதேசி சாமான்கள் வாங்கும்படியும், காங்கிரஸ் அங்கத்தினர்களைச் சேர்க்கும் பொருட்டும் புறப்பட்ட ஊர்வலத்தில் மைதிலியும் தைரியமாக கையில் ஒரு கொடியைத் தாங்கிக் கதர் சேலையுடன் கிளம்பினாள்.

"ஜே! வந்தேமாதரம்! பாரதமாதாக்கி ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கூவிய பின்பு மைதிலி பாட ஆரம் பித்தாள்.

("மயிலே உன் சாயல் கொண்ட" மெட்டு)

நம் தேயப் பொருள்கள் கொள்வோம்
நம் தேய உடை யணிவோம்
சிந்தைக் களிப்புடனே
வந்தே மாதரம் என்று சொல்வோம்

நம் நாட்டு விளை—பருத்தி
நம் நாட்டிலே—இருத்தி
நம் நேயர் மனம்—திருத்தி
நம் நாட்டு கதர்—தரித்து (நம்)

தொகைரா

வருடந்தோறும் நம் நாட்டினின்று
அறுபது கோடி பணம் சென்று
வறுமைப் பிணியை நம் நாட்டிற்கு
வருவித்தல் நன்றோ ! புகல்வீர்.

மாரு மனமுவந்து
தீரமாய் கதரணிந்து
யாரும் அறிய மொழிந்து
பாரில் புகழ் சீர்மிகுந்த (நம்)

கூட்டம் கூடிவிட்டது. ஆசிரமத்திற்கு அரிசியும் பருப்பும் நிறைய சேர்வதோடு நான்கு மெம்பர்களும் சேர்ந்தார்கள். எல்லாவற்றையும்விட அதிசயம் வீட்டை விட்டு வெளியில் வரா திருந்த அனேக பெண்பிள்ளைகளும், பாட்டிமார்களும் கூட மைதிலி வீராவேசத்துடன் கொடி தாங்கி பஜனை செய்து கொண்டு செல்லும் அழகில் ஈடுபட்டு அவளே பாரதமாதாவென்று எண்ணிப் பஜனையில் வந்து கலந்துகொண்டார்கள் என்றால் வேறு கூறவேண்டுமா ?

பெருங் கூட்டமாக பஜனை வருவதைக் கண்ட கிழவர் மன்மதபாண சஞ்சீவியை வாங்கிக்கொண்டு போகையில், கூட்டத்தைப் பார்த்தார். எப்போதும் காங்கிரஸ் கூட்டம், கதர் என்றாலே பிடிக்காத கிழவர் பெருங்கூட்டத்தில், தன் மனைவியின் குரல் போல் கேட்டதால், அப்படியே நின்று கூட்டத்தை விலக்கி, யார் என்று பார்த்தார்.

அவ்வளவுதான். ஆத்திரம் பொங்கும் வேகத்தில் "ஐயையோ !" என்று கூவிக்கொண்டே இரு கைகளையும் விரித்து வயிற்றில் அடித்துக்கொண்டார். இந்தச் செய்கையில் மன்மத பாண சஞ்சீவி தடாரென்று கீழே விழுந்து உடைந்தது. கிழவர்

ஆவேசத்துடன் உள்ளேவந்து, "மைதிலிதான். சந்தேகமே இல்லே. சத்தெ முன்னெ நான் வீட்டுக்குள்ளே பாத்தேனே. இதுக்குள்ளே எப்படி இந்தமாதிரி வந்துட்டா!" என்று சொல்லிக்கொண்டே ஓட்ட ஓட்டமாக ஓடி, தன் வீட்டில் மைதிலி இருக்கும் அறையைத் திறந்து பார்த்தார்.

காத்தாயி தூங்கிக்கொண்டிருந்தாள். கிழவர் ஆத்திரத்துடன் "இதோ தூங்கராளே....ஜன்னல் கதவுகளை எல்லாம் திறந்து வெளிச்சம் செய்துகொண்டு உற்றுப் பார்த்தார். முகத்தில் தலை மயிர் மறைத்துக்கொண்டிருந்ததால், அவர் "அடீ மைதிலி!" என்று தலை மயிரைப் பிடித்து உலுக்கியபோது, காத்தாயி விழித்துக்கொண்டு அலறியவாறு எழுந்து கிழவனைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

கிழவர் அவளை நன்ருக உற்றுப் பார்த்துவிட்டு, "அடி தடிப் பிணமே! ஐயையோ! மோசம்! மோசம்! காத்தாயி முண்டே யாடீ நீ? நீயாடி இந்த வேஷம் போட்டுண்டு அந்த முண்டெயெ வெளிலே அனுப்பிச்சுட்டே....அட ராமா! ஐயோ! வெக்கக்கேடே எண்டீ இப்படி வேஷம் போட்டுண்டு ஆட்ரே. எங்கேடீ அந்தக் கட்டெத் தடியன் கருப்பன்! அந்தச் சிறுக்கி மைதிலி எப்படி அந்த சோம்பேறிக் கூட்டத்துலே சேந்தா. உண்மெயே சொல்றயா கொண்ணுபுடட்டுமா" என்று அவள் தலை மயிரைப் பிடித்து உலுக்கினர்.

காத்தாயியா பயப்பட்ரவ! "ஊம். பச்சே கிளியே புடிச்சி கூண்டிலே வச்சி அடச்சாக்கா அது ஒரு காக்காயே அடெச்சு ஒன்னே வச்சுப்புட்டு பறந்து பூட்டுச்சு. அது தெரியல்லேயா" என்று ஏளனமாகக் கூறி விலகி நின்ருள். கிழவரின் ஆத்திரம் உச்ச நிலைமைக்கு எட்டி விட்டது. அவர் துணியை இழுத்து கட்டிக்கொண்டு, வீட்டையே பூட்டிவிட்டு ஓட்டமாக பஜனை வரும் இடத்திற்கு ஓடி வந்தார்.

அப்போது மைதிலி, தன் குயிலினும் இனிய குரலால் "தாய்மார்களே! நம் பாரத நாட்டின் க்ஷேமத்தைக் கோரி, நம் ஏழை சகோதர சகோதரிகளின் பஞ்சப் பிணியை-பசிப் பிணியை-

கண்ணீரைப் போக்குவதற்காக நீங்கள் எல்லோரும் சுதேசி சாமான்களையே வாங்குங்கள். நாலணா கொடுத்து காங்கிரஸில் சேர்ந்து தேச சேவையில் ஈடுபடுங்கள். தேசம் சுதந்திரமடைந்தால்தான் நமக்குச் சுகமுண்டாகும். பாரதத் தாய் கண்ணீர் விட்டுக் கதறும்படி நாம் பார்த்திருத்தல் தருமமா? முறையா? இது தகுமா? தகாது; தகாது. ஒரு நாளும் தகாது. பாரத அன்னையின் வயிறெரிந்த சாபத்திற்கு ஆளாவோம். அவள் விடும் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும் நம்மை அழித்துவிடும். சகோதரிகளே! அன்னையின் துயர் தீர்க்க இன்னமும் தாமதமா? நாலணா கொடுத்துக் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருங்கள்" என்று பிரஸங்கம் செய்வதுபோல் கூறுகையில், கண்கள் சிவக்க, தேகமே படபடக்க ஓட்டமாக கிழவர் அங்கு ஓடி வந்தார்.

"ஆஹ்ஹா! அடீ சண்டாளீ! இத்தனை நாள் பயித்தியம் போல வேஷம் போட்டு நடிச்சு, கடைசிலே இப்படியா ஆய்பூட்டே! இத்தனை தைரியமா ஒனக்கு வந்துட்டது. ஹா!....இரு இரு" என்று கூறிக்கொண்டே கையிலிருந்த கொடியைப் பிடுங்க வந்தார். மைதிலி கொடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "தாதா! இனுமே நான் பழைய மைதிலி இல்லே. நான் புனர்ஜென்மம் எடுத்த புது மைதிலி! எனக்கும் உமக்கும் இனி யாதொரு சம்பந்தமும் இல்லை. அனுவசியமாகப் பேசினால் ஒமக்குத்தான் ஆபத்து. நான் இனி மனிதருக்கு அடிமை இல்லை. பாரத மாதாவுக்கு அடிமை. மரியாதையாகப் போய்விடும். உமது கை வரிசைகளை ஆரம்பித்தால், உமது ஊழல்கள் சந்தியில் பறக்கும் என்பது ஞாபகமிருக்கட்டும். போய் வாரும். பாரத நாட்டின் நாரீமணிகளின் கௌரவத்திற்கு இழிவு உண்டாக்கும் செய்கையை நான் செய்யக் கூடாதென்ற கட்டுப்பாட்டுக்கு அஞ்சி, உம்மை இம்மட்டுடன் விடுகிறேன். பொறுமையைச் சோதிக்கவும் ஒரு எல்லையுண்டு. இனி ஆசிரமத்தைவிட்டு நான் வரமாட்டேன். தேசத் தொண்டே தெய்வத் தொண்டாகும். ஏழைகளுக் குழைப்பதே எனக்குச் சொர்க்கப் பதவியாகும். போய் வாரும்" என்று அத்தனை பெயரும் வியக்கும்படிக் கூறினாள். மேற்கொண்டு கூட்டத்தினர் வந்தேமாதரம் என்று கோஷித்தபடி நடந்தார்கள்.

வாஸந்தி மைதிலியின் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண் டிருந்ததை விடாமல் பிடித்தபடியே, "தாதா! தாதா! இனுமே ஒங்க ஜபம் சாயாது. ஒணம்னு நீங்களும் ஆசிரமத்துக்கு வாங்கோ பஜனை பண்ணலாம். காந்தி தாதாவைப்போல் ஆகணும்னு வேண் டுங்கோ" என்று முகத்தை நங்கு காட்டியபடியே கூறியவாறு சென்றுள்.

கிழவர் என்ன செய்வார் பாவம்! கூட்டமோ ஏராளமா யிருக்கிறது. ஏற்கெனவே கிழவரின் செய்கையை எல்லோரும் வெறுத்துத் திட்டுவது அவருக்குத் தெரியாமலில்லை. இப்போது தான் வாலை யாட்டினுல், வேணி விஷயத்தில் அவமானப்பட்டது, மூர்த்தியின் கையை உடைத்தது, மன்மத பாண சஞ்சீவி முதலிய ரகசியங்கள் அம்பலமாகிவிட்டால் என்ன செய்வதென்ற பயத்தினுல், கிழவர் பேசாமல் பெட்டிப் பாம்புபோலக் கூட்டத்தில் மெல்ல நழுவி மறைந்துவிட்டார்.

## 57

சிறைச்சாலையில் ஒரே கலாட்டா; ஊரில் எங்கே பார்த் தாலும் கூக்குரலாகவே இருக்கிறது. "எப்படித்தான் அந்தக் கைதி தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் இருக்கக்கூடும். இது நம்பமுடியாத ஆச்சரியமா யிருக்கிறதே! ராத்திரி லாக்கப் செய்த பிறகும் கைதிகள் அவரவர் உள்ளே இருக்கிறதை எல்லோரும் பார்த்தார்களாமே! அதிலும் அந்தக் கைதி ஒரு கை இல்லாத நொண்டி. எப்படித்தான் இந்தச் சிறைச் சாலையை விட்டுத் தப்பித்துக் கொண்டிருக்க முடியும்? இதில் ஏதோ சூதோ, வாதோ, மந்திரமோ, தந்திரமோதான் நடந்திருக்க வேண்டும்" என்று அதிகாரிகளும், வார்டர்களும் மற்ற கைதி களும் தனித் தனியே கூறுகிறுர்கள்.

இந்த விஷயம் தந்தியிலும், டெலிபோனிலும் போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் பறக்கிறது. எங்கு பார்த்தாலும் ஒரே

பரபரப்பு. மூர்த்தியின் புகைப் படத்தைப்பல முக்கியமான பத்திரிகைகளில் பிரசுரித்துக் கொட்டை எழுத்தில்,

"தர்ஜி மூர்த்தி,—ஒரு கை இல்லா நொண்டி, மாயக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவன்—ஜெயில் சாலையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடி விட்டான். அவனது புகைப் படம் இதோடு இருக்கிறது. அவனை யார் பார்த்தாலும் உடனே பிடித்துக் கொடுப்பவர்களுக்குச் சர்க்காரில் தகுந்த இனாம் கொடுக்கப்படும்."

என்று எழுதி இருந்தது. பிரபல பத்திரிகாலயங்களில் எல்லாம் பத்திரிகைகள் ஆயிரக் கணக்கில் ... போய்க் கொண்டிருக்கின்றன.

சிறு பையன்கள் உற்சாகத்துடன் ... படியே தெருவில் விற்கிறார்கள். எந்த மனிதரின் கையில் பார்த்தாலும் ஒரு பத்திரிகையும் அதைப்பற்றிய பேச்சுமாகவே இருக்கிறது. சிலர் அக்குற்றவாளியைப் பிடித்துக் கொடுத்தால் நல்ல வெகுமானம் கிடைக்குமென்றதால், எங்கு பார்த்தாலும் மூர்த்தியைத் தேட ஆரம்பித்து விட்டார்கள்.

இந்தப் பத்திரிகையை வேதாசலமும் பார்த்து வியப்பும் திகைப்பும் அடைந்து, "அட அநியாயமே! ஜெயில்லேந்து அந்த மாயக் கொள்ளைக்கார மூர்த்தி தப்பிச்சுண்டு ஓடி பூட்டானுமே! அட எழவே!" என்று ஆச்சரியத்துடன் மேல் உத்திரியத்தை இழுத்துப் போட்டுக்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓட்டமாக ஓடினர்.

## 58

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 183622

ஜைநிலிக்கு நன்றாகப் புத்தி தெளிந்த பிறகுதான் மூர்த்தி தண்டனை யடைந்து ஜெயிலிலிருப்பது தெரிந்ததாகையால், அந்த அனுதாபத்துடன் கிழவியையும் குழந்தைகளையும் ஆசிரமத்திலேயே இருந்து கவனித்து வந்தாள். கிழவிக்கு உடம்பு அதிகமாகி

விட்டது. ஸ்வாசம் ... இழுக்கிறது. அப்போதும், "மூர்த்தி! மூர்த்தி!" என்று ... பிட்டுக் கண்ணீர் வடிக்கும் கிழவியைப் பார்த்தால் யாருடைய ...ந்தான் கொதிக்காது?

மைதிலி, கிழவிய... அருகிலேயே உட்கார்ந்து பால் வார்ப்பதும், ஈ எறும்பு வராத...ட்டுவதும் குழந்தைகளைத் தேற்றுவதுமாக விருக்கிறாள். ஆ...த்துத் தலைவனுக்கு "சாகப்போகும் கிழவியை எப்படி இருப்... செய்ய முடியும். ஈசா! இப்படியும் சோதிக்கலாமா?" என்ற ...ளம் பொங்கி வருகிறது.

இரவு ஏற ஏற நோ...யின் பாதையும் அதிகரித்துக் கூட இருப்பவர்களின் திகிலும் ...்பது சகஜமல்லவா? கிழவியின் முழுப்பின் ஓசையும், "...!" என் று கூப்பிடும் சப்தமும் அந்த நிசப்தமான வேளையில் மிகவும் பயங்கரமாக விருந்தது. "ஐயோ! இந்த அவஸ்தை இல்லாமல் கிழவியின் பிராணனாவது சீக்கிரம் போய்விடக் கூடாதா!" என்று மைதிலி எண்ணிக் கண்ணீர் விடுகிறாள்.

விடியற்காலை நாலு மணி சுமார் இருக்கும். இந்தப் பயங்கர வேளையில் "ஆ! அம்மா! என்னருமை அம்மா! என்னுருயிர் அம்மா!" என்று கதறிக்கொண்டே மூர்த்தி, தன் தாயின் முகத்தோடு முகம் வைத்துக் கதறினான். சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்கும் மூர்த்தி இங்கு எப்படி திடீரென்று வந்தான் என்ற ஆச்சரியம் எல்லோரையும் பிரமித்துத் திடுக்கிடச் செய்தது. "ஹா! மூர்த்தியா! சிறையிலிருந்து எப்படி வந்தே?" என்று கேட்பதற்குள் மூர்த்தி "ஆம்! நான் கைதி என்ற போர்வையிலிருப்பவன்தான். தாயைப் பார்க்கும் மனோ வேகத்தினால் தப்பித்துக் கொண்டு வந்தேன்" என்றான்.

'அப்பா! அப்பா!' என்று கதறிக்கொண்டே வாஸந்தியும் ராஜுவும் ஓடிப்போய்க் கட்டிக்கொண்டார்கள். ச்வாஸம் வாங்கும் கிழவி தன்னருமை மகனின் குரலைக் கேட்டதும் ஏதோ ஒரு புத்துயிரும் சக்தியும் அடையப் பெற்றவளாய்க் கண்களை மலர விழித்துப் பார்த்தாள். "மூர்த்தி! மூர்த்தி!" என்று கூப்பிட்டாள்.

"அம்மா! மகா பாவி நான் இதோ வந்திருக்கேன். என் தாயே! நீ ஒருவிதமான குறைவுமின்றி இறைவனடி சேரப்

போகிறாய். மகா கொடிய சண்டாளனாகிய நான் தவிக்கிறேன். தாயைக் காக்கச் சக்தி இல்லாத கட்டை, அன்னையின் அந்திம காலத்தில் அனாதரவாய்விட்ட கட்டை இதோ இருக்கிறது. அம்மா! அம்மா! அம்மா! நான் உனக்குப் பிள்ளை இல்லை. உனக்கும் பிள்ளை சாக்ஷாத் நாராயண மூர்த்தி. பரமேச்வர மூர்த்தி. என்னை நம்பாதே. என்னை நினைக்காதே!" என்று கதறினான்.

கிழவி! "மூர்த்தி! மூர்த்தி! மூர்த்தி!" என்று மூன்று முறை கூப்பிட்டாள். அவள் க[illegible] தேஜஸ் பளிச் சென்று பிரகாசித்தது. அடுத்த [illegible]ன் ஆவி நீங்கியது. மூர்த்தி "அம்மா! அம்மா!" என்று கதறித் தாயின்மீது விழுந்தான்.

மைதிலி குழந்தைகளைக் கட்டியணைத்து, தூர அழைத்துக் கொண்டு போய்விட்டாள். பொழுதும் விடிந்துவிட்டது.

வாஸந்தி :—"அப்பா! பாட்டிகூட செத்துப் போயிட்டா! இனுமே எங்களை விட்டுப்போக மாட்டயேப்பா!" என்று கூறிக் கொண்டே தகப்பனாரைக் கட்டிக் கொண்டாள்.

மூர்த்தி :—கண்மணீ! வாஸந்தி! நான் ஒங்கப்பா இல்லெ. ஒங்கப்பா கோவில்லெ இருக்கர பெருமாள்தான். நான் கைதி இத்தனெ நாளா ஒரு பாவத்தையும் அறியாமல் அபாண்ட பழியால் கைதியாயிருந்தேன். தப்பு பண்ணாதே கைதியாயிருப் பதைவிட தப்பு பண்ணியே கைதியாகலாம்னுதான் இப்படித் துணிஞ்சேன்.

வாஸந்தி :—ஐயையோ! நீ கைதியாப்பா! திரும்பி ஜெயி லுக்குப் போயிடுவையா!

மைதிலி :—ஐயா! நீங்க எப்படி வந்தங்கோ! ஒங்களை போலீஸார் தேடிண்டு வந்துடுவாளே!

மூர்த்தி :—அம்மணீ! போலீஸார் என்னைத் தேடிண்டு வரத் துக்கு முன்னே நானே போலீஸாரிடம் போய் விடுவேன். என் அன்னையைப் பார்க்காமல் பறி கொடுக்க மனசு சகிக்கல்லெ. தெய்

வத்துக்கு என் வரையில் கண் இல்லேன்னுதான் சொல்லணும். ஒரு பாவமும் செய்யாதிருந்த என்னை ஒங்க புருஷ....

மைதிலி :—(இடை மறுத்து) ஹா....என்ன! என்ன! என் புருஷர் காட்டிக் குடுத்தாரா! சொல்லுங்கோ! விவரத்தைச் சொல்லுங்கோ.

மூர்த்தி :—அம்மணீ! அதெல்லாம் ஒன்னுமில்லெ. என் தலை விதி என்னைப் பழி சுமக்கச் செய்தது. குத்தம் செய்யாமல் சிறையிலடைபட்டுச் சா... பெத்த தாயைப் பார்த்துவிட்டுக் குத்தத்தோடுதான் ... சந்தோஷமாக இருந்தால் போரா துன்னு தான் தப்பித்து... இரவோடிரவா வந்துட்டேன். என் தாயாரை இப்போது நான் பார்க்காதிருந்தா இனுமே எந்த ஜென்மத்துலெ பார்ப்பேன். அதனால்தான் இங்கு ஓடி வந்தேன்.

தலைவன் :—(தயங்கியபடியே) ஐயா! நீங்க கோவிச்சுக்கக் கூடாது. நீங்க தாயின் அளப்பரிய அன்பினால் தப்பித்துக் கொண்டு வந்ததை உலகம் அறியாது. அதோடு ஏற்கெனவே எங்கள்மேல் கண் பார்வையுடனிருக்கும் போலீஸ்காரர்கள் நீங்கள் தப்பித்ததற்கு நாங்கள்தான் உடந்தை என்று கற்பனை செய்து ஆசிரமத்தையும் அதிலுள்ளோரையும் துன்புறுத்து வார்கள். தயவு செய்து........

மூர்த்தி :—"ஐயா! நீங்கள் சொல்லாமலேயே எனக்குத் தெரியும். அதோ வாசலில் பையன்கள் பேப்பர் விற்கிறார்கள் கேட்டீர்களா? "மாயக் (கொள்ளையில் சம்பந்தப்பட்டுச் சிறைச் சாலையிலிருந்த கைதி மூர்த்தி தப்பித்து விட்டான். அவனைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனும். காலணு பேப்பர். காலணு!" என்று விற்கும் சப்தம் கேட்டது.) ஐயா! என்னை நீங்களே காட்டிக் கொடுத்து அந்தப் பரிசுத் தொகையைப் பெற்று ஆசிரமத்திற்கு உதவி செய்யுங்கள். நான் இந்த ஊர்க் கோடியிலிருக்கும் பாழும் சத்திரத்திலிருக்கிறேன். நீங்க அங்கே வந்து என்னைப் பிடித்துக் கொடுங்கள். ஆசிரமத்திற்காவது உதவி கிடைக்கட்டும். நான் இங்கு வந்தது, போனது ஒன்றும் தெரிய வேண்டாம்,....நான் போறேன்....அம்மணீ! இந்தப் பர

தேசிகள் உங்களுடையது. கண்ணா வாஸந்தி! ராஜூ! என்னெ மறந்துடுங்கோ! என்னெ மறந்துடுங்கோ!" என்று கண்ணீர் பெருகக் கூறியவாறே தாயாரைப் பிரதக்ஷணம் செய்து நமஸ் கரித்துவிட்டுப் பதிலுக்கும் எதிர் பார்க்காமல் சடக்கென்று சென்று மறைந்தான். இதைக்கண்டு எல்லோரும் திகைத்துப் போய் விட்டார்கள்.

## 59

"என்ன ஆச்சரியம்! தங்க ஆசிரமத்திலிருக்கும் குழந்தைகளின் தகப்பனர் என்றதுகூட கவனிக்காமல் ஆசிரமத்துத் தலைவன் மூர்த்தியைப் பிடிச்சுக் குடுத்துட்டு 1000 ரூபாயெ சொள சொளன்னு வாங்கிண்டு பூட்டானுமே!" என்று பொதுஜனங்கள் எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகப் பேசுகிருர்கள். இதனால் அந்தத் தொண்டனின் மதிப்பும் கவுரவமும் அதிகரித்தது. இவ்விஷயத்தில் ஆசிரமத்திலுள்ள எல்லோரும் கட்டுப்பாடாக இருந்தது மிகவும் மெச்சத் தகுந்ததேயாகும்.

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் தன் வீட்டில் இந்த மாயக் கொள்ளை நடந்துவிட்ட பின்னர் எப்பாடுபட்டேனும் அந்தக் கூட்டத்தைத் தான் கண்டு பிடிக்காது விடுவதில்லை என்ற தீர வைராக்கிய சங்கலங் கட்டிக் கொண்டார். இவர் கீழிருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் அங்கு வந்து "எஜமான்! நீங்கள் சொன்னபடியே 28 நம்பர் வீட்டை வாச் செய்ததில் சந்தேகமாத்தான் இருக்கு. அவர்களில் சிலரைப் பார்த்தால், காட்டு மிருண்டிகள் போலிருக்கிருர்கள். அங்கு நான் ஒட்டுக் கேட்டதில் 'மலைக் குகை' என்ற வார்த்தை மட்டும் காதில் விழுந்தது. அது ஊர்க் கோடியிலிருப்பதாகத் தெரிகிறது. 'ச. ம. கு.' என்று ஏதோ சொல்கிருர்கள். அது எனக்குப் புரியவில்லை" என்ருன்.

ஏகாம்பரம் :—"என்ன! ச. ம. கு. என்ரு சொல்கிருர்கள். சங்கராபுரம் மலைக் குகை என்ற அர்த்தமிருக்கலாமோ! சரி! நீ

போய் வறகு சுள்ளி ஒரு சொமை உடைத்துக் கட்டி தோட்டத்துப் பக்கம் வை. நான் வரேன்” என்று அனுப்பிவிட்டுத் தானும் தோட்டத்திற்குச் சென்ருர்.

தோட்டத்திலுள்ள ஒரு குடிசையிலிருந்து ஏகாம்பரம் வெளிவரும்போது அவரை யாரும் ஏகாம்பரமென்று சொல்லவே முடியாது. அசல் பட்டிக்காட்டு மனிதன்போல் முழங் காலுக்கு மேல் வரிந்து கீழ்ப்பாச்சி கட்டிக் கொண்டு, பெரிய மீசை வீர பத்திரசாமியைப்போல் வைத்துக் கொண்டார். பெரிய துணியைத் தலைக்கு முண்டாசாகக் கட்டிக் கொண்டு நெற்றியில் பட்டையாக நாமத்தைப் போட்டுக் கொண்டு விறகு சுமையைத் தலையில் தாங்கியபடியே இவர்களுக்கு ஏதேதோ குறிப்புகள் கூறி விட்டு வேகமாக நடக்கவாரம்பித்தார்.

## 60

ஜாமீ! ஓ! ஜாமீ! இருவத்தெட்டாம் நம்பரு பங்காளா இதுங்களா! ஜாமீ! யாரு உள்ளரகிறது—என்று விறகு சுமையுடன் கத்தினர். உள்ளிருந்து ஒரு வாலிபன் எட்டிப் பார்த்தான். “யாருடாது கூச்சப் போட்ரது?” என்ருன்.

நாட்டுப்புறத்தான் :—“இப்பிடி வாங்க ஜாமீ! ஒரு ஜமாஜாரம். நானு காட்டுலே கட்டெ, சுள்ளி, அல்லாம் பொறுக்கி பொழக்கர வனுங்க. இன்னிக்குச் சுள்ளி பொறுக்கச்செலெ யாரோ ஒரு ஆளு அந்த காட்லே ஏதோ பச்செலெ கிள்ளிகினு இருந்தான். அவனுக்கு திடீன்னு மாரடச்சி மழக்கமா வந்திடுச்சாம். நான் சுள்ளி பொறுக்கிகினு இருக்கச் செல ‘இங்கே வாய்யா! ஐயா!’ இண்ணு பலவீனமா கூட்டானுங்க. ஆபத்துன்னுக்கா அல்லாருக்கும் ஒன்னுதானே ஜாமீ! ஓடியாந்தேன். அவன் இந்தத் தெரு அடயாளத்தெ சொல்லி, “28-வது நம்பரு ஊட்டெ விசாரிச்சிகினு போடா! போயி. ச. ம. கு. ஆளு காட்லே மழக்கமாகிரான்;

சீக்கரம் அங்கே வரச் சொன்னுங்கன்னு சொல்லிட்டுப் பூட்ரா” இண்ணு சொன்னன்.

ஜாமீ! சொல்லிப்புட்டேன். எங்க ஊட்டெ எம் பொண்ணுக்குக் கொயந்தே பொறக்கப் போவுது. அவளே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும். பாடுபட்டுகிணுக் கீரா! எம் பொண்டாட்டி செத்துப் பூட்டா! ஏதாச்சும் இந்த ஏயெக்கி ஒபகாரம் பண்ணுக்கா ரொம்ப நல்லதுங்க” என்று தான் கூறும் போதே அந்த ஆளின் முகத்தின் போக்கைக் கவனித்து மனத்திற்குள் பதிய வைத்துக் கொண்டார்.

இதைக் கேட்டதும் அந்த ஆள் சற்றுப் பதறிப்போய் “என்ன! என்ன! மயக்கமா விழுந்துட்டானு. நீ பாத்தையா?” என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

ஏகாம் :—ஆமாங்க. மாரடைக்கராப்போலெக் கீதுன்னு சொன்னுனுங்க. ஆள் நல்ல வாட்டசாட்டமாக்கீரானுங்க. சீக்கிரம் போங்க—என்றதும் முகத்தில் பலவித களைகள் வந்து அம் மனிதனை மூடிக் கொண்டன. “சரி! போடா! இந்தா!” என்று ஒரு ரூபாயை ஏகாம்பரத்தினிடம் வீசி எறிந்துவிட்டு அவசரமாக உள்ளே போனுன். ஏகாம்பரமும் ரூபாயை வாங்கிக்கொண்டு நமஸ்காரம் செய்துவிட்டுப் பின்னர் நகர்ந்தார். கால் இடறித் தடுக்கி விழுந்தவன்போல் பாவனை செய்து சுள்ளிகளைக் கீழே கொட்டிவிட்டு, அதைப் பொறுக்கும் நடிப்புடன் உள்ளே என்ன பேச்சு வருகிறதென்று கவனித்தார்.

உள்ளே சென்றவன் குசு குசுவென்ற குரலில் “மாயாண்டீ! உடனே காரைப் போட்டுக்கொண்டு பச்சிலைக் காட்டுக்குப் போ. அங்கு யாரோ நம்ப ஆள் மயக்கமா விழுந்துவிட்டானும். ஒரு விறகுதலையானிடம் அவன் சொல்லியனுப்பினுன். ஏற்கெனவே போலீஸ் பருந்து வட்டமிட்டுக்கொண்டே இருக்கு. அந்த ஆள் மயக்கமா விழுந்து கடக்கச்சே பச்சிலையுடன் கையும் மெய்யுமா புடிச்சிப்புட்டாக்கா கஷ்டம். அவனண்டே நம்ப போராத காலத்துக்கு ஏதாவது அடையாளம் அகப்பட்டுவிட்டால், அதோகதி தான். ஓடு சீக்கிரம் ஓடு. உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வண்டியிலே போட்டுண்டு வா” என்று கூறினுன்.

இதை வீதிப்பக்கம் உள்ள ஜன்னலுக்குச் சமீபத்தில் நின்று பாம்பு சுழி போன்ற செவியில் வாங்கிக்கொண்ட ஏகாம்பரத்தின் சந்தேகம் நன்ருக நிவர்த்தியாகிவிட்டது. உடனே அவர் மனத்தில் எங்குமில்லாத ஓர் புதிய சக்தியும் தெம்பும் குபீரென்று கிளம்பியது. "தான் இந்த நிமிடமே இவர்களைக் கைது செய்து விடலாமாவென்று எண்ணினர். ஆனல் அடுத்த நிமிடம் யோசனை மாறிவிட்டது. ச. ம. கு. எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது முக்யமல்லவா? பிடிபட்டவர்கள் உயிருக்கும் துணிந்தவர்கள்தானே. அதைச் சொல்ல மறுத்துவிட்டால் பிறகு வேலை முற்றுப் புள்ளி விழாது போய்விடும்" என்று தீர்மானித்துக் கொண்டு சுள்ளியுடன் வெளியில் வந்தார். அங்கு தயாராயிருந்த சப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "இப்போது இங்கிருந்து புறப்படும் காரை பின்னுலேயே தொடர்ந்து சென்று நடு வழில் காரோடு ஆளைப்பிடித்து கைதியாக்கிவிடு. மிகுதியை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ருர்.

## 61

வேதாசலத்திற்கு மைதிலி ஊர்வலத்தில் கூறிய வார்த்தைகளால் நெஞ்சு கொதிக்கின்றது. வீட்டை விட்டு வெளியில் வராத பெண்பிள்ளைகளெல்லாம் இவளைக் கண்டு பெரிய மதிப்பும், பக்தியும் வைத்துத் தாமும் வெளியில் வந்து பஜனையில் கலந்து கொள்ளும் ஆச்சரியத்தைக் காண அவருடைய ஆத்திரத்தை இன்னும் தூண்டி எரிய விடுவதுபோலவிருக்கிறது. தன்னை அத்தனை பெயர்களின் முன்னிலையில் அவமானப்படுத்திய மைதிலியைக் கொலை செய்தாலும் தீராது என்ற துணிபும் கடுங் கோபமும் அவருக்கு மூண்டுவிட்டது.

காங்கிரஸ் என்ருலே விஷமாக எண்ணும் கிழவருக்குத் தன் மனைவியே அதில் சேர்ந்ததுடன் நில்லாமல் தன்னையும் அவமானப்

படுத்திப் பேசியதை அவர் எப்படிச் சகிப்பார்? இதற்கு என்ன யுக்தி செய்து அவளை இங்கு இழுத்துக் கொண்டு வரலாம்? என்று பலமாக யோசனை செய்துகொண்டே உட்கார்ந்திருந்தார். அவருடைய யோசனை பலமான வழியில் சென்று முடிவைக் காட்டியது. உடனே எழுந்து தடதடவென்று ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்.

அப்போது அந்த ஆசிரமத்தில் அந்திவேளை பூஜை நேரமாக இருந்ததால், எல்லோரும் கடவுள் படத்திற்கு முன்னால் உட்கார்ந்து பக்தி சிரத்தையுடன் பகவத்கீதை ச்லோகமும் தேசியப் பாடல்களும் பாடி, பஜனை செய்து கொண்டிருக்கும் கீத ஒலி, நாத ஒலி, கிழவர் வீதியில் வரும்போதே அவர் காதில் நாராசம்போல் விழுந்தது. முகத்தைச் சுளித்தும், செவியைப் பொத்திக் கொண்டும், தொப்பையையும் தலையையும் தடவிக் கொண்டும், கையை நீட்டி மடித்தும் பலவிதமான அங்க சேஷ்டைகளினால், தன் வெறுப்பைத் தெரிவித்தார்.

இந்தப் பஜனை சமயத்தில்தான், தான் சென்று அட்டகாஸம் செய்ய வேண்டுமென்று எண்ணியவராய், கிழவர் தட தடவென்று விசையாகக் கைகால்களை ஆட்டிக் கொண்டே உள்ளே சென்றார். அப்போது கவிச்சக்ரவர்த்தி பாரதியார் பாடியுள்ள, "என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்" என்ற பாட்டை மைதிலியும், வாஸந்தியும் சேர்ந்து யாழும் குழலும், தேனும் பாலும் இனிப் பதுபோல் இனிமையாய், கர்ணாம்ருதமாகப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அச் சமயம் ஊசி போட்டாலும் ஓசை கேட்கும்படியான நிசப்தம் குடி கொண்டிருந்தது. அத்தகைய மனோகரமான சமயத்தில், 'சிவ பூஜை வேளையில் கரடி பாய்ந்தது' என்பதுபோலக் கிழவர் தன் பீரங்கிபோன்ற தொண்டையால் ஒரு பெருங் கனைப்பு கனைத்துக் கொண்டே வந்து சேர்ந்தார். எல்லோரும் அசந்து போய்த் திரும்பிப் பார்த்தார்கள். வாஸந்தியும், மைதிலியும் பாட்டைச் சடக்கென்று நிறுத்திவிட்டு, இந்தப் பக்கமே பார்த்தார்கள். வாஸந்திக்குக் கிழவரிடம் உள்ளூறப் பயமாதலால் அவர் முகத்தைப் பார்த்ததும் பயந்து கொண்டே, மைதிலியை இழுத்துக் கட்டிக் கொண்டாள்.

மைதிலி மகா சாந்த சொரூபியாய் வாஸந்தியை விட்டு விட்டுத் தட தடவென்று உள்ளே சென்று, ஒரு கதர்க் குல்லாய், சால்வையோடு வெளியில் திரும்பி வந்து "தாதா! வாங்கோ! வாங்கோ! ஏதேது நல்ல காலம் பிறந்து விட்டது போலிருக்கே! பாரத மாதாவின் அருள் கிடைத்து விட்டதா?" என்று

கூறிக்கொண்டே கிழவரின் தலையில் குல்லாயை மாட்டி, சால்வையை மேலே போட்டுவிட்டு, "பேஷ்! பேஷ்! தாதா! தாதா! வெகு அழகாயிருக்கு. அசல் நம் தேசத் தலைவர்போலிருக்கிறது" என்று கூறினாள். எல்லோரும் சிரித்தார்கள்.

வாஸந்தியும், ராஜுவும் "தாதா! தாதா! காந்திக்கார தாதாவாயிட்டீர்களே! பேஷ்! தாதா!" என்று சிரித்தார்கள். இந்தச் செய்கைகளெல்லாம் தன்னை அவமானப்படுத்தி ஏளனம் செய்வதாகக் கிழவருக்குத் தோன்றிவிட்டது. தேகம் பட படக்கக் கண்கள் சிவந்து நாலா பக்கமும் உருள, அடித் தொண்டையால் கர்ஜித்தபடியே குல்லாயையும் சால்வையையும் கழற்றி விசி எறிந்தபடியே, "தூத்தூ! தரித்திர மூதேவித் துணிக்குப் படிகிறவன் நானா? உங்கள் எல்லோருடைய வேஷமும் தெரியும்டீ; தெரியும்.

அடேய் வேஷக்காரா! தலைவனும் தலைவன்! வெட்கங் கெட்டத் தலைவன்! காந்தியாம் காந்தி! காரா பூந்தி! ஒங்க காந்தி இப்படித்தான் ஊரான் பெண்டாட்டியை இழுத்துண்டு வந்து கூத்தடிக்கச் சொல்லி இருக்கானோ? ஒங்க காங்கிரஸின் சத்திய சேவை இதுதானோ? இருடா! இப்பவே ஒம்மேலே பெரிய போலீஸ் கம்ப்ளேண்டு குடுத்து ஒன்னே என்ன பாடு படுத்தப் போறேன் பாருடா? என் பெண்டாட்டியெ எப்பிடிடா நீ இங்கு இழுத்துண்டு வருவே?" என்று அடாத வார்த்தைகளாகிய பாணத்தை மகா சாதுவாயும் சத்தியசந்தனாயும் இருக்கும் தலைவன்மீது பிரயோகித்ததைக் கேட்ட உடனே ஆசிரமமே பூகம்பத்தினால் ஆடுவதுபோல் ஒரு ஆட்டம் ஆடியது.

மைதிலியின் தலையில் பெரிய இடி விழுந்திருந்தால்கூட இத்தனை அதிர்ச்சியும் தத்தளிப்பும் ஏற்பட்டிருக்காது. தலைவன் ஒன்றுமே சொல்லத் தெரியாது செயலற்றுத் துவண்டு சுவருடன் சாய்ந்து விட்டான். ஒரு சில வினாடிகள் எல்லோருடைய ரத்தமும் கொதித்தது. நிசப்தம் குடி கொண்டது.

பிறகு, சற்றுத் தெளிவு பெற்ற தலைவன், தட தடவென்று வந்து கிழவரின் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, சாஷ்டாங்கமாய் கீழே விழுந்து வணங்கியவாறு, "ஐயா! நீர் எத்தனையோ பெரியவர்; உலகானுபவங்களை அறிந்தவர். அப்படி இருக்க இந்த ஏழையின் மேல் இப்படிப்பட்ட அபவாதத்தைச் சொல்ல எப்படித்தான் துணிந்தீர்? இந்தப் பாரத மாதா சாக்ஷியாக நான் ஒரு பாபமும் செய்யல்லே! அவரவர்களுக்கு இருக்கும் சுதந்திரத்துடன் அந்தம்மாளே இங்கு வந்து தேச கைங்கரியம் செய்கிறாளேயன்றி, அவர் மிதித்த மண்ணும்

நீர் நினைக்கிறபடிச் செய்யாது. இது கடவுளறிய உண்மை. அநியாயமாய் இனிமேல் இப்படி பேசாதெங்கோ! இது தெய்வத் துக்குப் பொறுக்காது” என்று முடிப்பதற்குள்,

“ஆமாண்டா! திருட்டுப்பயலே! செய்யறதையும் செய்து புட்டு தெய்வமாம் தேவாதியாம். நீ தெய்வத்தெ கரை கண்ட வண்டா! கண்டவன்! அந்தத் தெய்வம் இருக்கறது உண்மையானு வந்து நேரே சொல்லட்டுண்டா? வேஷக்காரப் பரதேசிப் பயலே! பிச்சைக்காரப் பயலே!” என்று கிழவர் ஆத்திரத்துடன் பேசுகையில்,

மைதிலி ரணபத்திர காளியைப்போல் இழுத்துக் கட்டிக் கொண்டு, கிழவரின் முன்புவந்து, “தாதா! நீங்க மனுஷத்தனமாக நடக்கப் போறங்களா அல்லது வேறே விதமா பேசப்போறங் களா? நானும் பொறுமையையும் பெருமையையும் இழக்கக்கூடா தூன்னு பாத்துப் பாத்துதான் இதுவரை என் விதியைக் கடத் திண்டு வந்தேன். இன்னமும் வரேன்.

தாதா! உலகத்தில் ஒரு ஜென்மம் இருந்தகுன்னு அதனுல் பிறருக்காவது சுகமிருக்கணும்; நன்மை இருக்கணும் அல்லது தன்னலத்துக்காவது உபயோகப்படணும். ரெண்டுங்கெட்டு, இருக் கற பாவத்துக்கெல்லாம் உடந்தையா யிருப்பதோடு, பயித்தியம் பிடித்துப் பாழாப்போக இனிமேல் உடன்பட மாட்டேன். என் ஜென்மத்திற்கும் சாபல்யமாக ஒரு வழியைக் கடவுள் காட்டினுர். அதை நான் இனுமே விடமாட்டேன். அனுவசியமாக வாயை விடாதேங்கோ! உத்தமர்களின் வயிறை எரியச் செய்யாதேங்கோ! ஒரு குடும்பத்தெக் கொலே பண்ணி சின்ன பின்னமா சிதறவடிப் படுத்தவிடக் கேவலமானது வேறே ஒண்ணுமே இல்லெ.

தாதா! என் வயித்தெரிச்சலே கௗப்பாதேங்கோ! நான் இப்பவும் என் சாந்தத்தை இழக்காமல் அதன் எல்லேயிலிருந்து தான் பேசறேன். ஒங்க நெஞ்சிலே நீங்க கையை வைத்துக் கொண்டு பாருங்கோ? அப்போ தெரியும் குற்றவாளி நீங்களா, நானு அல்லது அந்தத் தலைவரா என்பது. இப்பகூட ஒன்னும் முழிகிப் போகல்லே. நடந்ததெல்லாம் போகட்டும். இந்தப் பாரதமாதாவுக்கு அடி பணிந்து, தேசத்தொண்டில் ஈடுபட்டு தேசத் துக்கும் தேசமக்களுக்கும் ஒழைச்சு ஒங்க பாவத்தெப் போக்கிக் கிங்கோ. தேசம் யாரையும் ஏத்துக் கொள்ளும். தேசப் பணியே தெய்வப் பணி என்ற மகாத்மா வாக்கியத்தை விருதமாக எடுத்துக் கொண்டு நடவுங்கள். வேணியின் சாபம் இதனுல் தீரட்டும். மூர்த்தியின் மனக்கொதிப்பும் இதயத் துடிப்பும் இதனுல் குறை யட்டும்” என்று சரமாரியாகப் பொழிந்தபடியே மறுபடியும்

காந்திக் குல்லாயையும், கதர்ச்சால்வையையும் எடுத்துக் கிழவருக்கு மாட்டினாள்.

கிழவரா இதற்கு மசிகிறவர்? "ஆஹ்ஹா! ஒங்களைப்போல என்னேயும் சோம்பேறிக் கூட்டத்துலேயா சேரச் சொல்றே! இரு! இரு. இந்தத் திமிரெல்லாம் அஞ்சு நிமிஷத்துலே அடக்கிப் புட்றேன். நீ இப்போ வீட்டுக்கு வரப்போறயா, இல்லையா? ஒங்க மேலே கம்ப்ளேண்டு குடுத்து சந்தி சிரிக்க அடிச்சுடட்டுமா!" என்று கூறி முடிப்பதற்குள், மைதிலி "ஹா! ஹா!....அப்படியா செய்யப் போறங்கோ! பேஷா செய்யுங்கள். சந்தி மட்டுமல்ல. உலகமே சிரிக்கும்படி என் தலைவிதி இருந்தால், அதைத் தடுக்க யாரால் முடியும்? கடவுள் என் பங்கிலிருந்தால், எது சந்தி சிரிக்குமோ அவர் காட்டிவிடட்டும். நான் வீட்டிற்கு வந்தால், வீடும் இதேபோல் ஒரு ஆசிரமமாகத்தான் ஆகும். அதற்குச் சம்மதமானல், இதோ இப்போதே வறேன்.

கிழவர் இடைமறுத்து, "என்ன! என்ன! ஆசிரமமா! ஆசிரமம்! ஓஹோ! இந்த வேதாசலமா இதற்கு இடங் கொடுப்பான்? சீச்சீ! மூதேவியே! இரு; இரு. உன்னை வெக்க வேண்டிய எடத்துலே வெக்கரேன்" என்று கூறிக் கொண்டே வெகு விசையாய்ப் போய் விட்டார்.

ஆசிரமத்துத் தலைவன் மைதிலியின் காலில் விழுந்து வணங்கி, "அம்மணீ! தாயே! ஒங்க புருஷன் இருக்கர வேகத்தெ பார்த்தால் ஆசிரமத்துக்கும், ஆசிரம வாசிகளுக்கும், எனக்கும்— நம் காங்கிரஸின் கௌரவத்திற்குமே—பெருத்த ஹானியையும், அபவாதத்தையும் உண்டாக்கி, வீணாக உபத்திரவம் செய்வார்போலிருக்கு. நீங்கள் இந்த ஏழைத் தொண்டன்மேல் ஆயாசப்படாமல், கோபிக்காமல், தயவு செய்து உங்கள் வீட்டிற்குப் போய் விடுங்கள். உங்களுக்குக் கெட்ட பெயரும் எங்களுக்கு ஆபத்தும் ஒன்றும் இல்லாமல் போய்விடும்.

தாயே! ஏற்கெனவே சில போலி காங்கிரஸ்காரா மேலே இருக்கும் ஊழல்கள் ஒன்னென்னு வெளியில் வரத்தெ நாம்ப பார்க்கிறோம். நாம் அநியாயமா ஒரு பாவமும் இல்லாமெ கெட்ட பெயர் வாங்க வாண்டாம். தயவுசெய்து போயிடுங்கோ. அவருக்கும் புத்தி திரும்பி, நல்ல காலம் பிறந்தால், ரெண்டு பேருமா ஆசிரமத்துக்கு வாங்கோ" என்று கண்ணீர் பெருகக் கூறினன்.

மைதிலியின் செவியில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் நின்ற இடத்திலேயே கல்போல் நின்றுவிட்டாள். அவள் இதயமாகிய உலகத்திற்குள் எண்ணங்களாகிய புயற்காற்றடித்துப் பெரிய

பூகம்பத்தை உண்டாக்கிவிட்டது. அந்த உலகமே தலை கீழாகச் சுற்றுவதுபோல் தோன்றியது. "ஆம்; வாஸ்தவம்! உலகம் நன்மை தீமை யறியாது. தலைவனுக்கும் ஆசிரமத்திற்கும் இழிவு வரும் என்பது உண்மைதான். நெருப்புக்குச் சமமாக இதுகாறும் இருந்த நமக்கும் கேவலமான பழியாகிய போர்வை வந்து சேரும். என்னால் இந்த ஜென்மத்தில் ஒரு சிறு துரும்புக்கும் உபகாரமில்லை எனின், உபத்திரவமாவது இல்லாதிருக்க வேண்டுமல்லவா?"

"ஏ பாவி! உனக்கு எங்கும் இடங் கிடையாது. எங்கும் நிம்மதி கிடையாது. என்றும் சுகங் கிடையாது. இன்னும் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்துச் சாக வேண்டுமோ அதற்குத் தயாராகவிரு. உடனே இந்தப் புனிதமான இடத்தைவிட்டுப் போய்விடு. நிற்காதே. உன்னால் புனிதமான ஆசிரமத்தைப் பாழ்படச் செய்யாதே" என்று அவள் மனத்திற்குள் ஏதோ ஒரு அந்தராத்மா கூறியது.

**வாய்** திறக்கவில்லை. கண்ணில் நீர் தாரை தாரையாகப் பெருகுகிறது. பாரதமாதாவின் முன் விழுந்து வணங்கி எழுந்தாள். புலம்பும் வேகத்தினால் நாக்கு நடுங்குகிறது. கைகுவித்தபடியே எல்லோரையும் நீர்வழியும் கண்ணால் ஒரு சுற்றுப் பார்த்தாள். வாஸந்தியையும் ராஜுவையும் இறுகக் கட்டி யணைத்துக் கொண்டு, ஒரு முத்தமிட்டாள். தலை குனிந்தபடியே சொர்ண விக்ரகம்போல் நடந்து சென்று விட்டாள்.

**ஆ**சிரமத்திலுள்ள அத்தனை பெயர்களின் கண்களும் தாமரையிலையின் நீர்போல் தண்ணீர் துளிகளைச் சிந்துகின்றன. வாஸந்தியும், ராஜுவும் மட்டும் "மாமீ! மாமீ!" என்று வீறிட்டுக் கத்தினார்கள். அத்தனை பெயர்களின் இதயத்திலும் கோடாரி கொண்டு பிளப்பதுபோல் படபடக்கின்றது. அச்சமயம் வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த சந்திரனும் மேகத்திற்குள் மறைந்தான். ஆசிரமத்திலிருந்த எல்லோருடைய மனத்தையும் போல் ஆகாயமும் இருண்டது.

## 62

"ஆஹா! இந்த உதவாக் கட்டைக்குக்கூட தினந் தோறும் கோவிலின் ஆனந்தமான பூஜை நேர மணியோசை கேட்டு அதனல் கொஞ்சம் சந்தோஷத்தை உண்டாக்குகிறன் என்னப்பன். இப்பாழும் ஜென்மத்துக்கு முடிவு காலமும் இல்லைபோலிருக்கு. சிறைவாசம் செய்ய விதி இருக்கும்னு யாராவது சொப்பனமாவது கண்டிருப்பாளா! என் வேணி மகா லக்ஷ்மிபோலக் கிளம்பிவிட்ட அப்பறமே என் வாழ்வு முற்றும் தாழ்வாய்விட்டது.

ஐயோ! அது எப்படி இருந்தாலும் நான் ஒரு குத்தமும் செய்யாமல் அபாண்டப் பழியை ஏந்தி ஜெயில்லே இருக்கேன்றது மட்டுமாவது கடவுள் விளக்குவாரா? எனது நிரபராதித்தன்மையை உலகம் அறியுமா? ஊம். ஏது? அறிவது ஏது? உண்மைக்கு இந்த உலகத்தில் மதிப்பில்லை. சத்தியத்திற்குச் செல்வாக்கில்லை. நிரபராதிக்கு நியாயமில்லை.

அநியாயக்காரனுக்குத்தான் நீதி கிடைக்கிறது. அசத்யத்தைத் தான் ஜனங்கள் நம்புகிறார்கள். அதுக்குத்தான் மதிப்பும் கொடுக்கின்றனர். ஹா! விதியே! நீ செய்யும் கூத்து இப்படியா தலைகீழா இருக்கணும்; உண்மைக்கு மதிப்பில்லை. நியாயத்திற்கு ஆதரவில்லை" என்று மூர்த்தி சிறைச்சாலைக்குள்ளேயே உட்கார்ந்து கண்ணீர்விட்டுக் கலங்கியவாறு சிந்திக்கையில், வானக்குயிலின் அபூர்வ கானம் பின் வருமாறு அவனுக்குக் கேட்டது.

(முன் தொடர்ச்சி)

வத்திடாக் கடல்போல் மதி, ரவி, வானம்போல்
சத்தியம் அழியா ; அசத்தியம் வீழ்ந்திடும்
தத்துவங் காண் மனமே! (தூய்மை)

என்ற தீங்குயிலினும் இனிய கானத்தின் ஒலியைக் கேட்ட மூர்த்தியின் மனம் அப்படியே ஆனந்தப் பரவசமுற்று, மதியைக் கண்டு ஆம்பல் மலருவதுபோல் மலர்ந்தது. ஹா! இறைவா! பகவானே! இந்தத் தேவகானம் எங்கிருந்து வருகிறதோ! அல்லது நீதான் பாடுகிறயோ? உண்மை! உண்மை! கடலுக்கு வற்றுதலில்லை. வானத்திற்கும் சூர்யன், சந்திரன் முதலிய கிரகங்களுக்கும் அழிவே இல்லை. அதுபோல சத்தியத்திற்கும் நீதிக்கும்

அழிவில்லை என்ற அற்புதமான வாக்கியம் என்ன பிரம்மானந்தமா யிருக்கிறது. ஹா! அப்படியும் ஒரு காலம் வருமா?" என்று மயங்கி அப்படியே சாய்ந்தான்.

அச்சமயம் மூர்த்திக்கு வேண்டிய வார்டர் அங்கு வந்து, "மூர்த்தி! ஒரு ரகசிய விசேஷங் கேட்டாயா? அந்த மாயந் தொள்ளெலெ சேர்ந்த பல பேரைப் போலீஸ்காரா ரொப்ப சிரமப்பட்டுக் கண்டு பிடிச்சுட்டாளாம். எத்தனையோ ரகசியமான துப்பெல்லாம் கிடைச்சிருக்காம். போலீஸ்காரா ரொம்ப சந்தோஷமாயும் குசாலாயும் வேலை செய்யராளாம். ஒரு வேளை ஒன்னுடைய நிரபராதித்தன்மைகூட கடவுள் கிருபையால் வெளிப்பட்டாலும், படலாம் அல்லவா?" என்று அன்போடு கூறினான்.

மூர்த்தி, "ஹா! அப்படியும் ஒரு காலம் வருமா? என் கண்மணிகளை நான் கட்டித் தழுவி முத்தமிட்டு, அவாளோடே கூடவே இருந்து மகிழும் பாக்கியம் கிடைக்குமா?....உம். மகா பாவி நான். எனக்காவது, கிடைப்பதாவது?" என்று சலிப்புடன் சொல்லிக் கண்ணீர் விட்டபடியே பசங்கள்மீது கவனம் பாய, பிரமித்துப் போய் விட்டான்.

## 63

ஆத்திரத்துடன் வீடு சென்ற கிழவர் சற்றும் முன்பின் யோசிக்காமல் பேனாவைப் பிடித்து ஆசிரமத்துத் தலைவன்மீது, தன் மனைவியை இழுத்துக் கொண்டு போய் விட்டதாகக் குற்றச்சாட்டு, கை கூசாமல் தட தடவென்று எழுத வாரம்பித்து விட்டார். அதில் பெரும் பாகமும் காங்கிரஸையும், ஆசிரமத்தையும் தாறுமாறாகத் திட்டுவதற்கே சரியா யிருந்தது. அச் சமயம் தேவகானத்திற்கு ஒப்பான மதுரகானம் வழக்கம்போல் கேட்டது.

(முன் தொடர்ச்சி மேட்டு)

பொய்யும் புரட்டலும் பிழைகளும் பாபமும்
மெய்ப்பொரு ளாவியை எரித்து நரகில் வீழ்த்தும்
தத்துவங் காண் மனமே! (தூய்மை)

என்ற பாடல் கிழவரின் காதில் கேட்டதும் முகம் சுணங்கியது. பேனா ஒட்டம் சற்றுத் தடைபட்டு நின்றது. கோபம் கண்களில்

ஜ்வலித்தது. ஒரு வினாடி நேரம் பிரமை கொண்டு நின்றார். பிறகு தன்னையே தான் தேற்றிக் கொண்டு, ஒரு ஏளனமான சிரிப்புச் சிரித்துவிட்டுப் பின்னர், "தரித்திர மூதேவி! இவன் மகா யோக்கியன். சாபங் குடுக்க வந்துட்டான்; சோம்பேறித் தடியன். இந்தக் கழுதைகளையெல்லாம் பிடிச்சு கம்பத்தில் கட்டியடிக்கணும். அந்த மூதேவி மைதிலி இந்தப் பீடை பாட்டில் மயங்கரா. எனக்கு வயித்தெ எரியறது. இவன் கடக்கரான் தடியன்" என்று மனத்தை முற்றிலும் தேற்றிக் கொண்டு, மீண்டும் எழுதவாரம்பித்தார். அவருக்கிருந்த ஆத்திரத்தில் அந்தச் சந்நியாசியை அப்படியே கொன்று விடலாமாவென்ற எண்ணம் பரிபூரணமாக உண்டாயிற்று. திட்டிக் கொண்டே வெகு மும்முரமாகவும் ஸ்வாரஸ்யமாகவும் எழுதிக் கொண்டிருக்கையில், முன்பு மன்மத பாண லேகியம் கொடுத்த பைராகி மீண்டும் பலவித மருந்தோடு அங்கு வந்து, "ஜே ஸீதாராம் நமஸ்தே! பாபூ!" என்றான். கிழவருக்கு இவன் வருகை தற்சமயம் சற்று இடைஞ்சலாகவே தோன்றியது. எனினும் தன்னைத் தேடி மருந்து கொண்டு வந்திருப்பதனால் மருந்தின் ஆசைக்காக வரவேற்று உட்கார வைத்தார்.

பைராகி:—ஓ! நானு என்னமோ தடங்கலா வந்துட்டாப்பிலெ இருக்கு. அவசரமா என்னமோ எழுதுரங்களே! நான் போயிட்டு அப்ரம் வரட்டுமா?

கிழவர்:—ஆ! ஆ! பரவா இல்லெண்ணு. ஒக்காருங்கோ! இது என்னமோ சொந்த வேலெ. அப்ரம் பாத்துண்டா போறது. என்னென்ன கொண்டு வந்திருக்கங்கோ?

பைராகி:—நீங்க கேட்ட லேகியம் மட்டும் ஸ்பெஷலா பண்ணிண்டு வந்திருக்கேன். அதிருக்கட்டும். ஒரு சந்தேகம்; ஒங்களுக்குத் தைலங் குடுக்கரானே சாயப்பு அவன் எப்போ இங்கே வந்தான்?

கிழவர்:—(சற்று ஆச்சரியத்துடனும், ஒரு விதமான பரபரப்புடனும்) என்! வாரா வாரந்தான் வர வழக்கம். போன வாரம் வந்தான். இந்த வாரம் நாளைக்கி வருவான். என்! எதுக்கு கேக்கரங்கோ?

பைராகி:—ஒங்களுக்குச் சமாச்சாரமெ தெரியாதுங்களா! ஐயையோ! அந்த சாயப்புவெ அரெஸ்டு பண்ணிப் பூட்டாங்களே.

கிழவர்:—என்ன! என்ன! அரெஸ்டு பண்ணிப் புட்டாங்களா! எதுக்காக?

பைராகி :—அரே ஸீதாராம்! ஒங்களுக்கு ஊருலெ நடக்கர சமாச்சாரமெ தெரியாதா! என்னமோ மாயக் கொள்ளையாம். அந்தக் கொள்ளேலே சம்பந்தப்பட்டவங்களெல்லாம் போலீஸார் புடிச்சுட்டாங்களாம். அதிலெ சாயப்புவும் ஆப்ட்டுகினும். ஐயா பேருகூட....என்னமொ அடி பட்ராப்புலெ....

கிழவரின் தேகம் நடுங்குகிறது. முகத்தில் பலவிதமான விகாரத் தோற்றங்கள் வந்து சூழ்ந்துகொண்டன. அவருடைய தேகமே தீப்பிடித்து எரிவதுபோன்ற வேதனையினால் விழிகள் சுழலமிடுகின்றன. மெல்ல அவைகளைச் சமாளித்துக் கொண்டு, "என்னய்யா! ஏதேதோ ஒளறுகிறீர்? என் பேரு எதுக்கய்யா வரது? என்ன பேச்சு தாறுமாறுமா இருக்கே?" என்றார்.

இவருடைய மாறுதலை முற்றுமறிந்த பைராகி வியப்புடன் மீண்டும் பேசத் தொடங்கி, "ஏன் சாமீ! எனக்கு என்ன தெரியுங்க. நீங்க மாயக் கொள்ளெக்காராளுக்குச் சாயபூ மூலமா தைலங்கள் சப்ளை செய்ரத்தை பக்காப் பேர்வழிகளான போலீஸாரு கண்டு பிடிச்சுட்டாளாப். சாயப்புவே ஒங்களெப் பத்தி சொல்லிட்டாரு. அதோடு ஒங்க வீட்லேயே நகைங்க திருடு போனபோது நீங்க தடபுடல் செஞ்சவங்க அப்பறம் அத்தெப் பத்தி ஒன்னுமே பேசாமெ இருந்துட்டீங்களா!

அதுவே போலீஸாருக்குப் பெரிய சந்தேகமாகி அது விஷயத்தைக் கவனிச்சாங்களாம். நீங்க நகெ போனப்பறம் அவங்களெ புடிச்சுருக்காமெ அவங்களோடெ சேந்துண்டு நகெயெ ரகஸ்யமா வாங்கிகிட்டு வித்து பணமாக்கிப் புட்டீங்களாம். அந்த நகெ வாங்கின மார்வாடியும் ஆப்ட்டுகினு. ஒங்களுக்குக் கடன் ஏறிப் போச்சுன்னு வரும்படிக்காவ அவங்களோடெ சேந்துட்டீங்களாம். இதெல்லாம் வெட்ட வெளியாப் பூட்டுதுங்களாம். ஐயாவெகூட அரெஸ்டு பண்ணப் போராங்களாமே!

இந்த வார்த்தையைக் கேட்கும்போதே கிழவரின் உயிர் பெரும் பாகமும் நீங்கிப் போய் விட்டது எனலாம். அகத்தில் செய்யும் சித்திரவதை முகத்தில் பளிச்சென்று மின்னுகிறது. பைராகி பின்னும் விடாமல் பேசத் தொடங்கி, "ஒங்க மேலெ அந்தத் தப்புமட்டுமில்லையே. மூர்த்தியெ நீங்கதான் கையெ வுடச்சுட்டீங்களாம். அதோடெ அவனெ ஒணும்னு மாயக் கொள்ளெலெ சம்பந்தப்படுத்தி கைதியாக்கித் தண்டனையும் அடையும்படிச் செய்து விட்டீராம். இத்தனைக்கும் காரணம் வேணி மேலெ கொண்ட த்வேஷந்தானும். வேணியெ கொலை செய்ததும், மாயக் கொள்ளையை ஏவினதுங்கூட நீர்தானும். என்ன அநியாயம் சார்" என்று பைராகி சொல்லும்போது கிழவருக்கு மூளையே

கலங்கிக் கொண்டு வந்து விட்டது என்றால் மிகையாகாது. கிழவர் உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே கிறு கிறு என்று சுற்றுவதுபோல் வேதனைப்பட்டுச் சாகிறார். எனினும் அவைகளைச் சற்றுச் சமாளித்துக் கொண்டு, "ஏ பைராகி! ஒனக்கு என்னமோ கேடு காலந்தான் வந்துடுத்து. எந்தக் கழுதை என்னைப் பத்தி யப்படி எல்லாம் ஒளறது. நாக்கெ அறுத்துப்புட்ரேன் பாரு" என்று கையையும் முகத்தையும் ஆட்டிக் கொண்டே ஆத்திரமாகக் கூறினார்.

பைராகி சிரித்துக் கொண்டே, "சார்! கழுதையைப் போல உபகாரப் பிராணியும், தன் இனிய சங்கீதத்தால் நல்ல சகுனத்தைக் கொடுக்கக்கூடியதுமான பிராணி வேறே இல்லே. ஐயா! நீர் மனிதனுக இருந்தும் கழுதையைவிடக் கேவலமான ஜந்துவைப்போல் நீர் செய்த காரியத்தால் ஊரே சிரிக்கிறது சார்! எதோ நாக்கை அறுத்துவிடும் பார்க்கலாம்" என்று கூறிக் கொண்டே, தன் பைராகி வேஷத்தைக் களைந்துவிட்டு, பரோபகார சிந்தையும், பரிசுத்த இதயமும் உடைய ஏகாம்பரம் சேவை சாதிப்பதைக் கண்ட கிழவர், தன்னை மீறிய பீதியுடன் அலறியடித்துக் கொண்டு, "ஐயோ! இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமா!" என்று வாய்விட்டுக் கூவியபடியே சுவரில் சாய்ந்து விட்டார்.

அதே சமயம் எதிர் வீட்டுக் கிழவர், தன் தொந்தியைத் தடவிக் கொண்டே, "ஏண்டா வேதாசலம்! இங்கே பைராகி வந்தானே! லேகியம் குடுத்தானு? எனக்கும் வாங்கினயா?" என்று ஆனந்தமாய்க் கேட்டுக் கொண்டே வந்தார். சுவரில் சாய்ந்து கிடக்கும் கிழவரையும், ஏகாம்பரம் மந்தகாஸமாக நிற்பதையும் பார்த்துத் திடுக்கிட்டு, நடுங்கிய கிழவர், "என்னடா சமாச்சாரம்? என்ன! என்ன!" என்று பதறப் பதறக் கேட்டார்.

சற்றுத் தெளிவு கொண்ட வேதாசலம் தாங்கமாட்டாத ஆத்திரத்துடன் எதிர் வீட்டுக் கிழவரைப் பார்த்து, நீ நாசமாப் போக. ஒன் எழவெடுக்க. பைராகியாடா! பைராகி. இந்த ஆசாமிதாண்டா பைராகின்னு ஒன்னெ ஏமாத்திப்புட்டான். நீ என் தலெக்கி கொள்ளி வெச்சுட்டே. குடி முழுகிப் போச்சுடா முழுகிப் போச்சு" என்று அபரிமிதமான ஆத்திரத்துடன் வேதாசலம், எதிர் வீட்டுக் கிழவரின் முதுகில் தடால்புடால் என்று நகர்த்தி விட்டார். இதற்குள் ஏகாம்பரம் தடுத்து விலக்கி விட்டு, "பெரியவரே! உமக்கு மட்டும் சர்க்காரின் அருமையான அன்பான அழைப்பு வரலேன்னு நினைக்க வேண்டாம். உமக்குங்கூடத்தான் தாம்பூலம் வெச்சு அழைப்பு வந்திருக்கு. இருவரும் புறப்படுங்கள்" என்று தமது அதிகாரத் தொனியுடன் கூறினார்.

இரண்டு கிழங்களும் மன்மத பாண சஞ்சீவிக்குப் போட்டி போட்டுத் தமாஷாவாகவிருந்ததுபோல் இப்போதும் இருக்கும்படி கடவுள் அருள் செய்துவிட்டார் போலும். இரு கிழங்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வயிற்றிலும் தலையிலும் அடித்துக் கொண்டு பிரலாபித்தார்கள். இரு சிறு பிள்ளைகள் 'உன்னால் நான் கேட்டேன்; என்னாலே நீ கெட்டாய்' என்று ஆடுவதுபோலிருந்தது அத்தோற்றம். கருப்பன் இக் கோரக் காக்ஷியைப் பார்த்துக் கொண்டே வந்து பிரமித்துப் போய், "ஐயையோ! எஜமான்! இப்பிடி ஒருகாலம் வரும்னு நெனச்சிருந்தா இந்தக் கதி வந்திருக்காதுங்களே! சின்னம்மா வவுத்தெரிச்சல், வேணியம்மா சாவம், மூர்த்தி ஐயாவின் மனக் கொதிப்பு சும்மா போவுமா? ஊம். என்னிக்கோ இப்பிடி வந்துடும்னு எதிர்பாத்தேனுங்க. நெசமாப் பூட்டுதுங்களே!" என்று வருந்தினன்.

## 64

அந்த ஆசிரமத்தை விட்டு வெளியே வந்த மைதிலியின் நெஞ்சு நெருப்பின்மீது புழுவெனத் துடிக்கின்றது. அவளுடைய பரிதாப நிலைமையைக் காண்போரின் மனம் கனலாய் எரியும் எனலாம். ஆனால், அந்த அநாதைக்கு அம்மாதிரி உள்ளன்புடன் அனுதாபப்பட இந்த ஜன்மத்தில் மனித வர்க்கத்தில் யார் இருக்கிறார்கள்? ஒருவருமில்லாப் பரதேசி, ஒண்டிப் பறவை நடக்கவும் மாட்டாது கண்ணீர் வழியக் கால்கள் பின்னலிட்டவாறு ஏதோ ஒரு எந்திரம் போல் நடந்து செல்லவாரம்பித்தாள். அவள் மார்பு படபட வென்று அடித்துக் கொள்கிறது. மூச்சும் தடுமாறுகிறது. இந் நிலைமையில் அவள் மனத்தில் செய்யும் வேதனைகளின் போராட்டமோ ஒரு அபலைப் பக்ஷி சகிக்கக்கூடியதா?

"பாழும் பிறவியே! நீ என் இம்மண்ணுலகில் வெட்கமின்றி வந்து பிறந்தாய்? அப்போதே நாய், நரி முதலிய ஜந்துக்களுக்கு இரையாகி இருக்கலாகாதா! உலகத்தில் பிறந்த யாராவது உன்போல் துரதிருஷ்டப் பாவிகளாயிருப்பார்களா! பிறந்தாய்! துயரக் கடலில் துளைந்தாய், கவலைக் கவசத்திற்குள் மறைந்தாய், சாகாப் பிணமாய் இருந்தாய், ஊம். ஆய்விட்டதா! நீ பிறந்த

தற்கு உன்னால் உனக்காவது அன்றிப் பிறருக்காவது லவலேச மாவது நன்மை, உதவி, பயன் ஏதாவது உண்டா? இல்லை. இல்லை. ஒரு சிறு உபகாரமும் இல்லை.

நீ சென்ற இடமெல்லாம் விபரீத பயங்கரத்தையும் உபத்திரவத்தையுமே உண்டாக்குகிறாய். உனக்கு இவ்வுலகில் எவ்வித சுகமும் சந்தோஷமும் இல்லை எனினும் மண்ணில் மடியும் வரையில் நிற்க இடமும், யோக்கியதையுங் கூட இல்லாத ஜென்மமாகிவிட்டாய். இனி இம்மாதிரி இருக்கவேண்டாம். தொலைந்து போ! உலகை விட்டு மறைந்துபோ! மகா லக்ஷ்மிபோல் வேணி சென்ற திக்கை நோக்கி நீ சென்றுவிடு. உனக்கு இனி தற்கொலைதான் பிராப்தி! இனி யார் முகத்திலும் விழிக்கவேண்டாம். எத்தகைய அபவாதத்தையும் கேட்கவேண்டாம். உன் முடிவும் சமீபித்துவிட்டது" என்று தனக்குள் எண்ணமிட்ட வண்ணம் வெகு தூரம் கால் சென்ற திக்கில் திசை தெரியாது நடந்து சென்றாள்.

இடை யிடையே உட்காருவதும், பின்னும் எழுந்து நடப்பதும் தலைவிரி கோலமாகச் செல்கையில், வீதியில் ஒரு மோட்டார் இவளைக் கடந்து சென்றது. அது செல்லும்போது அதற்குள் இருந்து, "ஹா! மைதிலீ! மைதிலீ!" என்ற பெரிய குரல் கேட்டதும், மைதிலி திடுக்கிட்டு நடு நடுங்கித் திரும்பிப் பார்ப்பதற்குள் கார் ஓடி மறைந்துவிட்டது. ஆனால், காருக்குப் பின்னால் வீதியில் கும்பல் தனித்தனியே பேசும் குரல் மட்டும் மைதிலியின் காதைத் துளைத்துக்கொண்டு உள்ளே சென்று, அவளை ஒரு ஆட்டு ஆட்டிப் பேரிடி விழுந்தவள்போலச் செய்துவிட்டது.

அதாவது, "அடாடா! ரெண்டு கிழங்களும் மாயக் கொள்ளைலே சம்பந்தப்பட்டிருக்கான்னு ரெண்டு பேரையும் போலீஸ்காரன் புடிச்சிண்டு பூட்டானுமே! அதோ காரிலே கொண்டு போறாளே! என்ன அக்கிரமம். அந்தக் கெழவன் போட்ட வேஷமென்ன? நடிச்ச நடிப்பென்ன? இப்போ நடந்த நடப்பென்ன? ஐயையோ! அக்கிரமமே! அந்தப் பாவி கிழவன் பொண்டாட்டியே படுத்தின பாடென்ன? அவன் சந்தி சிரிக்கிற சிரிப்பென்ன? ஒரு கெழத்துக்குப் பதில் ரெண்டு கெழமும் ஆப்ட்டுண்டுடுத்தாமே!" என்று பேசிய பொதுஜனங்களின் பேச்சேயாகும்.

அதற்குமேல் மைதிலியின் நிலைமையை விவரிக்கவேண்டுமா? "ஹா!" வென்று வாய்விட்டுக் கத்திவிட்டாள். தன்னிரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு நின்ற இடத்திலேயே கல்லாய்ச் சமைந்துவிட்டாள். மோட்டாரில் கேட்ட குரல் தன் புருஷனுடையதுதான் என்றது நன்கு விளங்கிவிட்டது. ஆகாயமும்

பூமியும் பம்பரம்போல் சுழல்வதுதாகத் தோன்றுகிறது. பித்துப் பிடித்தவள்போல் "தாதா!" வென்று ஒரு கூச்சலிட்டவாறு திடீரென்று கீழே விழுந்தாள். வீதியில் கூட்டமும் கூடிவிட்டது.

அதே சமயம் அலைவிரி கோலமாய் ஓடி வரும் கருப்பனும் காத்தாயியும், "ஐயையோ! இந்தக் குடும்பத்துக்கு இப்படியொரு கெதி வருமா?" வென்று உள்ளூற வயிற்றெரிச்சலுடன் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்தக் கும்பலைப் பார்த்த உடனே அங்கு எட்டிப் பார்த்ததும் தாங்கள் ஆசிரமத்திற்குத் தேடிச் செல்லும் மைதிலியே விழுந்து கிடப்பதைக் கண்டு, அலறியடித்துக் கொண்டு, "ஹா! காத்தாயி! நம்ப எஜமானி இதோ உயிந்து கெடக்கராங்கோ! ஐயோ! கண்ருவியே!" என்று பெரிய சத்தமிட்டுக் கத்தியபடியே கும்பலில் தம்பதிகளிருவரும் புகுந்து, காத்தாயி மைதிலியைத் தூக்கி மேலே சாத்திக்கொண்டு, "அம்மா! அம்மா! சின்னம்மா! இதோ பாருங்க. காத்தாயி வந்திருக்கேன்" என்று அன்போடு கூப்பிட்டாள். காத்தாயியின் கண்கள் நீரைக் கக்குகின்றன.

மைதிலி கண்ணைத் திறந்து பார்க்கையில், அவள் சொப்பன உலகத்திலிருந்து இறங்கி வருபவள்போல் தோன்றியது. அவளை யறியாது அவள் வாய் முன்பு வானக்குயில் பாடிய இரண்டடிகளை முணுமுணுத்தது. கண்ணீர் ஆருய் ஓடுகிறது.

"பாலைவனந் தன்னில் பதறித் துடிக்கினும்
காலக் கூத்தனின் கொடுமையால் கதறினும்
மாலின் பதம் மறவேல்" (தூய்மை)

இப்பாடலைப் பாடும்போது கருப்பனுக்கும், காத்தாயிக்கும் வயிறு பத்தி எரிகிறது. விசனம் தாங்காமல் பொங்கிப் பொங்கி வருகிறது. "அப்பா! சின்னப்பா! என்ன பாட்டு வேண்டிருக்கும்மா? இதோ பாருங்களேன். தாதா சமாசாரம் தெரியுங்களா!" என்ருன்.

மைதிலி :—கருப்பா! எல்லா சமாசாரமும் தெரியும். இப்படியொரு நாள் வந்துடுமோன்னு நான் பயந்துண்டே இருந்தேன். கழுத்து மட்டும் ஜலத்தில் இருக்கறவனுயிருந்தா நீந்தி யடிச்சு பொழைக்கலாம். தலைக்கு மேலே ஒரு முழம் போனப்பறம் பொழைக்கிற வழி ஏது?........மகா பாவி என்னெ கடவுள் படச்சதின் வேலை முடிஞ்சு போச்சு........ஹா....அதோ....வானக்குயில் பாடுகிறது. இனிமே இந்தப் பறவெ கூண்டுக்குள்ளே அடைபட்டுச் சாகவேண்டாம். பறந்துபோய் அந்த ஸ்வரூபத்தைப் பார்க்கிறேன்" என்று எழுந்து ஓடலாரம்பித்தாள்.

காத்தாயி தடுத்து, "அம்மா! அம்மா! எங்கே ஓட்றங்கோ! வீட்டுக்கு வாங்கம்மா!" என்று கூறினாள். மைதிலி திமிரிக் கொண்டு, "ஹா! இனுமே வீடா! வாசலா! வாழ்வா! ஊஹூம். ஒன்னுமில்லே. எல்லாம் போச்சு. என்னெத் தடுக்காதே. காத்தாயீ! கருப்பா! உட்டுடுங்கோ! நான் நிக்கமாட்டேன். என்னாலே சகிக்க முடியாது. என் வாழ்க்கைக்கு நாதமாயமைந்ததும் பல முறை என்னைத் துன்பத்திலிருந்து காத்து மனச் சாந்தியைக் கொடுத்த அற்புத கானம், வசீகர சக்தி பொருந்திய மகிமை யான கானம், அதோ கேட்கிறது. அதோடு நான் ஐக்யமாயிட் றேன். போங்கோ! போங்கோ!" என்று விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறாள். கருப்பனும், காத்தாயியும் கூடவே ஓடினார்கள்.

## 65

இரு கிழவர்களும் போலீஸ் ஸ்டேஷனில் பெஞ்சியின்மீது 'ஆந்தை விழிக்குமாம் போலே போலே' என்பது போல், விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின் றார்கள். போலீஸ்காரர் பலமாக பாரா நிற் கிறார்கள்.

(முன் தொடர்ச்சி)

"ஆண்டவன் ஆணையை அகந்தையால் மறந்து
தாண்டவ மாடித் துன்மார்க்கத்தில் திளைந்து
மூண்டது தீவினையே" (தூய்மை)

இச் சமயத்தில் தேனினும் இனிய கானத்தின் இன்னொலி கிழங்களின் காதில் விழுந்ததும் ஒருவரையொருவர் பார்ப்பதும் விழிப்பதும், தலையையும் தொந்தியையும் தடவுவதும் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு அழுவதும் 'நாசமாப் போனவனே ஒன்னாலே தானே எனக்கு இந்தக் கதி வந்தது' என்று ஒருவரையொருவர் குறை கூறிக்கொள்ளும் காட்சி, போலீஸ் சேகவனுக்கு நகைப்பா யிருந்தது. இது பரியந்தம் காதில் விழுந்தாலும் வெறுப்புற்றுக் கவனிக்காது அலக்ஷியமாகச் சென்ற கிழவருக்குச் இச்சமயத்தில் தனக்கென்றே பாடுவதுபோல் தோன்றி இதுகாறும் காணாத ஒரு விதமான உணர்ச்சியும் மனக் கவர்ச்சியும் துக்கமும் பொங்கின.

மைதிலி அடிக்கடி இக்கானத்தைக் கேட்டு மயங்கி நின்ற ரகசியத்தை இப்போதுதான் அறிந்தார். இனி என்ன செய்து, என்ன உணர்ந்து பலன் என்ன?

* * *

அதே சமயந்தான் மைதிலி அந்த அற்புத தேவகானம் வரும் திசையை நோக்கி ஓடினள். கால் தடுக்கி விழுந்தும் எழுந்தும் வீராவேசத்துடன் ஏரிக் கரைப் பக்கம் ஓடினள். அப்போது,

"ஆவதும் அவனல் அழிவதும் அவனல்
ஏவலின்படியே இன்பத் தொண்டாற்றி நின்
பாவங்கள் போக்கிடுவாய்!" (தூய்மை)

என்ற பாடலைப் பாடிக் கொண்டு ஓர் சந்நியாசி—கையில் ஜபமாலையும், காஷாய உடையும், நீண்டு வளர்ந்துள்ள தாடி மீசையும் ஜடைகள் நிறைந்த பயங்கரப் புதர்போன்ற தலையும், சாந்தமும் கருணையும் பரிபூரணமாக நிறைந்து ஒளி வீசும் கண்களுடனும் பழுத்த பழமாய் தள்ளாத கிழவர்—மெல்ல நடந்து வருவதைப் பார்த்த மைதிலி, ஓட்டமாக ஓடி, அந்தச் சாதுவின் காலில் விழுந்து, காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "ஸ்வாமீ! மகா புனிதமான யோகீச்வரரே! இவ் வடியாளை ஆட்கொள்ள வேண்டும். இப் பாவியைப் பரமன் இப் பாழும் உலகில் படைத்தான். படாத பாட்டிற்கும் இலக்காக்கினன். சந்தோஷமென்றும், சுகமென்றும் கூறும் பதங்களை எனக்கு அடியோடு பகையாளிகளாக்கி விலக்கினன்.

கருத்து இருண்டு நீரைக் கக்கும் மேகத்தையுடைய பயங்கரமான வானத்திலும் ஒரு பளிச்சென்ற மின்னல் தோன்றி வெளிச்சங் கொடுப்பதுபோல், இருண்டு அந்தகாரமாகிவிட்ட என் வாழ்க்கையிலும் இனிய சுகம் ஒன்று உண்டு என்றால், அது தங்களுடைய அருமையான குயிலினும் இனிய கானமே யாகும்.

முனிபுங்கவா! அந்தக் கானந்தான் என் வாழ்க்கைக்கு நாதமாயிருந்தது. அந்தக் கானமே என்னைக் களிக்கச் செய்யும் தேவாம்ருதமாயிருந்தது. என்னைப் பலகாலும் காத்து ரக்ஷித்தது. நீதி தவறி நடக்கவிருந்த தருணமெல்லாம் தங்கள் கானம்ருதமே என்னை உணர்வு பெற்று உய்யச் செய்தது. இப் பாவியின் சரிதம் முடிவு பெற்று விட்டது. இனி ஒன்று தற்கொலை, அன்றித் தங்களுடைய சித்த மிரங்கினல் தங்கள் பாத சேவை செய்து பிழைக்கும் வழி. இவைகளைத் தவிர வேறில்லை. என்னை ஆட்

கொள்ள வேண்டும்" என்று கண்ணீர் பெருகக் கல்லும் கரையும்படிக் கூறி யழுதாள்.

பாடிக் கொண்டே வந்த சந்நியாசி, ஆகாயத்தை நோக்கியபடியே, "கடவுள் காப்பாளுக! பெண்ணே! எழுந்திரு. நானு உன்னைக் காக்க வேண்டும்? முடியாது. முடியாது; நானும் உன்னைப்போன்ற ஒரு மாமிசப் பிண்டந்தான். உண்டு உலாவித் திரியும் ஜந்து; ஊனைச் சுமந்து நிற்கும் சுமைதாங்கி. கேவலம் நசித்துப் போகக்கூடிய அற்ப ஜந்து. என் காலை விடு. இக்கால் அசேதனமான முள், கல் முதலிய பொத்தினுலும் தாங்காது சீழ் வழியும் கால்.

எந்தக் கால் இப் பூவுலகை மூவடியா யளந்ததோ—எந்தக் கால் கல்லைப் பெண்ணுக்கியதோ—அந்தக் காலால் உன் உள்ளத்தை அளக்கும்படி வேண்டு. எந்த ஒரு அபாரமான குணத்தினுல் மங்கையின் மானத்தை மாபெருஞ் சபையில் காத்துத் துயில் கொடுத்தானே அந்தக் குணத்தினை வேண்டி உன்னையும் காக்கச் சொல். ஆதியந்த மில்லாது, எங்கும் நிறைந்த பொருளாய், அணுக்குள் அணுவாய், மலைக்குள் மலையாய், சிலைக்குள் உருவாய், ஜோதிக்குள் சுடராய், மணிக்குள் ஒளியாய், மலருக்குள் மணமாய், கனிக்குள் இனிப்பாய், கண்டு பிடிக்க முடியாத பரஞ்சோதியாய் விளங்கும் ஆனந்த மூர்த்தியை, அற்புத வடிவை அடைய வேண்டிக் கொள்" என்று கருணை நிறைந்த கனிந்த தொனியில் கூறினர்.

இதைக் கேட்டதும், மைதிலியின் தேகம் சிலிர்த்தது. ஒரு விதமான பக்திப் பரவசத்தினுல் வெயர்வை வெள்ளம் பொங்கியது. கண்கள் மடை திறந்ததுபோலாகிவிட்டன. 'நாம் எங்கிருக்கிறேம்; என்ன பேசுகிறேம்' என்ற தன் நிலையையே மறந்து சந்நியாசியின் வாக்கிலிருந்து வரும் அம்ருத தாரையைப் பருகிக் கொண்டிருந்தாள். கருப்பனுக்கும் காத்தாயிக்குங்கூட மனம் கலங்கி ஒருவித உணர்ச்சி உண்டாகியது.

மைதிலி:—எதீச்வரரே! தாங்கள் தெரிவித்த அந்தப் பரம் பொருளைக் கேவலம் அந்தகாரத்தில் உழலும் நான் எங்ஙனம் அடையமுடியும்? என் அந்தகாரத்தைப் போக்க குருவென்ற வெளிச்சம் வேண்டாமா? தங்கள் அடி பணிந்து அடிமையாயிருந்து நான் அந்த உயர்ந்த நிலைமையை அடையலாமன்றே!

சந்நியாசி:—பெண்ணே! நீ சொல்வதும் வாஸ்தவம். குருவின் துணையில்லாது சானித்ய பதவியை யாரும் அடையமுடியாது. இது நம் மூத்தோர்களின் சித்தாந்தம். இருப்பினும் நீயோ பால்மணம் மாருத பச்சைக் குழந்தைபோல் காணப்படுகிருய்.

உன் மனமோ பரம விரக்தியை அடைந்திருக்கிறதாகத் தெரிகிறது. இத்தனை சிறு வயதில் இம்மாதிரியான மனப்பான்மை உண்டாவதே கடினம்.

பெண்ணே! நானோ நாடோடி. இன்றிருக்கும் ஊரில் நாளை இல்லாதவன். கல்லும் முள்ளும், காடும், புதரும் துஷ்ட மிருகங்களின் கர்ஜனையும், பசி தாகம் முதலியவையும் எனக்கு சர்வ சகஜம். என் மடியில் நானே தீயைக் கட்டிக் கொள்வதுபோல் உன்னைச் சேர்த்துக் கொள்வது உனக்கும் எனக்கும் எமனாக முடியும். ஆகையால், உன்னை நான் ஏற்றுக் கொள்ள ஒருபோதும் முடியாது.

மைதிலி :—(அலறியபடியே) ஹா! மகாபாவி நான் தற்கொலைக்குத்தான் லாயக்குள்ளவளா! ஸ்வாமீ! எனக்கு என்னதான் விமோசனம்? அதையாவது உபதேசம் செய்யலாகாதா? திக்கற்றவர்களுக்குத் துணை யார்?

சந்நியாசி :—தெய்வம் ஒன்று. அவரவர்களின் ஒழுக்கம், சீலம், மன உறுதி, வைராக்கியம், தயாள குணம், கருணை இவைகளும் இவை போன்றவைகளுந்தான் மற்றொன்று.

மைதிலி :—ஸ்வாமீ! அவைகள் இருப்பினும் அபவாதம், பழி, பாவம் இவைகள் பாணம்போல் தாக்காமலிருக்குமா?

சந்நியாசி :—பெண்ணே! நீ மகா விவேகி! இச் சிறு பிராயத்தில் இத்தனை ஆழமான விசாரணைகளில் உன் மனம் சென்றிருப்பது மிகவும் போற்றத் தக்கதாகும். ஒரு சுத்த வீரன் யுத்த களத்திலிறங்கி யுத்தம் செய்து ஜெயிக்கிறான். அவன் தேகத்தில் எத்தனையோ பாணங்களின் துளைப்பு இருக்கத்தான் இருக்கும். அவைகளைச் சகித்துக் கொண்டு ஜெயக்கொடி நாட்டிய பின், ஜெய பேரிகையின் ஒலி அவன் காதில் விழும்போது அவன் தேகத்திலுள்ள ரணங்களும், தழும்புகளும் தான் பெற்ற வெற்றியின் பரிசாகவன்றோ தோன்றின என்று மகிழ்வான். அதேபோல் இம் மாய உலகத்தில் பாவப் பிறவி எடுத்த பின் இவைகளை ஜெயிப்பது தான் வீரம். உன்னழகும் உன் யௌவனமும் உனக்குச் சத்ருவாகவே இருக்கும். ஆனால், அதை ஜெயித்து நீ வெற்றி பெறுவாய்.

மைதிலி :—ஸ்வாமீ! நான் எந்த வழியில் என் காலத்தைக் கடத்துவேன்? எனக்கு ஏதாவது உபதேசம் செய்யக் கூடாதா! நான் அதற்கும் அருகதையற்ற மகா பாவியா?

சந்நியாசி :—பெண்ணே! அன்ன சத்திரங் கட்டு; வஸ்திர தானம் செய்; எல்லோரையும் சோம்பேறிகளாக்கி, சோம்பேறி

மடத்தில் உட்கார வை என்று நான் சொல்ல வரவில்லை. நீ செய்யும் வேலை மக்களது ஆத்மாவின் விழிப்பை உண்டாக்க வேண்டும். ஞானக் கண்ணைத் திறக்கச் செய்து அவர்களையும், "நாம் மிருகமல்ல, மனிதர்கள்தான்" என்று உணரும்படிச் செய்யும் புனிதமான சேவை செய்து பயனடைய வேண்டும். பரந்த ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களே, அதன் ஒரு பகுதியான ஹரிஜன சமூகத்தைக் கேவலப்படுத்தி இருக்கிறார்களே அந்தச் சமூகத்தினருக்கே சேவை செய்து, அவர்களுக்கு அறிவை ஊட்டி, மனத்தூய்மையை முதலில் உண்டாக்கி விடு. பிறகு எம்பெருமான் நடக்கும் வழியைக் காட்டுவான். தயங்காதே! சலிக்காதே! பயப்படாதே! எதிர்ப்புக்கு அஞ்சாதே! அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்கள் என்ற உறுதியுடன் செய்து வா.... நான் போகிறேன்.

மைதிலி :—(மீண்டும் காலில் விழுந்து வணங்கி) ஸ்வாமீ! என் ஜென்மம் சாபல்யமாயிற்று. இந்த அடிமைமீது கிருபை இருக்கட்டும். எப்போதாவது இங்கு வந்தால் இப்பாவிக்குத் தரிசனங் கொடுத்து ஆதரியுங்கள்—என்று வேண்டினாள். சந்நியாசி அவளை எழுந்திருக்கச் சொல்லி, கையை உயர்த்தி ஆசிர்வதித்துப் பின்,

(முன் தொடர்ச்சி மெட்டு)

சரண் புகுந்தோர்க்குத் தாசானு தாசனாய்
கருணை புரிந்திடும் கண்ணனை யனுதினம்
ஸ்மரணை செய்வாய் மனமே! (தூய்மை)

என்ற பாடலைப் பாடிக்கொண்டே போய்விட்டார்.

மைதிலிக்கு மனம் ஒரே நிலையான வைராக்யத்தில் நின்று ஒருவித வீராவேசத்தை யுண்டாக்கி விட்டது. சந்நியாசி சென்ற திக்கையே நோக்கிப் பிரமித்து நின்று விட்டாள். கருப்பனும் காத்தாயியும் அவளைப் பார்த்து கொண்டே தம்பித்து விட்டார்கள்.

## 66

அபாரமான புகழ் மாலைகள் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்திற்கும், அவர் கோஷ்டியினருக்கும் வந்து குவிய வாரம்பித்தன. ஏகாப்பரம் அதற்குள், அதை விரும்பவில்லை. ஏனெனில் இன்னும் ச. ம. கு. என்ற பதத்திற்கும் பொருள் கண்டு பிடிக்கப்படவில்லையாதலால் இந்த 28-ம் நம்பர் வீட்டில் கிடைத்த ஒரு மேப்பை வைத்துக்கொண்டு, "அந்த இடம் எங்கிருக்கலாம். எதுவா யிருக்கலாம்" என்று ஆராய்ச்சி செய்து, செய்து மூளையும் கலங்கிவிடும் போலாய் விட்டது.

அதனால் ஒன்றுமே புலப்படவில்லை. எனினும் பூதக் கண்ணாடிகளின் உதவியால் பார்த்ததில் இது ஒரு மலைக் குகையின் ரகசியமாகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தனக்குச் சந்தேகமான இடத்திலெல்லாம் மோட்டாரிலும், சைகிளிலும், கால் நடையாகவும் சென்று தேடினார். ஒருவிதமான அடையாளமும் தெரியவில்லை. தான் பிடித்துக் கைதியாக்கியுள்ளவர்களை எத்தனை மிரட்டி, உருட்டி, அதட்டி, அடித்தும் இந்த ச. ம. குவின் ரகசியத்தைச் சொல்ல அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

அதில் சம்பந்தப்பட்டிருக்கும் பெண்கள் சிலருங் கூட அதற்கு ஒப்பாது பிடிவாதமே செய்து சாகவும் துணிந்தார்கள். எல்லாவற்றையும்விட அதிசயம் இம்மாயக் கொள்ளைக்காரர்களில் சிலரைப் பிடித்த பிறகு போலீஸ்காரர்களே திடீர் திடீர் என்று காணாமல் போய்விட வாரம்பித்த வெட்கக்கேடும், வயிற்றெரிச்சலும் அதிகாரிகளால் சகிக்க முடியவில்லை. போலீஸ்காரர்களையே காணாமல் ஆளையே கொள்ளை யடிப்பதென்றால், இந்த அதிசயத்தைக் கண்டு யார்தான் வியக்கவும் பயப்படவும் மாட்டார்கள்!

காணாது போய்விட்ட போலீஸ்காரர்களின் பிரேதச் சின்னம் ஒன்றும் காணப்படவில்லை. அவர்கள் வீட்டு மக்கள் மனிதர்களெல்லாம் அதிகாரிகளிடம் வந்து கூக்குரல் போட வாரம்பித்தார்கள். சில்லரை போலீஸ்காரர்கள் இந்த ஆள் கொள்ளைக்குப் பயந்து கொண்டு, துணிந்து வெளியே போகவும் தேடவும் முடியாது, சிலர் உடம்பு அசௌகரியம் என்று லீவு போடவும், சிலர் இந்தப் பீதியால் உண்மையில் சீக்காகவே விழவும், சிலர், 'எங்களுக்கு வேலையே வேண்டாம், ராஜீநாமாச் செய்துவிட்டு எங்காவது பிச்சை எடுத்துப் பிழைக்கிறோம்; எங்களுக்கு இந்த வேலை உயிருக்கே பயமாயிருக்கிறது' என்று கூறவும் தொடங்கினார்கள்.

இத்தகைய ஓர் விபரீத சம்பவம் இந்த ஊர் போலீஸில் ஏகாம்பரம் உத்தியோகத்திற்கு வந்த நாள்முதல் இதுவரை ஒரு நாளும் ஏற்பட்டதில்லை. அதற்கு முன்னும் இம்மாதிரி நடந்தது கிடையாது. ஆகையால் ஏகாம்பரத்திற்கு தன் வீட்டிலேயே கொள்ளையடித்தபோது உண்டான கஷ்டத்தைவிட அதிகமான விசனமும், அவமானமும், மனத்தில் ஒருவிதமான ஏக்கமும் உண்டாகிவிட்டது.

இதே கவலையுடன் யோசித்துக்கொண்டிருக்கையில், இவருக்கு மேலதிகாரியிடமிருந்து சுடுசரம்போன்ற கடிதம் ஒன்று வந்து இவரை இன்னும் வாட்டி வருத்தியது. உடனே தன் மனத்திற்குள் ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டார். தனக்கு வேண்டிய முக்யமான சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு தன் மனைவியிடம் சென்றார்.

அந்தம்மாள் அப்போதுதான் கடவுளுக்கு நிறைய விளக்கேற்றிப் பூஜை செய்து கற்பூர ஹாரத்தி எடுத்துப் பின் "என்னப்பனே! சர்வலோக சரண்யா! தயாபரனே! அம்பிகே! ஜக தோத்தாரகி! என் கணவருக்கு ஒருவிதமான ஆபத்துமில்லாது காப்பாற்றி எனக்கு மாங்கல்ய பிச்சையைக் கொடுத்து ரக்ஷிப்பாய் அருள் ஜோதியே! எனது கணவரின் மனக்குறையைத் தீர்த்து அவருக்கு இது பரியந்தம் ஜெய மளித்ததுபோல் இம்முறையும் ஜெய மளித்துக் காப்பாற்றவேண்டும் தாயே! இப்பாலை நீ பருகி என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும்" என்று மெய்ம்மறந்த தெய்வ பக்தியும், பதிபக்தியும் ஒருங்கே பொங்கியவாறு கற்பகாம்பாள் பிரார்த்தனை செய்வதைப் பார்த்த ஏகாம்பரத்தின் கண்களில் ஆனந்த பாஷ்பம் உதிர்ந்தது. அவர் இதயத்தில் உண்டாகிய சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. 'இந்த உத்தமியின் பிரார்த்தனைக்கு இரங்கி எனக்கு இம் முறை ஜெயத்தை அளிக்கவேண்டும்' என்று தனக்குள் கடவுளை வேண்டியபடியே, "கற்பகம்! உன் பிரார்த்தனைதான் ஜெயம் பெறவேண்டும். நான் போய் வரேன். பகவான் நமக்குத் துணை. ஜெயம் பெற்றுத் திரும்பினால் உன் அதிர்ஷ்டம். இல்லையேல்........"

கற்பகம் இடைமறுத்து பரபரப்புடன், "ஹா! இதென்ன வார்த்தை! இம்மாதிரி சொல்லிவிட்டுப்போனால், என் மனசு எப்படி நிம்மதியாகும்? அம்பிகையின் பாதமே கதி என இருக்கும் நம்மைக் கைவிடமாட்டாள். நாதா! தாங்கள் இப்போது போய்த்தான் ஆக வேண்டுமோ?" என்றாள்.

ஏகாம்பரம் :—இதென்னக் கேள்வி? கற்பகம்! போய்த்தான் ஆகணும். ஜெயம் உண்டா, இல்லையா? அது இவர்களுடையது.

ஜெயம் பெற்றே வருவேன் என்று எனக்கு ஏதோ ஒன்று மனதில் சொல்கிறது. ஆகையால் பயப்படாமலிரு; நான் வருகிறேன்.

கற்பகம்:—நாதா! ஸ்வாமியின் பிரசாதம் பெற்றுக்கொள் ளுங்கள்.—என்று கூறி நிவேத்யம் செய்த பாலைக் கொடுத்தாள். ஏகாம்பரமும் அதைப் பருகிவிட்டு, கற்பகத்தினிடம் விடை பெற்றுக்கொண்டு கடவுளை வேண்டியபடியே வெளியே போய்விட்டார்.

## 67

அந்தரமான காட்டில் மோட்டார் வெகு வேகமாகப் பறக்கின்றது. எங்கு பார்த்தாலும் காற்றில் மரங்கள் அலையும் பேரொலியும் சில பக்ஷிகள் சப்திக்கும் குரலும், சிறிது தூரத்தில் சில துஷ்ட மிருகங்களின் பயங்கரமான சப்தமும் ஒன்று கூடிக் கேட்கும் போது எத்தகைய கல் நெஞ்சர்களையும் கலங்க வடித்துவிடு மல்லவா!

ஏகாம்பரம் தன்னுயிரைப்பற்றிச் சற்றும் பயமே கொள்ள வில்லை. அவர், தான் எடுத்த காரியம் வெற்றி பெறும் முன்பு தான் இறந்துபோவதில் மட்டும் சற்றும் இஷ்டப்படவில்லை. அதோடு தன்னருமை மனைவியின் பரிதாபம் அவரைப் பலமாகத் தாக்கியது. இவ்விரண்டு போராட்டத்தைத் தவிர வேறு எதையுமே லக்ஷியம் செய்யவில்லை. அவருடன் கூடவிருக்கும் போலீஸ்காரர்கள் பல மான காற்றடிக்கும் சப்தத்தைக் கேட்டு குடல் நடுக்கமும் பட படப்பும் கொண்டு தவித்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஏகாம்பரம்:—என்டா 103! இந்தக் காட்டிலா மோட்டார் போச்சு? நீ நன்னா கவனிச்சயா?

**103**:—ஆமாம் எஜமான்! நன்னா பாத்தேன். நான் கள்ளு எறக்கரவன்போலே மரத்துலே ஏறிகிணு இருந்தேன். மான் வேகமா ஒரு காரு போச்சு. அதுபோன வேகத்துலே எங்கே உருண்டுபோவுதோன்னு கூட பாத்தேன்.

ஏகாம்பரம்:—எவ்வளவு தூரம் போறவரைக்கும் பாத்தே?

**103**:—மரமாமறைஞ்சு போச்சுங்க. என்னாலே கண்டு புடிக்கவே முடியலேங்க.

ஏகாம்பரம் :—டேய்! காரை நிறுத்து. அதென்ன அந்த மலைப்பாறையிலே ஒரே காக்காயும் கழுகும் சுத்தி வட்டமிட்றது?—என்றார். உடனே காரும் நின்றது. எல்லோரும் கைத் துப்பாக்கியுடன் தைரியமாக இறங்கினார்கள். ஏகாம்பரமே முதலில் துணிந்து சென்று அங்கு ஏறிப் பார்க்கையில், ஒரு பிரேதத்தைப் பருந்து, கழுகு முதலிய பக்ஷிகள் கொத்தித் தின்றுகொண்டிருந்த கண்றாவியைப் பார்க்கவே முடியவில்லை. உடன் வந்த சேகவர்களில் ஒருவன், "எஜமான்! இவன் சந்திக்கடே பீட் சேகவன் சாமிநாதனுங்க. ஐயையோ! இவனெ கொணர்ந்து கொண்ணுப் புட்டாங்களே. நேத்திக்கிகூட எஜமாங்கிட்டே இவன் ஊட்லேந்து வந்து அயுதாங்களே சாமீ! ஐயோ! என்ன அநீதங்க!" என்று கூறும்போது எல்லோருடைய மனமும் துடித்தது. ஏற்கெனவே இவர்களுக்கிருந்த பயம் பின்னும் அதிகரித்துவிட்டது.

ஏகாம்பரம் பக்ஷிகளை விரட்டிவிட்டு அந்தச் சவத்தை நன்றாக உற்றுக் கவனித்துப் பார்த்தார். கண்ணில் இரு சொட்டு ஜலமும் வடிந்துவிட்டது. ஒரு துணியால் அந்தச் சவத்தை மூடி ஒருவனைக் காவல் போட்டுவிட்டுக் கடவுளை எல்லாம் வேண்டியபடியே தைரியமாக மலைமீது ஏறி உற்றுக் கவனித்துக்கொண்டே சென்றார்.

அந்த மலைமீது கொளுத்திய வத்திக் குச்சிகளும், துண்டுப் பீடிகளும் சில கிடந்ததை எடுத்துப் பார்த்தார். அதிலிருந்து அங்கு கட்டாயம் ஆட்கள் நடமாடியே இருக்கவேண்டும் என்று ஊகித்துக்கொண்டு, மீண்டும் செல்கையில் படிகள்போல் செறிவான கல்கள் கீழே இறங்குவதைக் கண்டார். தைரியத்தைக் கைவிடாமல் மெல்ல இறங்கிப் பார்க்கையில், கொஞ்ச தூரம் சென்றதும் குகைபோல் வழி தெரிந்தது.

அதன் முகத்துவாரத்தில் திருப்பிக்கொண்டு நிற்பதுபோல் புலியொன்று தெரிந்ததும் ஏகாம்பரம் இது புலிக்குகை என்று பயந்து திடுக்கிட்டார். பின்னும் தைரியத்தை இழக்காமல் தன் கண்ணாடியினால் அந்தப் புலியை உற்றுப் பார்த்தார். இதற்குள் கூட வந்த கான்ஸ்டேபிள்கள் இன்று இந்தப் புலியின் வாய்க்குத் தாங்கள் இரைதான் என்று தீர்மானித்துக் குடல் நடுக்கத்துடன் கால்கள் பின்னால் இழுக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள்.

ஏகாம்பரம் அதை உற்றுப் பார்த்ததும் ஒரு பெரிய சிரிப்பு சிரித்தார். பயப்படாதங்கோ! இது உயிருள்ள புலியல்ல. யாராவது இந்தப் பக்கம் வந்தா புலி இருக்கிறதைப் பார்த்துப் பயந்துகொண்டு போய்விடுவதற்கு தந்திரம் செய்துள்ள புலி இது. புலி மனிதன் வரும்வரையில் நிற்குமா? உடனே பாயாதா? அது

அசங்கறதா பாருங்கோ!" என்றார். அதற்குப் பிறகுதான் மற்றவர்களுக்குச் சரியாக மூச்சு வந்தது.

தைரியமாய் ஏகாம்பரம் சென்று புலியை அலக்காகத் தூக்கி அப்புறம் தள்ளினர். என்ன ஆச்சரியம். புலி இருந்த இடத்தில் கீழே பெரிய வழி தெரிந்தது. அஞ்சாத மனத்துடன் உள்ளே சென்று பார்த்ததில், பெரிய வீடுபோல் கல் பாறைகளையே செதுக்கி அறை அறையாய் செய்திருந்தது தெரியவந்தது.

ஒரு இடத்தில் பச்சிலைகளும், மூலிகைகளும் மலைபோல் குவித்திருந்தது. மற்றோர் இடத்தில் அடுப்பில் பெரிய பெரிய கடாய்களில் ஏதோ காய்ந்து கொண்டிருந்தது. ஒரு அறையில் காணுதுபோன போலீஸ்காரர்களை எல்லாம் பின் கட்டும் முன் கட்டுமாகக் கட்டி உருட்டி இருக்கிறது. சில தடியர்கள் சவுக்கைக் கொண்டு அவர்களை அடித்தபடியே, "போருமாடா, இன்னும் ஒணமா! எங்களையா பிடிக்கப் போரங்கோ! எங்களையாடா பிடித்துவிட்டு உத்தியோகம் ஒஸ்திக்கப்போரங்கோ! பட்டமும் பதக்கமும் வாங்கப்போரங்கோ. ஏகாம்பரத்துக்கும் சீக்கிரம் இந்தக் கதியாயிடும். இருங்கோ" என்று சொல்லும்போது ஏகாம்பரத்தின் ஆத்திரம் தலைக்கேறியது.

சற்றும் தாமதிக்காமல் நிர்த்தாக்ஷிண்யமாய் அங்குள்ள அத்தனை பெயரையும் காலிலும், கைகளிலும் 'டப் டப்' என்று சுட்டு வீழ்த்தியபடியே, "கிராதகப் பதர்களே! அகம்பாவம் பிடித்த அரக்கர்களான ராவணனும், ஹிரண்யனும், சிசுபாலனும், கம்ஸனும், ஜராஸந்தனும், நரகாசுரனும் அதிக நாள் வாழவில்லை. எத்தனையோ வரம் பெற்றவர்களின் கதியே அப்படியிருக்க நீங்கள் எந்த மூலேடா? ஏகாம்பரத்தையா கொல்லப்போகிறீர்கள்? இதோ ஏகாம்பரம் உங்களையே பிடித்துவிட்டான்!" என்று கூறிக் கொண்டே அவ்விடத்திலுள்ள ஒருவரைக்கூட நகரவிடாமல் சுட்டு வீழ்த்திக் குவித்துவிட்டார்.

இந்த மாதிரி இந்த இடத்திலும் தமக்கு ஆபத்து வரும் என்று நினையாது இறுமாப்புடனிருந்ததால், அவர்கள் சற்று அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள். இரண்டொருவர் எழுந்து வந்தும் சண்டைக்குத் தயாரானர்கள். ஆனல் அந்த மொண்டி சண்டைக்கு ஏகாம்பரம் விடாது பின்னும் சில இடங்களில் சுட்டு வீழ்த்தினர்.

கட்டுண்டு கிடந்த போலீஸ்காரர்களை எல்லாம் கட்டை அவிழ்த்துவிட்டுக் காப்பாற்றித் தேற்றினர். அதற்குள் ஒரு போலீஸ்காரனை ஓட்டமாக ஊருக்குள் செல்வதற்காகத் தாம் வந்த காரையே கொடுத்து, மற்றும் சில ஆட்களையும், அதிகாரிகளையும்,

லாரிகளையும் கொண்டு வரும்படி ஏகாம்பரம் ஆக்ஞாபித்தார்; அந்தக் கான்ஸ்டேபிள் உடனே புறப்பட்டுச் சென்றான்.

கட்டிலிருந்து விடுபட்ட அத்தனை போலீஸ்காரர்களும் ஏகாம்பரத்தின் காலில் விழுந்து வணங்கி, கண்ணீர் பெருக தங்களைச் சமயத்தில் காப்பாற்றியதற்கு நன்றியறிதலும், உபசாரமும் கூறினார்கள். இதற்குள் ஏகாம்பரம் அந்தக் குகையை முற்றும் சோதனை செய்து, நகைகள் நாணயங்கள் முதலிய சகலத்தையும் ஒன்று திரட்டினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மேலதிகாரியும் மற்றையோரும் வந்தார்கள். லாரியும் வந்தது. கமிஷனர், ஏகாம்பரத்துடன் கை குலுக்கி, புகழ் வார்த்தைகள் பல கூறித் தட்டிக்கொடுத்து, "வெரி குட் ஏகாம்பரம்! ரொம்ப திறமையுடன் கண்டுபிடித்ததற்காக உமக்கு அரசாங்கத்தார் தகுந்த மரியாதை கொடுப்பார்கள். போலீஸின் சார்பில் உங்களை நான் மிக மிகப் பாராட்டுகிறேன்" என்று அபாரமான சந்தோஷத்துடன் பலமாகப் புகழ்ந்தார்.

ஏகாம்பரம்:—சார்! எல்லாம் கடவுளின் செயல். எனக்கு அரசாங்கத்தார் உயரிய பதவியோ, பட்டமோ கொடுப்பதை எதிர் பார்த்து இந்தக் காரியத்தை நான் செய்யவில்லை. பொது ஜனங்களின் ஊழியன் நான். அவர்களின் நன்மைக்காகப் பாடு பட்டேன். அவர்களுக்கு அமைதியும் சந்தோஷமும் கிடைத்ததே போதுமானது—என்று பெருந்தன்மையுடன் கூறினார்.

அடுத்த நிமிடமே அங்குள்ள அத்தனை பேரும் சங்கிலியால் பிணைத்து லாரியில் ஏற்றப்பட்டனர். பொருள்களுடன் எல்லோரும் கிளம்பினார்கள். சேவகனின் சவத்தைக் கொண்டு வந்து போலீஸ் மரியாதையுடன் அடக்கம் செய்தார்கள். அவன் குடும்பத்திற்கு உபகாரம் செய்யும்படி கவர்ன்மெண்டிற்கு ஏகாம்பரமே எழுதினார்.

## 68

மாயக் கொள்ளை நடக்கும்போது ஊர் எவ்விதம் நடுங்கியதோ அதற்கு நேர்மாறாக இப்போது ஊரில் ஒரே குதூகலமும், பரபரப்பும், சந்தோஷமும் இன்ஸ்பெக்டரின் தீர வீரத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதுமாக ஆகிவிட்டது.

கிழவர் கைதியான பிறகு தன் குற்றம் பூராவும் அறிந்து விசனப்பட்டு, அழுது அழுது துடித்தார். மைதிலியைத் தான் நடத்தி அநியாயம் செய்ததெல்லாம் அப்போதுதான் அவருக்குக் கண்ணாடியின் முன்பு தெரிவதுபோல் தோன்றியது. அதனால் அவளைப் பார்க்கவும் அவர் விரும்பாது தன்னையே தான் நொந்து கொண்டு உருக வாரம்பித்தார். எங்கோ கேட்கும் அற்புதமான கானத்தின் மகிமையையும் பிறகே உணர்ந்தார். கையிலிருந்த பால் கீழே கொட்டிய பிறகு இனி ஜாக்கிரதையைப்பற்றி நினைத்து என்ன பலன் ?

"ஐயோ! மைதிலி என்ற தளிரைத் தீயில் போட்டுப் பொசுக்கி விட்டேனே ! அவள் வயதில் சிறுமியா யிருந்தபோதி லும் மகா உத்தமியாயும், அறிவாளியாயும், நெருப்பைப்போல் கற்பில் சிறந்தவளாயும் இருந்த மகிமை இப்பாவிக்கு அப்போது தெரியாமல் போய், அவளைப் பலவிதத்திலும் சந்தேகித்துச் செய் யாத இம்சையும் செய்து, படுத்தாத பாடும் படுத்திய சண்டாளன் அல்லவா நான் ? மூளையே கலங்கி விடும்படிச் சிதற வடித்த பாவம் என்னைவிட்டுப் போகுமா ?

மகா உத்தமியான வேணியின் வதை என்னைத் தாக்காம லிருக்குமா? என் காம புத்தி எனக்குத் தெரியாது மூர்த்திக்குத் துரோகம் செய்த சதி என்னைச் சுட்டுப் பொசுக்காமலிருக்குமா ? ஐயையோ! மகா மானியாயும், பாரத நாட்டு நாரீமணிகளின் சிறந்த ஒழுக்கத்தை உடையவளாயுமிருந்ததாலன்றோ மைதிலி இதுபரியந்தம் என்னைக் காட்டிக் கொடுக்காமலிருந்தாள். உப யோகமற்ற இப்பாவி, அவள் வாழ்க்கையைக் குலைக்கும் எமனாக ஏற்பட்டிருந்தும், புருஷன் என்ற பதத்திற்கு மதிப்பும் கௌரவமும் கொடுத்து, என்னைக் காட்டிக்கொடாதிருந்த மகிமையைச் சற்றும் அறியாது, 'அவள் உயிருடனிருந்தால் ஆபத்து வந்துவிடும். அவளையும் ஒழித்து விடவேண்டும்' என்றல்லவா மகா பாவியும், சண்டாளனுமான நான் நினைத்தேன்.

கொலைக்கும் அஞ்சாக் கொலை பாதகனைக் காத்த உத்தமி என்ற மகிமையைச் சிறிது அறிந்திருப்பின் இந்தக் கதி வந்திருக் குமா? ஐயோ! இனி அந்தப் பரதேசியின் கதி என்னவாகும்? நெருப்பை ஈ மொய்ப்பதாக எண்ணி, பலர் முன்பு தாறுமாறாகத் திட்டி விட்டேனே! வழியில் அவள் சென்ற கன்றுவியைக் கண்டால், தற்கொலை புரிந்துகொண்டுவிடுவாள் போலிருக்கிறதே. ஹா! இனிமேல் என்ன கதறி என்ன பயன்? அந்த உத்தமி இந்தப் பாவியைப்பற்றி என்ன நினைக்கிறளோ !

ஐயோ! இப்போதுதான் அவளுடைய தாயார், குழந்தை மைதிலியை, என் தாயின் கையில் கொடுத்துக் காப்பாற்று என்று

கூறிப் பிராணனை விட்டதுபோலிருக்கிறது. அந்தக் காலத்தின் வாக்கை அடியோடு மறந்து, அந்த உத்தமிக்குத் துரோகம் நினைத்த சண்டாளத்தனம் என்னைச் சும்மா விடுமா? இதுதான் அவைகளுக்குப் பலன். நம்பி ஒப்புவித்த குழந்தையை நாசம் செய்தால் அது தெய்வத்திற்குப் பொறுக்குமா?

ஐயோ! மகா தேசோத்தாரணஞ் செய்யும் புனிதமான காங்கிரஸ்காரர்களைத் தூஷித்தும் அவமதித்தும் பாழானேனே! அவர்களைப்போல் நான் கவுரவமான பேரால் சிறைக்கு வந்தேனா! திருடன், கொலைகாரன், மோசக்காரன் என்ற அவமான கவசத்திற்குள் அல்லவா நான் கிடக்கிறேன். ஐயோ! இந்த உணர்ச்சி சற்று முன்பு வரைக்கும் இல்லாது போய்விட்டதே!" என்று பல விதமாக எண்ணி மனங் குழம்பிப் போய்விட்டார்.

அதே சமயம் ஏகாம்பரம் அங்கு வந்தார். கிழவரின் முகத்தைப் பார்த்ததும் வெறுப்பும் அதிருப்தியுமே உண்டாகியது. "என்ன யோசிக்கிறீர் தாதா! மன்மதபாண சஞ்சீவியும் லேகியமும் ஒணுமா?" என்றார். கிழவரின் மானம் சிந்திப்போய்விட்டது. பரிதாபமாகக் கண்ணீர் பெருகியவாறு, "ஐயா! எரியிற அடுப்புலே எண்ணெயே வார்க்காதெங்கோ! எல்லா பாணமும் ஒன்னு சேந்துதான் என்னை வதைக்கறது. தயவு செய்து ஒரு காகிதம் பேனா வேணும். ஒரு கடுதாசி எழுதித் தரேன்; அதை மைதிலி கிட்டெ குடுத்துடுங்கோ" என்றார்.

உடனே காகிதம் பேனா கொடுக்கப்பட்டதும் விருவிருவென்று கிழவர் ஒரு கடிதம் எழுதி, ஏகாம்பரத்தினிடம் கொடுத்தார். ஏகாம்பரம் அதைப் பார்த்துவிட்டு மைதிலிக்கு அனுப்பிவிட்டார்.

## 69

“ஏற்கெனவே துர்ப்பிணி, மேலும் கர்ப்பிணி” என்பதுபோல் மைதிலிக்கு ஏற்கெனவே இருந்த கஷ்டத்திற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் கிழவரின் குட்டு வெளியாகிக் கைதியாயும் செய்துவிட்டதானது அவளால் தாங்கமுடியாத பெரும் வேதனையை யுண்டாக்கிவிட்டது. சாதுவின் உபதேசமாகிய அமிருத வசனங்களின் சக்திதான் அவளுடைய உயிரையாவது போக்காது நிலைக்கச்

செய்தது. சாதுவிடமிருந்து நேரே வீட்டிற்கு வந்து விழுந்தவள் கண்ணையே திறக்கவில்லை.

ஆயிரம் வாள் கொண்டு அவள் நெஞ்சை அறுக்கிறது. இச்சமயம் தன்னைத் துக்கம் விசாரிக்க வருவதுபோல் வந்துவிடும் மனிதர்களுக்குத் தான் என்ன பதில் சொல்வது என்ற விசனம் அவளைப் பெரிதும் பாதித்து வாட்டியது. கலங்கிப்போய் புரண்டு கொண்டே கருப்பனையும் காத்தாயியையும் கூப்பிட்டாள்.

மைதிலி :—கருப்பா! தாதா போகும்போது என்னவாவது சொன்னாரா!

கருப்பன் :—ஒன்னுமே இல்லேம்மா! இதோ பாருங்கோ! எதோ கடுதாசி எழுதினுங்க. அதுக்குள்ளற அந்தப் போலீஸ் காரன் வந்துட்டானுங்க—என்று கிழவர் எழுதிய கடிதத்தைக் கொணர்ந்து காட்டினன். மைதிலி அதைப் படித்ததும் முன்னிலும் அதிகரித்த விசனத்துடன் துடித்தாள். "ஹா! தீன சரண்யா! இந்த ஓர் பெரிய அபாண்டப் பழியிலிருந்தும், அவமானத்திலிருந்தும் காத்த உன் கருணையை என்னென்று சொல்வது? நிரபராதியான தலைவனையும் ஆசிரமத்தையும் இப் பாவியால் சிதற அடிக்காமல் காப்பாற்றினையே" என்று கடவுளை நோக்கித் தொழுதாள். "கருப்பா! நாம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி, தாதாவைப் பாத்துட்டு வரலாமா! எது எப்படி இருந்தாலும் பார்க்கவேண்டியது என் கடமை இல்லையா!" என்றாள்.

அதே சமயம் ஒரு போலீஸ் ஜவான் கடிதம் ஒன்றைக் கொணர்ந்து, "அம்மா! மைதிலியம்மாள் நீங்கதானே! வேதாசலம் இந்தக் கடிதத்தைக் குடுக்கச் சொன்னார்" என்று கொடுத்து விட்டுப் போய்விட்டான். மைதிலி பரபரப்புடன் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

"என் பிரிய மைதிலீ!

நான் மகாபாவி! கொடும் பாதகன்! சண்டாளன். இளந்தளிராகிய உன்னைத் தீயிலிட்டுப் பொசுக்கி விட்டேன். நான் துரோகம் செய்தவை எல்லாம் ஒன்று கூடி என்னைத் தாக்கிவிட்டது. உன்னுடைய அரிய புத்திமதிகளை ஏற்காமலும் உனது தூய உள்ளத்தை யறியாமலும் பாதகனுகிவிட்டேன். இனி சொல்வதில் உபயோகமில்லை. என் கர்மத்தை நான் அனுபவித்தே தீரவேண்டும். சத்தியம் உண்டு. கடவுள் ஒருவன் உண்மையான சட்டம் விதிக்கும் கர்த்தன். அவன்

சட்டம்தான் ஜெயிக்கும் என்பதை இப்போதே உணர்ந்தேன்.

மைதிலீ! நீ மகா பதிவிருதை; உத்தமி. பாரத நாட்டின் புகழுக்கு மெருகு கொடுக்க வந்த மாணிக்கம். ஆகையால் உன்னை இப்பாவி பார்க்க இனி சகியேன். இந்தக் கசடன் உன் முகத்தில் விழிக்க அருகதை இல்லை. ஆகையால், நீ இங்கு வராதே! என்னைப் பார்க்காதே! என்னைப்பற்றி இனி நீ நினைக்காதே. ஆனால் ஒன்று மட்டும் செய்ய வேண்டுகிறேன். இப்பாவியின் பாவங்களை க்ஷமிக்கும்படி, இறைவனைப் பிரார்த்தனை செய்து எனக்காக வேண்டு. அதொன்றுதான் எனக்காக நீ செய்ய வேண்டியது.

மைதிலீ! 'நான் வீட்டிற்கு வந்தால் வீடும் ஆசிரமமாகிவிடும்' என்று நீ கூறியதின் மகிமையை இப்போதுதான் என்னுள்ளம் அறிகிறது. உன்னிஷ்டப் படியே அந்த வீட்டை நீ ஆசிரமமாகச் செய்து தேச சேவையை மனப்பூர்வமாக நடத்து. பாவி நான் துவம்ஸம் செய்து மிஞ்சிய செல்வத்தைப் பரோபகாரத்திற்கே அர்ப்பணம் செய்துவிடு. இதுதான் என் வேண்டுகோள். இந்தப் புத்தி முன்பே இருந்தால், நானும் அந்த ஆநந்தமான கைங்கரியத்தைச் செய்து மகிழ்ந்து அதன் மூலம் கம்பீரமாகச் சிறைக்குச் சென்றிருப்பேன். மகா பாவியாகையால், எனக்கு இதுதான் கதி. என்னை மறந்துவிடு. இங்கு வராதே. கடவுள் உன்னைக் காப்பாராக. இனியாவது நீ மனச் சாந்தியுடன் இரு.

இங்ஙனம்,
வேதாசலம்"

இதைப் படித்த உடனே மைதிலியின் தலை சுழன்றது. உலகமே இருண்டு போய் அந்தகாரமாகி விட்டது. "ஹா! பகவானே! கடவுளே!" என்று ஒரு சத்தமிட்டாள். அதே சமயம் வாஸந்தி, ராஜு, தலைவன் மூவரும் வந்தார்கள். "மாமீ! மாமீ! தாதாவெ புடிச்சிண்டு போயிட்டாளாமே. தாதாவும் மாயக் கொள்ளெலெ சேந்துட்டாராமே. ஐயோ! என்ன செய்றது மாமீ!" என்று வாஸந்தி மைதிலியைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

தலைவன்:—(தலை குனிந்தபடியே கண்ணீர் பெருக) அம்மணீ! என்னை மன்னிக்கனும். இப்படியொரு சோதனை வந்தது பற்றி என் மனம் துடிக்கிறது. எல்லாம் வேளையின் கூத்து.

மைதிலி:—ஐயா! சோதனைக்கென்றே கடவுள் இந்தப் பாவியைப் பிறப்பித்தான். நீர் மகா உத்தமர். உம்மேல் என்ன குற்றம்? எல்லாம் என் தலைவிதியினால்தான்—என்றாள். அதற்கு மேல் அவளால் பேச முடியாமல் சோர்ந்து துவண்டு போய் விட்டாள்.

## 70

கமிஷனர் ஆபீஸிலேயே உட்கார்ந்திருந்த கிழங்களைக் கமிஷனரிடம் முறைப்படி கொண்டுபோய்ப் பரிசோதித்துவிட்டுப் பிறகு லாக்கப்பிற்கு அழைத்துச் சென்றார்கள். இவர்களை ஜாக்கிரதையாய்க் கொண்டு போய் லாக்கப்பில் போடும்படி ஏகாம்பரம், சப்-இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டுவிட்டுத் தன் ஆபீஸ் ரூமில் வேலை செய்து கொண்டிருந்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் இரு கிழங்களையும் கமிஷனர் ஆபீஸிலேயே பின்புறமாயுள்ள லாக்கப்பிற்குப் பாராவுடன் அழைத்துச் சென்றார். அம்மன் கோயிலுக்குச் செல்லும் ஆட்டுக்கிடாக்களைப் போல் இரு கிழங்களும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே சென்றார்கள்.

தீய வழியில் எத்தனை பலமாகக் கிழவரின் மூளை வேலை செய்ததோ அது இப்போது மட்டும் ஓய்வெடுத்துக் கொள்ளுமா? அவருடைய கண்கள் சப்-இன்ஸ்பெக்டரின்மீதே ஆழ்ந்திருந்தன. இன்ஸ்பெக்டர் பின்னால் வருகிறார். முன்னால் இரண்டு ஜெவான்கள் சென்று, பூட்டைத் திறந்து கொண்டிருந்தார்கள்.

யாரும் சற்றும் எதிர்பாராத விதமாய் வேதாசலம் முன் சென்றவர் திடீரென்று பின்னால் ஒரு சுழல் சுழன்று திரும்பி சப்-இன்ஸ்பெக்டரின் ஜேபியிலிருந்த ரிவால்வரை இமைப்பொழுதில் வெடுக்கென்று எடுத்துக்கொண்டு, அதைக் கையில் பிடித்தபடியே சப்-இன்ஸ்பெக்டரின் முன்பே நீட்டிப் பயமுறுத்தினார்.

சப்-இன்ஸ்பெக்ட்டரும், சேவகன்களும் நடு நடுங்கி பயந்து போய், குய்யோ முறையோ வென்று கத்திக் கொண்டே கிழ வரைப் பிடிக்க வருவதற்குள், கிழவர் துப்பாக்கியை அவர்கள் பக்கமாகவே காட்டிப் பயமுறுத்தியபடியே, இமை கொட்டும் நேரத்தில் தன் மார்புக்கு நேரே பிடித்து டடாரென்று சுட்டுக் கொண்டு, வெட்டிச் சாய்த்த மரம்போல் கீழே விழுந்துவிட்டார்.

விடிடிப் பொழுதில் நடந்துவிட்ட இந்த அதிபயங்கரமான சம்பவத்தினால் எல்லோரும் நடு நடுங்கிப் போய் விட்டார்கள். தன்னறையில் வேலை செய்து கொண்டிருந்த ஏகாம்பரம் டபீர் என்று துப்பாக்கி வெடி சத்தம் கேட்டதும், அலறி யடித்துக் கொண்டு எழுந்து, உள் பக்கம் ஓடி வந்து பார்த்தார். கிழவர் ரத்தத்தில் மிதக்கும் காக்ஷியும், மற்றவர்கள் நடுங்கும் பரிதாபமும் கண்டதும், அவர் கண்கள் சிவக்க "என்ன! என்ன?" என்று கேட்டார்.

சப்-இன்ஸ்பெக்டர் நடந்த விஷயங்களைக் கூறுவதற்குள் தவித்துக் கொண்டிருக்கும் வேதாசலம், "ஹா! கடவுளே! கடவுளே! என் பாபங்களை மன்னித்து விடு. மிஸ்டர் ஏகாம்பரம்! மூர்த்தி நிரபராதி. நானே என்னைக் கொன்று கொண்டேன். ஒருவர் மேலும் தப்பில்லை. ஈசா! நான் செய்த சரிதான்" என்று முணு முணுத்துக் கூறினார். பின்னும் சில நிமிடத்திற்கெல்லாம் கிழவர் மறு உலகத்திற்குப் போய்விட்டார். சப்-இன்ஸ்பெக்டரின் குலை நடுக்கலைக் கூற வேண்டுமா? அவர் அஜாக்கிரதையாய்த் துப்பாக்கியை வெளியில் தெரியும்படி வைத்திருந்தது குற்றமல்லவா என்று ஏகாம்பரம் அவரைத் திட்டினார். இச் செய்தி அந்தப் போலீஸ் ஸ்டேஷன் பூராவும் காற்றுபோல் பரவி விட்டது.

# 71

தற்சமயம் ஊரில் ஜனங்களுக்கு வேறு பேச்சே இல்லை. கல்யாண வீடு முதல் கச்சேரி வரையில் சகல இடங்களிலும் மாயக் கொள்ளைக் கூட்டம் பிடிபட்ட அதிசயமும், அவரவர்களின் சொத்துக்களைக் கூடுமான வரையில் திருப்பிக் கொடுத்துவிட்ட ஆச்சரியமும், எல்லாவற்றையும் விட தர்ஜி மூர்த்தியை நிரபராதி என்று கவர்ன்

மெண்டாரே தீர்ப்பளித்து விட்டுவிட்ட சந்தோஷமும், கிழவரின் முடிவும் பற்றித்தான் எப்போதும் பேச்சு.

மூர்த்தி நிரபராதி என்று கூறி விடுதலை செய்த சமயம் அவன் இருதயம் சந்தோஷத்தால் பொங்கியதைக் கூறவேண்டுமா! ஆசிரமத்து வாசிகளே அவனை வரவேற்று ஆசிரமத்திற்கே அழைத்துக்கொண்டு வந்தார்கள். மூர்த்தி, குழந்தைகளைச் சேர்த்தணைத்துக் கொண்டு ஆனந்தப் பரவசனாகிவிட்டான். குழந்தைகளும் தகப்பனாரைக் கட்டிக் கொண்டு இன்பக் கண்ணீர் பெருகியவாறு "அப்பா! அப்பா! இனிமே எங்களை விட்டுப் போகவே மாட்டாயே?" என்று கேட்டார்கள்.

மூர்த்தி:—கண்ணு! போகவேமாட்டேன்—என்று கூறிக் கொண்டே, தன் தையல் மெஷின் அங்கு வைத்திருப்பதைப் பார்த்து அதனிடம் ஓடினான். குழந்தையை விட அருமையாக எண்ணும் அந்த மெஷினைப் பார்த்த உடனே பழைய கதைகள் எல்லாம் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்துவிட்டன. அவன் கண்கள் நீரைச் சொறிந்தபடியே அதற்கு நேரே மாட்டப்பட்டிருந்த வேணியின் படத்தின்மீது பாய்ந்தன. அதிலேயே லயித்துப் போய் சற்று நேரம் நின்றான். பின்னர்தான், சிறிது தெளிவு கொண்டு குழந்தைகளைப் பார்த்தான்.

வாஸந்தி:—அப்பா! அம்மா படத்துக்குத் தினம் நாங்க ரெண்டு பேரும் நமஸ்காரம் பண்ரோம்பா! அப்பா! மாமியெ பாக்கலாம் வாப்பா!—என்றாள். மூர்த்தியும் மைதிலியைப் பார்க்க அவாக்கொண்டிருந்ததால், குழந்தைகள், தலைவன் எல்லோருடனும் மைதிலியின் வீட்டிற்குச் சென்றான்.

அப்போது மைதிலி, கருப்பன், காத்தாயி மூவரும் ராட்டினங்களில் நூல் நூற்றுக்கொண்டே இருந்த காட்சியைக் கண்டு மூர்த்தியின் உள்ளம் உருகியது. வாஸந்தி, "மாமீ! மாமீ! எங்கப்பாவே ஜெயில்லேந்து விட்டுட்டா மாமீ! இதோ ஒங்களே பாக்க வந்திருக்கா" என்று சந்தோஷத்துடன் கூறினாள்.

மைதிலியின் முன்பிருந்த தோற்றமும் இப்போதிருக்கும் தோற்றமும் கண்ட யாருடைய மனந்தான் கொதிக்காது. பற்றி எரியாது. பால்மணம் மாறாத பச்சைக் குழந்தை என்றால் அவளுக்கே தகும். அத்தகைய செல்வச் சிறுமி இந்தப் பாழும் கிழத்தின் வஞ்சனையால் விதவை என்ற கொடிய பயங்கரப் போர்வைக்குள் அமுங்கிப் போய் மங்களகரமற்ற தோற்றத்துடன் காட்சியளிப்பதை மூர்த்தியால் கண்டு சகிக்க முடியவில்லை.

சில விநாடிகள் அப்படியே தம்பித்துக் கண்ணீர் பெருக நின்றுவிட்டான். பேச முடியவில்லை. இதற்குள் மைதிலி ஒரு விதமான சோகச் சிரிப்பு சிரித்தபடியே "ஐயா! என் இத்தனை துக்கம். கள்ளனின் பெண்டாட்டி என்னிக்கும் கைம்பெண்தான். அதோடு கிழவனின் பெண்டாட்டியும் என்றும் கைம்பெண்தான்— இரண்டும் ஒன்னு சேர்ந்த இடத்திலே அதிசயமொன்றுமில்லையே! அண்ணு! உங்களுக்கு அவர் செய்த தீங்குகளுக்கெல்லாம் நான் மன்னிப்பு வேண்டுகிறேன். பொறுமைக்கே இருப்பிடமான நீங்கள் அவர் ஆத்மா சாந்தியடையும்படி மன்னித்து, இந்த ஏழைச் சகோதரிக்கு ஒரு ஆதரவாயிருந்து காப்பாத்தவேணும். வேணுவும், குழந்தைகளும் கூட இங்கேயே இருக்கும்படி சொல்லி விட்டேன். எல்லோரும் ஒன்றாக தேச சேவை செய்து காலத்தை ஓட்டுவோம். இதைத் தவிர இனி இன்பமளிக்கக்கூடியது என்ன இருக்கிறது?" என்றாள்.

மூர்த்தியின் துக்கம் வெகு நேரம் அடங்கமாட்டாது பொங்கி விம்மி வடிந்தது. "சகோதரி! நீ எங்களுக்காகச் செய்த பேருபகாரத்திற்கு நான் எந்த வழியில்தான் ருணத்தைத் தீர்ப்பேன்? நான் மன்னிப்பதாவது. அவரவர் செய்த பாபத்திற்குக் கடவுள் தண்டித்தார். எல்லாவற்றையும் அவனே மன்னிக்கும் கர்த்தனாயிருக்கையில் நாம் என்ன செய்யக் கிடக்கிறது? அவன் விட்ட வழியே செல்வோம்.

## 72

கார்த்திகைப் பண்டிகை. எங்கு பார்த்தாலும் குதூகலமான இன்பம் தாண்டவமாடுகிறது. பட்டாஸின் இனிய ஒலியும், பாணங்களின் இன்ப ஒளியும் பசங்களைக் கவர்ந்து ஆனந்தத்தை ஊட்டுகிறது. மேலே குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. மைதிலியின் வீடு ஓர் குட்டி ஆசிரமமாக மாறிவிட்டது. பல ராட்டினங்களின் இன்ப ஒலியானது மதுவையருந்திய பின் ரீங்காரம் செய்யும் வண்டின் இனிய நாதம்போல் சப்திக்கின்ற

சப்தத்தைக் கேட்டதே தன் துக்கமெல்லாம் மறந்து தன் வாழ்க்கையின் இன்ப நாதம் இதுதான் என்று ஆனந்தகரமாய் ஐக்யமாகி விட்டாள்.

கார்த்திகைப் பண்டிகை யன்று யாருடைய மனம் இன்ப மயமாயிருந்தபோதிலும் மைதிலியின் மனமும், மூர்த்தியின் மனமும், குழந்தைகளின் மனமும் சில வருடங்களுக்கு முன்பு நடந்த கார்த்திகையின் ஞாபகத்தை மறக்கமாட்டாது எண்ணிக் கண்ணீர் சிந்தும்படிச் செய்துவிட்டது. ஒரு பட்டாசுக்காக அன்று பதறித் தவித்த வாஸந்தியும், ராஜுவும் தங்கள் கையினால் இன்று சுதேசி மத்தாப்புக்களையும், வாணங்களையும் ஏழைக் குழந்தைகளுக்கு ஏராளமாக வாரிக் கொடுத்தார்கள். ஆனால் அந்த இறந்த காலத்தின் உணர்ச்சி அவர்களைப் பாதிக்காமலிருந்ததா? தன் தாயாரை நினைக்காமலிருக்க முடிந்ததா? தந்தை அடி பட்டதை எண்ணாமலிருக்கச் சாத்தியமா? அவைகளை நினைந்து உருகியபடியே இன்று ஆனந்தத்தையும் அனுபவித்தார்கள்.

மாலை நேரம் எங்கு பார்த்தாலும், தீபாலங்காரமும் கோலமும் பிரகாசிக்கின்றன. ஆசிரமத்திலிருந்து மைதிலி, வாஸந்தி, மீனாக்ஷி உள்பட எல்லோரும் வழக்கம்போல் மாலை ஊர்வலம் கிளம்பினார்கள். இனிமையான தேசிய கீதத்தை மைதிலி பாடவும் அவளுடன் எல்லோரும் பின் பாட்டுப் பாடவும் ஆனந்தமாக ஊர்வலம் செல்வதைக் கண்ட ஏகாம்பரமும், கற்பகமும் உள்ளம் பூரித்துப் பரவசமுற்றுத் தம்மை யறியாது, அவர்கள் வந்தே மாதரம் என்றபோது தாமும் 'வந்தேமாதரம்' என்று கூறினார்கள். 'மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே' என்ற கோஷம் வானையளாவியது.

"கடவுள் ஒருவனே காத்திடும் கர்த்தனும்
திடமுட னறிந் தவன் சேவடி போற்றிடில்
இடர்க்கடல் நீந்திடுவோம்." (தூய்மை)

அதே சமயம் முன்பு தெரிவித்த சந்நியாசி வழக்கம்போல் பாடும் கானத்தைக் கேட்டதும் மைதிலி முதலிய எல்லோரும் மெய்ம்மறந்து அப்படியே ஆனந்தப் பரவசம் அடைந்தவர்களாய் அசைவற்று நின்றுவிட்டார்கள். மைதிலி தன் உள்ளத்தை ஆதி முதல் கொள்ளை கொண்டு, அவளுடைய வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஓர் கருவிபோன்றமைந்த அதே நாதத்தினிடம்—கானத்தினிடம்—லயித்துக் காதல் கொண்டாள் என்றால் மிகை யாகாது. அத்தகைய கானத்தைக் கேட்டு இன்புறுவதற்கே அவளுடைய ஆத்மா அலைந்துகொண்டிருந்தது. மைதிலியின்

வாழ்நாளில் அவள் என்றாவது ஆனந்தம் என்ற ஒன்றை அனுபவித்திருக்கிறாள் என்றால், அது இந்த அற்புதமான சக்தி வாய்ந்த கானத்தை இன்றி வேறில்லை. துன்பத்தை யோட்டும் துணைக் கருவியாயும், இன்பத்தை யூட்டும் இணையிலா நேசனாயும், அறிவை விளக்கும் அரிய குருவாயும், அக்ஞான இருளைப் போக்கும் ஒளி யாயும் அமைந்திருந்த கானச் சுடரமுதை உண்பதற்கே சதா காலமும் காத்திருந்தாள். அனித்யமான பொருள்களின்மீதும், அல்ப சுகத்தை யளிக்கும் சிற்றின்பத்தின்மீதும் அவளது சிறிய மனம் நாடாதது வியப்பிலும் வியப்பல்லவா! அவளுடைய காதல் தெய்வீகமான காதல்; கரைகாணாத பேரின்பக் களஞ்சியத்தில் புகும் காதல்; பகவானை இடைவிடாது துதிக்கும் இன்பக் காதல்; கானாம்ருதத்தில் மிதக்கும் கன்னியக் காதலில் மூழ்கிப் பரவச மானாள். ஆதலால், அந்த கான மழையினால் மைதிலியின் வாடிப் போன பயிருக்கொப்பான மனம் துளிர்த்தது. ஆனந்தத்தால் அவ்விளந்தளிர் காற்றில் அசைவதுபோல் அவள் மனம் இன்ப எழுச்சியினால் ஆடியது. வானம் மப்பு மந்தாரமில்லாமல் துல்லிய மாக இருந்தது. பூர்ண சந்திரன் பிரம்மானந்தமான தோற்றத் துடன் கீழ்த் திசையில் நகை முகத்துடன் தோன்றினான்.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

18|022
183052

"ஜகன்மோகினி" பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

# வாழ்க்கையின் நாதம்

அல்லது

## வானக் குயில்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

41-ஆவது நாவல்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

[ரூ. 1—4.

**ஆம் !**

அவள் ஜாதியில் மானத்தை
விலைக்கு விற்றுப் பிழைக்கும்
கேவலமான

**தாசிப் பெண்**

தான்.

ஆனால்,........ஒழுக்
கத்திலோ குல
மகளை விடச்
சிறந்தவளே !

*

# ஜீவியச் சுழல் அல்லது சீரிய ஒழுக்கம்

*

அவன் செய்தது
என்னவோ குற்றந்
தான். அதற்குக் காரணம்,
........காட்டிய கருணையே அவ
னது குடும்பத்தைச் சிதைத்து
விட்டது.....ஆனால், கடவுளும்
கை விடுவாரா ?....மனித வாழ்க்கையில்
பயங்கரச் சுழல் காற்றைப் போன்று
நிகழக்கூடிய பலவித சம்பவங்கள் நிறைந்த

**இந்த அருமையான நாவல்**

**அடுத்த இதழில் ஆரம்பமாகும்.**

"JAGANMOHINI" Vol. XV No. 5 Regd. No. M. 2210




தலை வலிக்கு

**Headaches**

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.